உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்
திங்கள் வெளியீடு.

துணர் ௰உ. { தாது, பங்குனி } மலர் ௰உ

க. நன்னனும் பரணரும் 429

திரு. வித்துவான்.
ஒளவை. சு. துரைசாமி பிள்ளை அவர்கள்

உ. கல்லாட நூலாராய்ச்சி 441

திரு. E. R. நரசிம்மஐயங்கார் அவர்கள் B.A., B.L.,

௩. தில்லையுலா 447

திரு. L. உலகநாதபிள்ளை அவர்கள்

௪. கடிமர யானை 453

திரு. கு. நா. சுந்தரேசன் அவர்கள் B.A., (Hons.,)

௫. புத்தக மதிப்புரை 479

௬. தமிழ்ச்செய்திகள் 479

௭. நன்கொடைகள் 481

பொழிற்றொண்டர்

செந்தமிழ்ப்புரவலர்,

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பொழிற்றொண்டர்.

தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகம், கரந்தை.

உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௰உ | தாது, பங்குனி | மலர் ௰உ

உ

நன்னனும் பரணரும்

திரு. வித்துவான். ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், போர்டு உயர்தரக்கலாசாலை திருவத்திபுரம்.

(முற்றொடர்ச்சி துணர் 12. மலர் 11. பக்கம் 426.)

இனி, நன்னன் நகரங்களுள் ஒன்றான ஆஅய் பிரம்பு என்பது உணர்த்தும் பாட்டு.

"மேற்றுறைக் கொளீஇய கழாலிற் கீழ்த்துறை
யுகுவா ரருந்தப் பகுவா யாமை
கம்பு ளியவ ணுகை விசிபிணித்
தெண்கட் கிணையிற் பிறழு மூரன்
இடைநெடுந் தெருவிற் கதுமெனக் கண்டென்
பொற்றொடி முன்கை பற்றின னாக
வன்னா யென்றனெ னவன்கைவிட் டனனே
தொன்னசை சாலாமை நன்னன் பறம்பிற்

சிறுகா ரோடன் பயினொடு சேர்த்திய
கற்போ ளுவினே ளுகி மற்றது
செப்பலென் மன்னல் யாய்க்கே நற்றேர்க்
கடும்பகட் டியானைச் சோழர் மருகன்
நெடுங்கதிர் நெல்லின் வல்லங் கிழவோன்
நல்லடி யுள்ளா னுகவும் ஒன்னூர்
கதவ முயறலு முயல்ப அதாஅன்று
ஒலிபல் கூந்தல் நம்வயின் அருளாது
கொன்றன னுயினுங் கொலைப ழுதன்றே
அருவி யாம்பல் கலித்த முன்றுறை
நன்னன் ஆஅய் பிரம் பன்ன
மின்னீ ரோதி யென்னைநின் குறிப்பே" (அகம். 356)

என்பது.

இஃது இரந்து பின்னின்ற தலைமகற்குத் தோழி தலைமகளைக் குறைநயப்பக் கூறியது. அஃதாவது தோழியை மதியுடம் படுக்கு முகத்தால் தலைமகன் தலைமகள் கண்ணூற் காட்டிய தோழியை யணுகித் தன் குறையிரந்து நிற்ப, அவள் அவற்குக் குறைநேர்ந்து தலைமகளிடம் போந்து, "யான் தலைமகனைத் தெருவிடைக் கண்டேனுக, அவன் என் முன்கை பற்ற, யான் உடனே அன்னுய் என்று கூற, அவன் என் கைவிட்டுச் சென்றனன்; யானும் அதனை யாய்க்கு உணர்த்தினே னில்லை; அவன் பொருட்டு நின்குறிப்பு யாது? கூறுக." என அவள் குறைநயந்து உடம்படுமாறு சொல்லியது.

இதன்பொருள்:—மின்னல்போல ஒடுங்கிய குளிர்ந்த கூந்தலை யுடையாய்! மேலைத்துறைக்கட் கொள்ளப்பட்டனவற்றைக் கழுவுதலால், கீழைத்துறைக்கண் உதிர்ந்து தப்பி வருவனவற்றை யுண்டற்குத் திறந்த வாயை யுடைய யாமை, கம்புட்கோழி பாடுமகனுக விளங்க, வார்க்கட் டமைந்த தெளிந்த கண்ணை யுடைய கிணை யென்னும் இசைக்கருவி போலப் பிறழும் ஊரன், நெடிய தெருவினிடையில், என்னைக் கதுமெனக் கண்டு என் பொன்வளை யணிந்த முன்கையைப் பற்றினனுக, யான் அஞ்சி "அன்னுய்" எனக் கூவினேன்; அவன் உடனே

என்கையை விட்டனன்; பழைய விருப்ப மமையாமையினல், நன்னனது பறம்பின்கண் சிறிய பணியினல் அரக்கொடு கூட்டப்பட்டு அசையாது நிற்கும் கல்லைப்போல் அசையாத நாவினை யுடையேனைப், யாய்க்கும் செப்பா தொழிந்தேன்; ஆகவே, நல்ல தேரினையும் விரைந்த செலவினையுடைய யானைகளையு முடைய சோழர் குடியோனுகிய நீண்ட கதிர்களை யுடைய நெல்வயல் மிக்க "வல்லம்" என்னும் ஊருக்குரியோன் பிறர் தன் நல்ல அடியை அடைதலை நினையா னுயினும், பகைவர், அவனது அந் நெஞ்சத் திட்பத்தைக் கொள்ளாது அவன் கோபிக்கத்தகுவனவற்றை முயலுதலும் செய்வர்; அதனுல் அவன் அவர்களையே யன்றி, தழைத்த பலவாகிய கூந்தலையுடைய நம் போலும் மகளிர்மாட்டு மருள்செய்யாது அப்பகைவரோடு கொல்லுவா னுயினும் அது குற்றமாகா தன்றே. அருவியும் ஆம்பலும் தழைத்த முன்துறையினை யுடைய நன்னனது "ஆஅய் பிரம்பு" என்னும் நகரத்தை யொத்த நின் கருத்து யாது? கூறுக, என்பது.

கல், சாணை. அரக்கும் கல்லும் கூட்டிச்செய்த கல்லை வேறு பிரிக்கவும் அசைக்கவும் ஒண்ணுதென்று, "கற்போல் நாவினேன்" என்ருர். தன்னை யடைந்தார்க்கு ஆதரவு செய்யும் இயல்பிற் ருகலின், "நல்லடி" என்ருர்.

ஒன்னுர் அவன் வெறுப்பனவற்றைச் செய்து வெகுளுவித்தலால் அவன் அவரைச் செகுத்தல் குற்றமன் ருகலின், அவர் மகளிரைக் கோறலும் குற்றமன்ரு மென்பாள் "கொன்றனனுயினும் கொலைபழு தன்றே" என்ருள். உம்மை, கொன்றது, குற்றமே யென்பதுபட நின்றது. ஒன்னுரது நல்லடி யுள்ளானுகவும், அவர் உள்ளியதாகக் கருதி அவன் வெறுப்பனவற்றைச் செய்ய முயல்ப, அதனுல் அவன் சினந்து நம்போல் வாரிடத்தும் அருள்செய்யாது கோறல் குற்றமன்று என்றும்; நல்லடியுள்ளிய காலத்துந் தான் அருள் செய்தல் வேண்டு மென்பதை நினையானுகவும், பகைவர் அவன் அருள் செய்யத்தகுவனவற்றைச் செய்தலின்றி வெகுள்வனவற்றைச் செய்தலின், அவன் செய்யும் பெண்கொலை பழுதாகாதென்றுமாம்.

"சோழர் மருகன்" என்றதனால் குடிப்பெருமையையும் "நல்லடி யுள்ளான்" என்றதனால் அவனது மறமுடைமையும் நோக்காது, ஒன்னார் தகாதனவற்றைச் செய்ய முயல்வர்; அவன் அவற்றைக் காத்தற்பொருட்டு மிக்க செயலைச் செய்தல் குற்ற மாகா தென்பதாம்; எனவே, ஆடவர் தம் குடிப்பெருமையும் ஆண்மையும் காத்தற்பொருட்டு மகளிர்மாட்டும் அருள் செய் யாது மிக்க செயல் செய்வாராதலின், ஊரனும், தான் உள்ளியது பெறற் பொருட்டு மடலேறுதல், வரைபாய்தல் முதலிய மிக்க செயல்களையும் செய்வன்; அஃது அவற்குக்குற்றமாகா தாகலின், நாம் அவன் வேண்டும் குறைநேர்ந்து தடுத்தல் நம் கடன் என்பாள். "என்னை நின் குறிப்பு" என்றாள்.

"இடைநெடுந் தெருவிற் கதுமெனக் கண்டு, பொற்றொடி முன்கை பற்றினன்" என்றதனால் தலைவன் இரந்துபின்னின் றதும், "கற்போல் நாவினேனாகி மற்றது, செப்பலென் மன்னால் யாய்க்கே" என்றதனால் தான் அவற்குக் குறைநேர்ந்தமையும், "என்னை நின் குறிப்பே" என்றதனால் குறைநயக்குமாறும், கூறினாளாம். மெய்ப்பாடு: தன்கண் தோன்றிய இசைமை பொரு ளாகப் பிறந்த பெருமிதம். பயன்: தலைமகள் கேட்டுக் குறை நயப்பாளாவது.

இனி, நன்னன் தன் பாழிநகரத்தின்கட் பொருள் வைத்து வேளிர் பலர் காப்பச் செய்த செய்தி கூறும் பாட்டு,

நன்னன் உதியன் அருங்கடிப் பாழித்
தொன்முதிர் வேளிர் ஓம்பினர் வைத்த
பொன்னினும் அருமைநற் கறிந்து மன்னோட்
டுன்னல மாதோ வெனினுமஃ தொல்லாய்
தண்மழை தவழுந் தாழ்நீர் நனந்தலைக்
கடுங்காற் றெடுக்கு நெடும்பெருங் குன்றத்து
மாய விருளை மாய்கற் போல
மாய்கதில் வாழிய நெஞ்சே நாளும்
மெல்லியற் குறுமகள் நல்லகநசைஇ
யரவிரை தேரு மஞ்சுவரு சிறுநெறி
யிரவி னெய்தியும் பெறாஅ யருள்வாய்ப்

புல்லென் கண்ணை புலம்புகொண் டுலகத்
துள்ளோர்க் கெல்லாம் பெருநகை யாகக்
காமம் கைம்மிக வுறுதர
வானு வரும்படர் தலைத்தந் தோயே,'' (அகம். 258)

என்பது.

இஃது அல்லகுறிப்பட்டுப் பதிப்பெயர்ந்த தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

இதன்பொருள்:—நெஞ்சே! நன்னனுகிய உதியன் கிட்டுதற்கரிய காவலமைந்த பாழியென்னும் நகரின்கண் மிகவும் தொல்லோராகிய வேளிர் பலர் காவல்செய்ய வைத்த பொன்னினும் இவள் (தலைமகள்) பெறுதற் கரியளாதலைத் தெளிய அறிந்து வைத்தும், அவளை நெருங்கா தொழிகுவம் என்றாலும், அமையாது, வருத்துகின்றனை; மேலும், நாடோறும் மென்மையான இயல்பமைந்த சிறியவளுடைய நல்ல மனையை விரும்பி, பாம்புகள் தமக்குரிய இரையைத் தேடுகின்ற அச்சம் பொருந்திய இரவிற் சென்றும், அவளது கூட்டத்தைப் பெற்றாயில்லை; கண்டோர் நெஞ்சத்து இரக்கம் எய்துமாறு புல்லென்ற கண்ணையுடையையாய்த் தனிமையுற்று வருந்தி, உலகத்தி லுள்ளவர்களெல்லாரும் கண்டு நகைசெய்யும் வகையிற் காமம் பெருகி வருத்துதலால் அமையாத தடுத்தற்கரிய நோயை மிகத் தந்தனையாதலால், குளிர்ந்த மேகங்கள் தவழப் பெய்த மழைநீர் தாழ்ந்தோட, அதனிடையில், பெருங்காற் றெழுந்து சவட்டும் நெடிய மலையின் மிகக் கருத்த இருள் நிறைந்த முழைஞ்சினுள் விழுந்து மறைகின்ற கற்போல நீயும் விழுந்து மாய்வாயாக, என்பது.

நெஞ்சே, உதியன் பாழியின்கண் வைத்த பொன்னினும் அருமை நன்கறிந்து வைத்தும், எனினும், ஒல்லாயாய், நல்லகம் நசைஇ, நெறியை இரவின் எய்தியும், பெறுதொழிந்தனை; மேலும், புல்லென் கண்ணையாய்ப் புலம்புகொண்டு நகையாக, காமம் கைம்மிக வுறுதர, தலைத்தந்தோய் ஆதலால் மாய்கல் போல மாய்வாயாக என வினையும்.

'நன்னன் உதியன் அருங்கடிப் பாழித், தொன்முதிர் வேளிர் ஓம்பினர் வைத்த பொன்னினும் அருமை'' என்றதனல்

தலைமகளைச் சென்று தலைப்பெயற்குக் கூடாவகை அமைந்துள்ள காவலும், அதனைக் கடத்தற் கருமையும் விளக்கிய வாறும். கூட்டம் இடையீடுபட்டு எய்தப் பெறாமையின், "அன்னோள் துன்னலம்" என்றும், பின்னர்த் தலைமகளால் அவ் விடையீ டெய்தாமை யுணர்ந்தவிடத்து, அவ் வொழுக்கத்தி னிடத்தே உள்ளம் சேறலின், "அஃதொல்லாய், நாளும்..........இரவின் எய்தியும்" என்றும், வினைமேற் கொண்டவன், இடையி லுளவாம் இடையீடுகளால் மனமுடைந்து புலம்புகொண்டுமடங்குவானுயின், அறிவும் மானமு மிலன்என உலகத்தார் இகழுதலின் "உலகத் துள்ளோர்க் கெல்லாம் பெருநகையாக" என்றும், கூறினன்.

"அரவிரை தேரு மஞ்சுவரு சிறுநெறி, இரவின் எய்தியும்" என்றதனுல், முற்போந்து அவளது துன்னற் கருமையுணர்ந்தது பகற்குறி யிடையீடுபட்ட தென்பதாம். எனவே, தலைமகன் இரவினும் பகலினும் குறிவழி யொழுகி இடையீடுபட்டுக் கூட்டம் பெறாமையின், கலக்கமுற்றுப் புலம்புகொண்டு நெஞ்சினை நெருங்கிக் கூறுவா னுயினன் எனவறிக.

"இன்பத்தை வெறுத்தல்" (தொல். பொ. 270) என்ற மெய்ப்பாட்டியற் சூத்திரத்து "நலத்தக நாடிற் கலக்கமு மதுவே" என்றதுகொண்டு, "இவ்வாறு கூறவே இச்சூத்திரத்துளோதிய இருபது மெய்ப்பாடுந் தலைமகற்கும் ஏற்றவகையானே கொள்ளப்படும்" என்பவாகலின், இதன்கண் "அரவிரைதேரும் அஞ்சுவரு சிறுநெறி" யென்றது ஏதமாய்தல். "புல்லென் கண்ணை புலம்புகொண்டு" என்றது ஆங்கு நெஞ்சழிதல். "உலகத்து, உள்ளோர்க் கெல்லாம் பெருநகை யாகக், காமம்கைம்மிக வுறுதர, ஆனு வரும்படர் தலைத் தந்தோய்" என்றது உடம்பு நனி சுருங்கலும் கலக்கமுமாம். வினை மெய்ப்பாடு: அழுகையைச் சார்ந்த இளிவரல் பயன்: நெஞ்சொடு நோதல்.

பின்வரும் பாட்டும் இப்பொருட்டே யாகும்.

அருந்தெறல் மரபின் கடவுள் காப்பப்
பெருந்தேன் றூங்கு நாடுகா ணனந்தலை

பணங்குடை வரைப்பிற் பாழி யாங்கண்
வேண்முது மாக்கள் வியனகர்க் கரந்த
வருங்கல வெறுக்கையி னரியோள் பண்புநினைந்து
வருந்தின மாதோ வெனினுமஃ தொல்லாய்
இரும்பனைத் தொடுத்த பலரா டூச
லூர்ந்திழி கயிற்றிற் செலவர வருந்தி
நெடுநெறிக் குதிரைக் கூர்வே லஞ்சி
கடுமுனை யலைத்த கொடுவி லாடவர்
ஆகொள் பூசலிற் பாடுசிறந் தெறியும்
பெருந்துடி வள்பின் வீங்குபு நெகிழா
மேய்மணி யிழந்த பாம்பின் நீநனி
தேம்பினை வாழியென் னெஞ்சே வேந்தர்
கொண்டணி யெயிலிற் காப்புச் சிறந்
தீண்டருங் குரையள்நம் மணங்கி யோளே.

இதுவுமது. (அகம். 372.)

உரை:—என் நெஞ்சே! தடுத்தற்கரிய தெறுதற் றொழிலைச் செய்யும் முறைமையினை யுடைய தெய்வம் நின்று காத்தலைச் செய்ய, பெரிய தேனடைகள் தூங்கும் கொண்கானநாட்டின் இடையிலிருக்கும் தெய்வ மகளிரையுடைய மலையைச் சார்ந்த பாழியென்னும் நகரின்கண் வேளிராகிய முதுகுடி மக்கள் அகன்ற பேரகத்தி னிடத்தே மறைந்துவைத்தோம்பிய அரிய வாகிய பொன்னும் மணியும் போலப் பெறுதற் கரிய தலைமகளது அருமைப் பண்பினை நினைத்து, "இனி இவளைப் பெறேம்" என வெண்ணி வருத்தமுறுவே மாயினேம் என்று கூறியும். நீ அதுகேட் டமையா யாயினை; பெரிய மூங்கிலிற் பிணித்த பலராடும் ஊசலினது ஏறியும் இறங்கியும் வரும் கயிற்றைப் போல வறிதே செல்லுதல் வருதல் என்ற தொழில்கட் கஞ்சி, நீண்ட வழியினையுடைய குதிரைமலைக்கு உரியவனான கூரிய வேலேந்திய அஞ்சி யென்பவனது அச்சம் பொருந்திய போர்முனைக்கண் நின்று பகைவரை வருத்திய வளைந்த வில்லேந்திய வீரர் பகைப் புலத்து ஆவினைக் கொள்ளும் போரின்கண் ஒலிமிக்கு எறியப் படும் பெரிய துடியின் வாரைப்போல வருத்தத்தால் விம்மி

நெகிழ்ந்து, மேய்தல் காரணமாக வுமிழ்ந்த மணியை யிழந்து தடுமாறும் பாம்பைப் போல நீ மிகவும் கலக்க முற்று வருந்தினை. நம்மை வருத்திய அவள், வேந்தர் பகைப்புலத்தே வென்று கவர்ந்து வலியாகிய அழகு செய்யப்பட்ட மதிலைப் போலக் காவல் மிக்குற்று நெருங்குதற்கு அரியளாயினுள், காண், என்பது.

என் நெஞ்சே! பாழியின்கட் கரந்த வெறுக்கையின் அரியோளின் பண்பு நினைந்து நாம் வருந்தின மெனினும், அஃதொல்லாயாய், ஊசற்கயிற்றைப் போலச் செலவுவரவுகட்கு அஞ்சி, வருந்தி, வீங்கி நெகிழ்ந்து, மேய்மணி யிழந்த நாகம் போல நீ தேம்பினை; நம் அணங்கியோள், காப்புச் சிறத்தலால் ஈண்டுதற்கரியளாயினுள் என வியையும்.

பகைவரிடம் கவர்ந்து கொள்ளப்பட்ட எயில், சீர்கேடுற்ற பகுதி முற்றும் சீர்செய்யப்பட்டு அப் பகைவர் மீட்டும் நெருங்கிக் கைப்பற்ருவகைக் காவலமைக்கப்படுதல் போலத் தலைவியொடு நாம் ஒழுகும் ஒழுக்கம், பெற்ருேரால் உணரப்பட்டு, அவள் வெளிப்போதா வகை இற்செறிக்கப் பட்டாளாதலின் இனி நாம் அணுகும் பான்மை யிலளாயினுள் என்றும், மேலே "அருங்கல வெறுக்கையி னரியோள்" என்றதற் கேற்ப, "மேய்மணி யிழந்த" என்றும், மேய்மணி பிழந்த நாகம் பின்னர் உய்வழியின்றி இறத்தல் போலத் தலைமகளைக் கூடுதலை யிழந்த நீ தேம்பிப் பிறிதுபடுவா யென இரங்குவான், "வாழி" என்றும் கூறினன். துடியின் வள்பு அடிக்கப்படுங்கால் விம்முதலும், அஃதொழிந்த விடத்து நெகிழ்தலும் போல நெஞ்சம் கூட்டம் எய்தியவழிக் களிப்பால் விம்மியும், எய்தாவழிக் கலங்கி நெகிழ்ந்தும் நிற்றலின், பெருந்துடி வள்பின் "வீங்குபு நெகிழா" என்ருர்.

குறிஞ்சித் திணைக்கேற்ப அதன் புறனுய வெட்சி கூறுவார், "கொடுவில் ஆடவர், ஆகொள்பூசல்" கூறினர்.

பலராடும் ஊசல் இரும்பணைக்கண் தொடுக்கப்பட்ட தென்றமையான், தலைமகன் நெஞ்சம் தலைமகள் தோளிற் பிணிக்கப்பட்ட தென ஒரு நயந்தோன்றியவாறு காண்க. இங்ஙனம், தலைமகனைப் பிணித்தற்குத் தோள் இடமாதல், "பிடிபயின்று

தரூஉம் பெருங்களிறு போலத், தோள்கந் தாகக் கூந்தலிற் பிணித்து'' (அகம். 276) என வருதல் காண்க. மெய்ப்பாடும் பயனு மவை.

இனி, நன்னன் பிண்டன் முதலிய வேந்தர் பலரை வென்று அவர் மகளிர்தம் கூந்தலாற் கயிறு திரித்து, அவர்தம் அருங்கலம் கொணர்ந்த செய்தியைக் கூறும் பாட்டு,

''தடந்தாள் தாழைக் குடம்பை நோனுத்
தண்டலை கமழும் வண்டுபடு நாற்றத்
திருள்புரை கூந்தற் பொங்குதுக ளாடி
யுருள்பொலி போல வெம்முனை வருந்த
வணித்தகை யல்லது பிணித்தல் தேற்றாப்
பெருந்தோட் செல்வத் திவளினு மெல்லா
வெற்பெரி தளித்தனை நீயே பொற்புடை
விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்
வேந்த ரோட்டிய வேந்துவேல் நன்னன்
கூந்தல் முரற்சியிற் கொடிதே
மறப்பன்மா தோநின் விறற்றகை மையே,'' (நற். 270)

என்பது. இது தோழி வாயில்நேர்கின்றாள் தலைமகனை நெருங்கிச் சொல்லி வாயில் எதிர்கொண்டது, உடனிலைக் கிளவி வகையால்.

உரை:—*எட! நீ பிரிந்தக்கால் பெரிய தூற்றினையுடைய தாழைப் புதலினாலே கட்டப்பட்ட எமது சிறிய வீட்டின் கண்ணே பொறுக்க முடியாதபடி, சோலையிலுள்ள புன்னை முதலாகியவற்றின் மலரை முடித்தலால் வண்டுகள் மொய்க்கின்ற நறுநாற்றத்தையுடைய இருளொத்த கூந்தலில் மிக்க துகள்படிய நிலத்திலேபுரண்டு சாய்ந்தாற்போலாக எம்முன்னேவருந்து தலையுடையளாகி அழகழிந்த தன்மை யொன்றல்லாது நின்னை வசமாக்குதலைத் தெளியாத பெரியதோளேயுடைய செல்வமகளாகிய இவளினுங் காட்டில் என்னைப்பெரிதும் நீ அன்புசெய் தொழுகாநின்றனை: அங்ஙனமாயினும் நீ பிரிந்து சென்றதானது அழகு பொருந்திய விரிந்த பிடரிமயிர் பொலிவுற்ற விரைந்த செலவினை

* இவ்வுரை, நற்றிணைக்குத் திரு. அ. நாராயணசாமிஐயர் உரை,

யுடைய நல்ல குதிரைப் படைகளையுடைய பகையரசராகிய பிண்டன் முதலானோரைப் போரிலே தோற்றோடச் செய்த ஏந்திய வேற்படையையுடைய நன்னன், தான் அப்பகையரசரின் உரிமை மகளிரைப் பற்றிவந்து அவர் தலையை மழித்து அக் கூந்தலைக் கயிறாகத் திரித்து, அக்கயிற்றாலே அப்பகைவரின் யானையைப் பிணித்த கொடுமையினும், கொடியதாய் இரா நின்றது. ஆதலால் நினது வலிய தகுதிப் பாட்டினை யான் மறந்தே விடுகின்றேன், காண், என்பது.

தலைவியுடன் எதிர்கொண்டமையால் உடனிலைக் கிளவி யாயிற்று. இவளெனச் சுட்டிநின்றமையின், உடனின்றமை தெளிக.

புலவிதீர்க்கும் வாயிலாக யான் அமையாதவழி என்னுட னும் பேசாது வெறுத்தல் செய்வாய், அமைந்தமையால் என் னுடன் பேசுவாயாயினை என்று கொண்டு, "எற்பெரி தளித்தனை" என்றாள். மெய்ப்பாடு: உவகையைச் சார்ந்த பெருமிதம். பயன்: வாயில் நேர்தல்.

இனி, நன்னன் பெண்கொலை புரிந்த செய்தி கூறும் பாட்டு.

"மண்ணிய சென்ற வொண்ணுத லரிவை
புனல்தரு பசுங்காய் தின்றதன் றப்பற்
கொன்பதிற் றொன்பது களிற்றொ டவணிறை
பொன்செய் பாவை கொடுப்பவுங் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரயத்துச் செலீஇயரோ அன்னை
ஒருநாள், நகைமுக விருந்தினன் வந்தெனப்
பகைமுக வூரிற் றுஞ்சலோ விலளே." (குறு. 292)

என்பது.

இது, தோழி இரவுக்குறிக்கண் சிறைப்புறமாகக் காப்பு மிகுதி கூறியது.

உரை:—*குளித்தற்குச் சென்ற அரிவை, புனல்கொணர்ந்த பிழைக்காக அவள்தமர் எண்பத்தொருகளிற்றோடு அவள் நிறை

*பண்டிதர். T. S. அரங்கசாமி ஐயங்கார் உரை.

யுள்ள பொற்பாவையைக் கொடுப்பவும் கொள்ளானாய், அப் பெண்ணைக் கொலைபுரிந்திட்ட நன்னனைப் போல நீக்காத நிரயத்துப் போவாளாக அன்னை; ஒருநாள் விருந்தினனாக வந்த தனால் பகையை முகத்திற்காட்டும் துயிலுதல் இலளாயினாள் ஆகலான். எ-று.

பறித்திலள்; பழமுமன்று; அவனதேயென்னும் துணிவும் இல்லை; இவள் எடாதொழியின் அவற்கே கிடைத்தலும் ஐயமுடையது எனுமிவை புலப்பட "புனல்தரு பசுங்காய்" எனப் பட்டது. மெய்ப்பாடு: அச்சத்தைச் சார்ந்த பெருமிதம். பயன்: இடையூறுணர்த்தல்.

இனி, நன்னன் தன் படைத்தலைவன் மிஞிலியென்பானது தந்தை அன்னியென்பவனைப் போரில் வென்று அவன் கண்களைக் களைந்தமை காரணமாக, கோசர்களைவென்று அவர் தம் நாட்டின்கண் துரத்தும் செய்தி கூறும்பாட்டு,

"மகிழ்நன் மார்பே வெய்யை யால்நீ
அழியல் வாழி தோழி நன்னன்
நறுமா கொன்று நாட்டிற் போக்கிய
ஒன்று மொழிக் கோசர் போல
வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமாற் சிறிதே,"

என்பது. (குறுந். 73.)

இது பகற்குறி மறுத்து, இரவுக்குறி நேர்ந்து அதனையும் மறுத்தமைபடத் தலைமகட்குத் தோழி சொல்லியது.

உரை:—தோழி! நீ மகிழ்நனது மார்பையே விரும்புவாயாயினையன்றி, குறிவழி யொழுகுதலால் இவ்வொழுக்கம் பிறரால் உணரப்படின் வரும் ஏதத்தினை யாராயாமையின், யான் அவனை இருவகைக் குறியும் மறுத்தலின், இனிக் கூடுங்கொலோவென மனம் அழுங்காதொழிக; நன்னன் என்பான், வாய்மை பொருந்திய கோசர்களின் காவல் மரமாகிய நறிய மாமரத்தினைத்தடிந்து அவர் தாம் முன்னர் இருந்து போந்த நாட்டினுட் புறந் தந்துபோகப் பொருதவழி, அக்கோசர்க்கு வேண்டியிருந்த வன்கண்மை மிக்க சூழ்ச்சியிற் சிறிதேனும் நமக்கும் வேண்டுமாகலான். என்பது.

வெய்யை, வெம்மையென்னும் உரிச்சொல்லடியாகப்பிறந்த குறிப்பு முற்று. "வெம்மை வேண்டல்" என்ப (தொல். சொல். உரி. 26). ஒன்றுமொழி—மனத்தொடு பொருந்திய மாறுபடாத சொல். நன்னன், போக்கிய, கோசர் என வியையும். நன்னனுற் றுரைத்தப்பட்ட கோசர் என்பதாம். கோசர் ஒன்று மொழி யுடையரென்பது, "ஒன்று மொழிக் கோசர்க்கொன்று முரண் போகிய, கடுந்தேர்த் திதியன்" (அகம். 196) என்பதனானு முணர்க. "இளம்பல் கோசர் விளங்குபடைகன்மார், இகலின ரெறிந்த வகையில் முருக்கின், பெருமரக் கம்பம்போலப், பொரு நர்க்குலையா நின்வலன்" (புறம். 169) என்பதனுல் இவர் படைப் பயிற்சி மிகுதியு முடையர் என்பது பெறுதும்.

இக்கோசர் தாமும் தம் நன்மொழியாலும், படைப் பயிற்சி யாலும் தம்மை வியந்து, வன்கண்மையும் சூழ்ச்சியும் இலரா யொழிய, நன்னன் அவை யிரண்டுமுடையனுய் இவரைவென்ரு னெனவே, நீயும்மகிழ்நன் மார்பே விரும்பி, அவன் பிரிவாற்ருது கலங்கி, இவ்வொழுக்கத்தா னுளதாகும் ஏதத்தை நினையாதிருந் தனையென்றும், அக்கோசர் தாமும் வன்கட்சூட்சியுடையராயின் நன்னன் வென்றியெய்துதலாகாதவாறுபோல, நாமும் வன்கண் மையும் சூழ்ச்சியும் கொள்ளின், ஒழுக்கத்தாலுளவாகும் ஏதங் களை வாராமற் காக்கலாம் என்றும், இவ்வாறு நம்நலங்கருதியே செய்ய வேண்டுதலின், நீ அழுங்குதல் கூடாது என்பாள், "அழியல்" என்றும் கூறினள்.

பகற்குறி வருவானை, அதுமறுத்து இரவுக்குறி நேர்தும், அவ்வழி வருவானை மறுத்தும் அலைத்தற்கு வேண்டப்படுதலின் "வன்கண்மையும்," காப்பு மிகுதி கூறியும், படைத்துமொழியா னும் பிறவாற்ருனும் தலைமகனைத் தெருட்டி வரைவுகடாதலின், "சூழ்ச்சியும்", இவை தாமும் மிக்க வழித் தலைமகன் ஆற்ருனுய்ப் பிறிது படுவனாகலின், "வேண்டுமால் சிறிதே" என்றும், இவற் றைக் கையாளுமிடத்து அவனாற்ருமைகண்டு தலைமகளு மாற் ருளாவள்கொல் என்னுமெண்ணத்தினளாகலின், "அழியல்" என்றதனேடொழியாது "வாழி" என்றும் கூறினள்.

"மகிழ்நன் மார்பே வெய்யை" என்றது கைம்மிகலும் நினைதலுமாம். "அழியல்" என்றது நடுக்கம். இம்மெய்ப்பாடுகள், "இவையுமுளவே அவையலங்கடையே" (தொல். பொ. 260) என வந்தனவாம். ஏனை மெய்ப்பாடு இளிவரலைச் சார்ந்த பெருமிதம். பயன்: தலைமகளை யாற்றுவித்தல்.

இனி, இதற்கு "நன்னனது சிறந்த யானையைக் கொன்று அவனது நாட்டிற் போகவிட்ட வாய்மைபொருந்திய சொல்லினையுடைய கோசர்" * என்று இதற்கு இதன் உரைகாரர் கூறுகின்றார். நறுமா என்றற்கு யானையெனப் பொருள் கோடலாகாமையாலும், கொன்ற யானையை மீட்டும் நாட்டின்கட்போக்குதல் ஆகாமையாலும், கோசர்கள் இன்னோரன்ன செயல் செய்துளரெனற்கு வேறு சான்றின்மையாலும், யாம் கூறியபொருளையேற்றலாற் கவிப்பொருட் சிறத்தலாலும் அஃது உரையன்மையறிக.

இதுகாறும் கூறியவாற்றால், நன்னது வரலாறும், அதுபற்றி ஆசிரியர் பரணர் பாட்டுக்களின் நலனும் பெறப்பட்டனவாம்.

கல்லாட நூலாராய்ச்சி

திருவாளர். E. R. நரசிம்மஐயங்கார் அவர்கள் B.A., B.L., சேலம்.

(முற்றொடர்ச்சி துணர் 12, மலர் 11, பக்கம் 402)

அரிகேசரி என்னும் பெயர் போற்றித் திருவகவலில் "கலையால் அரிகேசரியாப் போற்றி" என்ற அடியில் வந்துளது. உரையாசிரியர் அரிகேசரி யூரிலமர்ந்தவனே என்று பொருளுரைத்திருப்பது பொருத்தமானதே. மன்னர்களின் பெயரால் ஊர், நாடு, கோயில், தெய்வம் முதலிய வழங்கப்படும் வழக்கை சாசனங்களாலறியலாம். பாண்டியன் நெடுமாறன் என்னும் கூன்பாண்டியன் அரிகேசரி என்னும் பட்டம் வகித்தான் என்பதை

* குறுந்தொகை மூலமும் உரையும். பக்கம் 87.

முன் கூறினும். பாண்டியக்கோவையில் இப்பட்டம் கூறப்பட்டுளது. இப்பாண்டியன் 7ம் நூற்றாண்டிறுதியிலிருந்தவனாவன். எனவே இம்மன்னன் பெயரிடப்பட்ட ஊரை மணிவாசகனார் கூறியுள்ளாராதலின் அடிகள் 7ம் நூற்றாண்டிற்கு முற்பட்டவ ராகார் என்பது ஒருதலை.

மலைநாடெனப்படுவது மேற்கடலை யடுத்துள்ள நாடாகும். சங்ககாலம் முதல் இப்பகுதி சேரநாடென்றே வழங்கி வந்தது. சங்க விலக்கியம் சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களினும் சேரநாடென்றே வழங்கப்பட்டுளது. மலையமானாடு என்று ஒரு பெயர் நடுநாட்டிற்குச் சங்க காலத்தில் வழங்கப்பட்ட பெயரை சங்க விலக்கியங்களில் காணலாம். தேவாரங்களிலும் மலைநாடெனும் பெயர் காணவரிதாகும் கி. பி. 7, 8-ம் நூற்றுண்டுவரையில் சேரநாட்டிற்கு இப்பெயர் பயிலப்படவில்லை எனலாம். பிற்காலத்திலக்கியங்களில் சேக்கிழார்புராணத்தும், கார்மண்டலசதகத்திலும், கம்ப இராமாயாணத்திலும் காணப்படும். எனவே இப்பெயர் 8-ம் நூற்றாண்டிற்குப் பின்னரும், 10, 11-ம் நூற்றாண்டிற்கு முன்னரும் சேரநாட்டைக் குறிப்பதற்கெழுந்ததென்னலாம். மணிவாசகனாரும் 8-ம் நூற்றாண்டிற்கு முற்பட்டவராகார் எனக்கொள்ள வேண்டியிருத்தல் காண்க.

கல்லால் மதில் ஆக்கப்படும் வழக்கு தேவார காலத்தில் தோன்றியதென்னலாம். பல்லவ அரசர்கள் முதன்முதல் கற்பாறைகளைக் குடைந்து கோயில்கட்டினரென்று பல்லவ சரித்திரத்தா லறியலாம். இதன் பின்னர் கல்லின்மேல் கல்பொருத்திக்கட்டும் புதுமையைக் கண்டு பிடித்தாரென்னலாம். அல்லது வடதேசத்தாரிடம் கற்றனர் எனலாம். இவ்வழக்கு தென்னாட்டில் 6-ம் நூற்றாண்டில் பரவவில்லையென்பதற்கு

"சுடுமண் நெடுமதில் சுற்றிப் பிரியார்
கடுமுரண் எஃகங் கழிய"

என்னும் புறப்பொருள் வெண்பாமாலைச் செய்யுள் சான்றாகும் புறப்பொருண் வெண்பாமாலை 6-ம் நூற்றாண்டினதென அறிஞர் கூறுவர். மறைமலையடிகளும் இக்கருத்துடையவர் எனவே 6ம்

நூற்றுண்டில் மதில்கள் சுடுமண்ணுல் (செங்கல்) கட்டபட்டுவந்த தென்பது தெளிவாம். கல்லால் மதில் கட்டப்பட்ட புதுமையை "கல்லார்மதில் சூழ்ந்த காழிநகரே" (பண்முறை 81: 1) என்று திருஞானசம்பந்தரும், கல்லாருமதிள் சூழ்ந்த தண் கருவிலி (பண. 183: 8) என்று நாவுக்கரையரும் யருளியுள்ளார். 7, 8-ம் நூற்றுண்டில் இப்புதிய வழக்குப் பரவத் தொடங்கியதுபோலும். திருவாசகம் 310ம் செய்யுளில் "கல்பாமதிற் றில்லைச் சிற்றம்பலம்" என்று அடிகள் கல்லால்மதில் செய்விக்கப்பட்டிருப்பதைக் குறித்துள்ளதைக் காண்க. இவ்வகைச் சான்றுனும் மணிவாசகனர் 7, 8ம் நூற்றுண்டிற்கு முற்பட்டவராகாரென்க.

தமிழ் எழுத்துக்களின்வரலாறும் மணிவாசகனர்காலத்தை யுணர்த்துவதைக் கூறுவாம்.

அகர வடிவெழுத்திலிருந்து பிறவடிவெழுத்துக்கள் பிறந்தனவென்று காலஞ்சென்ற மாணிக்கநாயக்கர் ஓர் கொள்கையை நாட்டினர். இவ்வறிஞர் அகரவெழுத்தை பலதிறப்பட எழுதி அதனைச் சிதைத்து, சிதைந்த உறுப்புக்களை யமைத்து மற்றை எழுத்துக்கள் பெறப்படுவதை காட்டினரென்று கேள்வியாலுணரலாகும். இப்புதுமையைப் பின்பற்றி பல்வேறுரை பகருவாருளர். நாயக்கர் அவர்களின் திறம் வியக்கற்பாலது .இஃது .அவர் அறிவின் கூர்மையை விளக்குமென்பதற்கையமில்லை. இது தமிழ்மொழி யாராய்ச்சிக்கும் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் எத்துணையும் பயன்படாதாயினும் அகரவொலியே மற்றையெழுத்தொலிகளுக்குப் பிறப்பிடமாகுமென்னும் தத்துவக் கொள்கையை சித்திரத்திலமைத்துக் காட்டப்படும் ஓர் விசித்திரமாகும் என்னலாம். நாயக்கரவர்கள் தத்துவக் கொள்கையைக் கூறவில்லைபோலும். அவர் ஒலியைக் குறிக்கும் தத்துவக் கொள்கையில் வடிவைப் புகுத்துக் கூறியிருப்பாராயின் அது வழுவுடையதென்க. அன்றியும் அவர் கருத்து எழுத்துக்களின் வரலாற்றெடும் முரண்படும்.

எழுத்துக்கள் ஆதியில் வட்ட வடிவத்தையுடையதாயிருந்த காரணத்தான் வட்டெழுத்து என்னும் பெயர் பெற்றன. இவ்வட்டெழுத்துக்களால் வடமொழி பயிலுவதற்கு சில குறைபா

டிருந்தமையால் பல்லவ மன்னர்கள் காலத்து ஓர் புதிய வடிவுடைய எழுத்துக்கள் உண்டாக்கப்பட்டன. இவ்வெழுத்துக்கள் கிரந்த எழுத்து என்றும், பல்லவ மன்னர் காலத்து இயற்றப்பட்டதால் பல்லவ கிரந்தமென்றும் வழங்கத் தொடங்கின. இவ்வெழுத்துக்கள் தமிழ் நாட்டிலும் 8ம் நூற்றாண்டில் வழங்கப்பட்டனவென்பதற்கு வேள்விக்குடி சாசனம் ஓர் சான்றாகும். இச்சாசனத்தில் தமிழ்ப்பகுதி வட்டெழுத்திலும் வடமொழிப் பகுதி கிரந்தத்திலும் உள்ளதென எழுத்துப் பரிசோதகர் கூறுவர். கிரந்தத்தில் எண் குறிகளுக்கு உயிர்மெய் எழுத்துக்களே பயிலப்பட்டதென்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர். 9-ம் நூற்றாண்டில் தமிழும் கிரந்த எழுத்துக்களால் எழுதப்பட்டதென்பர். ஆயினும் பாண்டி நாட்டில் 12-ம் நூற்றாண்டுவரையில் வட்டெழுத்துக்களே பயிலப்பட்டு வந்தன. சோழ நாட்டிலும் கொங்கு நாட்டிலும் 10, 11-ம் நூற்றாண்டில் வட்டெழுத்தால் எழுதும் வழக்கொழிந்தனவென்று சாசனங்களால் அறியலாகும். இதுபோது வழங்கும் தமிழ் எண் குறிகள் முன்காலத்தில் வழங்கப்பட்ட கிரந்த எழுத்துக்களாகும்.

மணிவாசகனார் கிரந்த எழுத்துக்கள் பரவினகாலத்து இருந்தவராவர் என்பது

“பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை
எட்டோடு இரண்டு மறியே னையே”

என்னும் அடிகளால் உணரலாகும். இங்கு எட்டு என்பது அகர எழுத்தால் குறிக்கப்படும், இரண்டு என்பது உகரத்தால் குறிக்கப்படும். மணிவாசகனார் ஓர் உத்திபடவும் அ, உ அறியாத அறிவிலி என்னும் பழமொழியையும், அகர உகரத்தால் உணர்த்தப்படும் தத்துவக் கொள்கையையும் உணர்த்த எட்டொடிரண்டு என்னும் ஓர் அழகுருபடவருளிச் செய்தார். எனவே அகர, உகரங்களால் எண் குறிக்கும் வழக்கு கிரந்த வழக்கிற்கே உரியதாகும். மணிவாசகனாரும் கிரந்த எழுத்துக்கள் தென்னாட்டில் பரவிய காலத்திருந்தவராவர். கிரந்த எழுத்துக்கள் தொண்டை நாட்டில் 7, 8ம் நூற்றாண்டில் ஆக்கப்பட்டனவாகும். இவ்வகையானும் மணிவாசகனார் 8-ம் நூற்றாண்டிற்கு முற்பட்டவராகாரெனலாம்.

இனி மணிவாசகனூர் காலம் சில இலக்கணக் குறிப்புக் களாலும் அறியலாகுமென்பதைக் காட்டுவாம்.

நான், நீர், நீங்கள் என்னும் தன்மைப் பெயர்களும், உம், உன், என்னும் முன்னிலைப் பகுதிகளும், உங்கள் என்னும் முன் னிலைப் பெயரும், புதியன புகுதலில் அடங்கும். இப்பெயர்களும் பகுதிகளும் சங்க காலத்தில் பயிலப்படவில்லை. இவை சிலப் பதிகாரத்தில் அருகிக் காணப்படும். பெருவழக்கன்று. இவை தேவாரங்களில் பெருவழக்கினவாய் பயிலப்பட்டுள்ளன. திரு வாசகத்திலும் இவை பெருவழக்கினவாய்க் காணப்படும்.

தன்மை யொருமை வினை முற்று சங்ககாலத்திலும் பின் னரும் அல் ஈற்றால் உணர்த்தப் பட்டது. அல் ஈறு அன்னுகப் பெறுமே என்பது அவிநயச்சூத்திரம். அன்ஈறு திருக்குறளில் ஒன்றிரண்டிடத்து காணப்படும்; தேவார காலங்களில் அல்லீ றொழிந்ததென்னலாம். திருவாசகத்திலும் அவ்வாறே. தன்மைப் பன்மையில் ஓம் ஈறு புதியதாகும். இது தேவார காலத்தில் பெருவழக்காயிற்று. "நாமார்க்கும் குடியல்லோம், நமனையஞ் சோம்" என்னும் அடி நாவுக்கரையர் பாசுரத்திலும் திருவாச கத்திலும் காணப்படும். சங்ககாலத்திலும் சிலப்பதிக்கார காலத்திலும் இவ்வழக்கு இன்றென்க. இங்கு ஆர்க்கும் என்பது யார்க்கும் என்பதன் திரிபாகும்; இவ்வழக்கும் பிற்காலத்ததே.

சங்ககாலத்தில் தன்மை வினைகளே பிறவினைப் பொருளும் உணர்த்தின. தேவாரகாலம்முதல் பிறவினைகளை உணர்த்த வி. பி விகுதிகள் பயிலத் தொடங்கின. இவ்வழக்கு திருவாசகத் திலும்,

"சிரிப்பிப்பன் சீறும் பிழைப்பை" என்றும்

"விரிப்பிப்பன் என்னை விடுதிகண்டாய்" என்றும் வந்துள்ள அடிகளில் காண்க. இங்கு, விடுதிகண்டாய் என்றது பிற்கால வழக்குக் கொத்தது.

சங்ககாலத்தில் செய்யும் என்னும் முற்றே எதிர் காலத் தையும் நிகழ்காலத்தையும் உணர்த்திற்று; பிற்காலத்தார்தெரித் துக் கூறல் வேண்டி கிறு கின்று, ஆநின்று என்னும் இடை நிலை களைவழங்கத் தொடங்கினர். இவைகளில் சில தனிவினை முற்றுக் களாக, கிற்பனே, கிற்றியே என்றும் வழங்கத் தொடங்கின. இவ்வழக்குகள் தேவாரங்களினும் திருவாசகத்திலும் காணப் படும்.

புரை என்று உயர்வைக் குறிக்கும் பதம் பிற்காலத்து இழிவைக் குறிப்பதுபோல், எய்த்தல் என்பதும் இளைத்தல் என்னும் பொருளில்,

"எய்ப்பிடத் திலுன்னை சிக்கெனப் பிடித்தேன்"
"எய்ப்பினில் வைப்பு," என்றும்
"ஏழ்தலம் உருவஇடந்து பின்எய்த்து" என்றும்

வந்துள்ளனவற்றைக் காண்க. "வையெற்று எய்யாமகளிர்" என்பது பரிபாடல் 9: 33ல் யெய்யா என்பது அறியாமை என்று வந்துளது காண்க.

வடமொழிப் புணர்ச்சிகளை மணிவாசகனார் தமிழில் புகுத்தினார் என்னலாம். வடமொழியில் பயிலும் தீர்க்கசந்தி, குணசந்தி முதலிய பதங்களை திருவாசகத்தில் பயிலப்பட்டிருப்பதுபோல் தேவாரங்களிலும் காண்பதரிது. "கதியது பரமா அதிசயமாக" எனவும் "பரானுபவங்கள்" "இவானுபவங்கள்" "உத்தோன்மத்தன்" "மத்தோன் மத்தன்" என்பன திருவாசகத்தில் வந்துள்ளவையாகும். திரு. மறைமலையடிகள் வடமொழிச் சொற்களை மணிவாசகனார் பயின்றதன் காரணம் புறச்சமயத்தோரை வெல்வதற்கு என்று கூறியுள்ளார். ஒவ்வொரு புலவர் காலத்து வழக்கை அப் புலவர் நூல்கள் காட்டும் என்பதே ஆராய்ச்சிக்குப் பொருந்தியதாகும். திரு. மறைமலையடிகள் கூறியுள்ள காரணம் போலிக்காரணமாகத் தோன்றும். முன் கூறிய தொடர்களால் எவ்வாறு மணிவாசகனார் வெற்றியுற நினைந்தாரென்பது எம்போலிய சிற்றறிவினோர்க்குப் புலப்படவில்லை.

இது காறுங் கூறியவாற்றால் திருவிளையாடல்கள் காலந்தோறும் தோன்றின வென்பதும், தேவாரம் பாடிய நாயனார் காலங்களுக்குப் பிற்பட்ட காலங்களில் நிகழ்ந்த சில திருவிளையாடல்களும் உளவென்பதும், இவைகளனைத்தும் வடமொழி நூல்களில் முதன் முதல் தொகுக்கப் பட்டனவென்பதும் வடமொழிநூல் 11ம் நூற்றூண்டிற்கு முற்பட்டதாகாதென்பதும், கல்லாடம் வடமொழி நூலுக்குப் பிற்பட்ட தென்பதும் கூறினும். கல்லாடநூலின் காலமும் 11ம் நூற்றூண்டிற்கு முற்பட்டதாகா தென்பது தெளிவாம். இந்நூல் 6ம் நூற்றூண்டின தென்பது பொருந்தாது. மணிவாசகனார் காலமும் 9ம் நூற்றூண்டிற்கு முற்பட்டதாகா தெனவும் பெறப்படும்.

தில்லையுலா

தமிழ்ப்பேராசிரியர். திரு. L. உலகநாத பிள்ளையவர்கள்.

தில்லையுலா என்பது தில்லையின்கண் திருக்கோயில் கொண்டெழுந்தருளிய நடராசப்பெருமான்மீது இயற்றப்பெற்ற உலாவாகும். தில்லை, சிதம்பரம் எனப்படும்.

உலா என்பது, தமிழ்மொழிக்குரிய தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களில் ஒன்று. பேதை, பெதும்பை, மங்கை மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்ற எழுவகைப் பருவ மகளிரும் தன்னைக் கண்டு காதல் கூரும்படி ஒருதலைவன் வீதியிற் பவனி போந்தான் என்று அவனுடைய அருஞ்செயல்களைப் பலவகையாகப் புலப்படுத்திக் கலிவெண்பாவாற் பாடப்படுவது. இங்கே வீதி என்றது உருத்திர கணிகையர்க்குரிய வீதியினை.

உலா (பன்னிருபாட்டியல்.)

"பாட்டுடைத் தலைவ னுலாப்புற வியற்கையு
மொத்த காமத் தினையாள் வேட்கையுங்
கலியொலி தழுவிய வெள்ளடி யியலாற்
றிரிபின்றி நடப்பது கலிவெண் பாட்டே"

"பேதை முதலா வெழுவகை மகளிர்கண்
டோங்கிய வகைநிலைக் குரியா னொருவனைக்
காதல்செய் தலின்வருங் கலிவெண் பாட்டே"

"குடிநெறி மாபு கொளல்கொடை விடிய
னன்னீ ராட னல்லணி யணித
ருன்னக ரெதிர்கொள னன்னெடு வீதியின்
மதகளி றூர்தன் முதனிலை யாகும்"

"எழு நிலையு மியம்புங் காலை
பேதை பெதும்பை மங்கை மடந்தை
யரிவை தெரிவை பேரிளம் பெண்ணெனப்
பாற்படு மகளிர் பருவத் தாத
னேக்கி யுரைப்பது நுண்ணியோர் கடனே"

இவ்வுலா முழுவதும் கிடைத்திலது. ஒப்புநோக்குதற்கு வேறு பிரதியும் கிடைக்கவில்லை. கையிலுள்ள ஏடும் செல்லுக்கு இரையாய்க் கழிவதன் முன் உள்ளதை உள்ளவாறு வெளியிடல் நலனென ஆன்றோர் கூறிய ஆணையை மேற்கொண்டு இவ்வுலாவை வெளியிடத் துணிந்தேன். இந்நூலாசிரியர் இன்னரென விளங்கவில்லை. இது காறும் அச்சிடப்படாத புத்தகங்களுள் இது ஒன்று.

நூல்.

க. சீர்கொண்ட செல்வச் சிவகாம சுந்தரிபைந்
தார்கொண்ட கொன்றைநறுந் தாழ்குழலாள்—ஏர்கொண்ட

உ. வேத மொருநான்கும் விண்முதலைந் தும்படைத்த
பேதை யறம்வளர்க்கும் பேராட்டி—ஆதிநாள்

ங. தானே செழுங்கனகத் தாளம் பிடித்தருளித்
தானே யறிந்துதொழுந் தாண்டவத்தை—ஞானவிழிக்

ச. கொண்டு தொழுது குலமுனிவ ரோரிருவர்
தண்டுளப மாயனுடன் தாமரையோன்—எண்டிசையிற்

ரு. பல்லுயிருங் காணப் படிமேல் நடித்தருளென்
றெல்லையுள்ள காலமெல்லா மேத்துதலுந்—தில்லைவனத்

சு. தானந்த னூபுரநின் றூர்க்கு மொலிகேட்டு
வானின் றிமையோர்கள் வந்திறைஞ்சி—நான்மறையில்

எ. ஆய்ந்த பொருளான அஞ்செழுத்தைச் செங்கனகப்
பூந்தகடு தோறும் புறத்தெழுதி—மேய்ந்து

அ. திசைவிளங்கு காமத் திருவம் பலத்தே
யிசைவிளங்க நின்றாடு மீசன்—இசைவேங்கைப்

கூ. பாத முடைய முனியும் பயோததியும்
ஆதிமுதல் பெற்ற வருள்முனியும்—மாதிரஞ்சூழ்

க0. சம்புகுல மீது தபோபலத்தால் வந்தெழுந்த
பைம்பொன் மவுலி பதஞ்சலியும்—அம்பலத்து

கக. ளாடிச் சிவந்த அரவிந்தம் சென்னியின்மேல்
சூடிப் பலநாள் துதித்ததற்பின்—நாடியிகல்

கஉ. ஏனந் துடர்ந்தோ ரிவுளியுடன் றில்லைநறுங்
கானம் புகுந்த கழல்வேந்தன்—ஏனமுடன்

கங. தன்னுடல் வெம்பரியுந் தானும் தடம்படிந்து
பொன்னனை தில்லைப் புலியூரில்—முன்னாளில்

கச. தேமருவு கஞ்சத் திசைமுகன்வேள் விக்ககன்ற
கோமுனிவர் தம்மைக் கொணருதலும்—மாமறையோர்

கரு. முந்நூாகழற் றொல்வேள்வி மூவா யிரவரிலோ
ரந்தணரைக் காணு தவர்வருந்த—இந்துநுதல்

கசு. மாறொருபங் காள் மணிமன்றுள் நின்றாடித்
தாறொருபங் காளச் சமைந்தருளிக்—கோனெதிரே

கஎ. முன்னின்ற தென்றில்லை மூவாயிரத் தொருவ
னென்னுந் திருநாம மெய்தினேன்—பொன்னின்

கஅ. செருந்தியடை கரையுஞ் செங்கழுநீர்க் காவும்
மருங்குவளர் தேமா வனமும்—நெருங்குகுலைத்

ககூ. தேனீ ரிளந்தெங்குஞ் செஞ்சாலியுங் கரும்பும்
பானீர்மை யோதிமமும் பைங்குயிலும்—தூயநிலா

உ0. வாவி நிரையும் மதுவிரியும் செண்பகப்பூங்
காவும் மதுகரமுங் காவெரியும்—தேவர்

உக. தருநாடு பூகநறுந் தண்டலையு முள்ள
திருநாடன் தேவாதி தேவன்—பரசமய

உஉ. வாதுவென்ற பிள்ளைக்கும் வஞ்சனைகள் வென்றார்க்குந்
தூதுசென்று வாவென்ற தோழனுக்குங்—கோதிலியாந்

உங. தென்னற்கு வாய்த்த திருவாத வூரற்கு
முன்னைப் புரமூன்றில் மூவர்க்கும்—பொன்னுலகில்

உச. இந்திராதி யர்க்கு மிருவர்க்கு நான்மறைக்குஞ்
சந்திராதி யர்க்குந் தம்பிரான்—அந்தண்

உரு. புரிநூல் மறைவேள்வி பூசுரருந் தெய்வத்
திருநீறும் பார்மேற் சிறக்கத்—தருமவிடை

உசு. சோதிக் கொடியுயர்த்த சோளேசன் முன்கண்ட
ஆதித் திருநாளி லங்கொருநாள்—மாதிரஞ்சூழ்

உஎ. மண்வளரு முந்தி மரகதமே கண்துயிலக்
கண்வளரு மாயிரவர் காப்பணிந்த—கண்ணி

உஅ. விரவு சடைமேற் பிறைகண்டு மீதே
பிரவு தவழ்கின்ற தென்ன—கரையலைக்குங்

உகூ. கங்கா சலமவுலி கொண்டதற்பின் காளிந்தி
பொங்கார மேனியெல்லாம் போர்த்ததென்ன—நங்கோன்

ஙo. அருதுகின்ற மென்கொடிபோ லன்புகொழுந் தோடி
யிருமருங்குந் தாவுன தென்ன—புரிகுழலாள்

௩௧. மாலை பெறவிட்ட வண்டுடனே போய்ப்படிந்த
நீல விழியின் நெருக்கென்னக்—கோல

௩௨. மதகரிவெண் கோட்டு மதமருவி வெம்போ
ரிகல்வரையின் மேல்போர்த்த தென்ன—வகிலமுஞ்

௩௩. செம்பற்ம ராகத் திருமேனி மீதாடி
அம்பற்ம ராக மணிந்திலங்க—உம்பருடன்

௩௪. சோதிமணி மன்றுள் சூழவலம் வந்து
வீதி சிறந்து மீண்டருளிப்—போதுந்

௩௫. திருப்பவனி சேவித்துச் செங்கனகத் திண்டே
ரருக்கன் விடைகொண் டகல—விருப்புடனே

௩௬. செங்கட் கடவுட் டிருவுலாச் சேவிப்பத்
துங்கக் கடன்மீது தோன்றுதலும்—எங்கு

௩௭. மெடுத்தன பூக மிருமருங்கின் முத்தின்
தொடுத்தனைய வெண்பாளை தூங்கக்—கொடிக்குலவு

௩௮. மேகா டவிநிரையும் விண்போர்த்த பூந்துகிலும்
ஆகாச கங்கையுட னுற்றலைப்ப—போகாத

௩௯. செம்பொன் மணிநெடுந் தீபந் திசாமுகமும்
உம்ப ருலகு மொளிபரப்பச்—செம்பவளச்

௪௦. செய்ய திருமேனி யெங்குஞ் செழுங்கனகத்
துய்ய புனைகலன்கள் சோதியெழ—மையளகத்

௪௧. தொண்டைப் பெருங்கனிவாய்ச் சூடகக்கை பாடகக்கால்
ஒண்டொடியுந் தாமு முலாவியபின்—பண்டுரைத்த

௪௨. ஆதி சிவாகமத்தின் பண்பே யளவில்லாத்
தீதற்ற பல்பூசை சேவித்து—தாதுற்ற

௪௩. வேரிமல ரம்பும் மீனப்புலன் கொடியும்
சாரன் மலையிற் றமிழளைந்த—தேரும்

௪௪. மதுரந் தருஞ்சிலையுங் கொண்டு மதவே
ளெதிரம் பலத்தேவந் தேறிச்—சதுமுகனும்

௪௫. மண்ணோரும் நாரணனும் வாசவனும் பூசுரரும்
விண்ணோர் குழாமும் விடைகொள்ளக்—கண்ணுதலோன்

௪௬. பாரறிந்த வம்பலமேற் பள்ளி யறையாக
ஆரணங்கள் நான்கு மடிவருடத்—தாரணியில்

௪௭. எவ்வுயிரு மீன்ற விடப்பாக முந்தாமும்
செவ்வி மலரணைமேற் சேர்ந்தருளி—வெவ்விவிற்

௪அ. றேரணியும் வெம்மையுஞ் செவ்வேள் தடங்கொடியும்
வாரணமு நின்றூர்க்கும் வைகறையில்—ஓரிருவர்

௪௯. இன்னிசை பாட விமையோர் குழாம்வந்து
பொன்னெடு முன்றிற் புறத்தார்ப்பக்—கின்னரரும்

௫௦. வித்யாதரரும் பணிந்தேத்த வெள்வளைசேர்
கைத்தா மரையுங் கரதலமும்—மொய்த்தமலர்க்

௫௧. கொன்றை நறுந்தாருங் குவளைப் பசுந்தாரும்
ஒன்றுபடப் பள்ளி யுணர்ந்ததற்பின்—மன்றுடையான்

௫௨. செய்ய விழியுந் திருவனந்தல் வாழ்முகமும்
துய்ய பிறைகலந்த சூழ்சடையும்—தையலாள்

௫௩. கொங்கை தழுவக் குழையுந் திருமார்புஞ்
செங்கை வளையழுந்துந் திண்டோளுந்—தங்கள்

௫௪. உரிய திருத்தோழன்கண் டுண்மகிழ்ந்து போற்றி
அருணமணிப் பைம்பூ ணணிப்ப—பெருவிசும்பிற்

௫௫. றன்மா முடிகடந்த சோதிச் சுடர்முடிமேற்
பொன்மா மகுடம் புனைந்தருளி—பன்மணிசேர்

௫௬. கோல மகரக் குழையுந் திருத்தோடுங்
காலை யிரவிக் கதிரெறிப்ப—நீலநிற

௫௭. மாதா வணிந்த மரகதப்பூங் கண்டத்துப்
போதாமல் மாணிக்கப் பூணணிந்து—சோதி

௫அ. வரைவளைத்த தோள்வரைமேல் வாழ்வயிர நீலத்
தரளத்தின் கேயூரஞ் சாத்தி—விரைகமழும்

௫௯. செங்குவளை மாலை திருக்கொன்றை நாண்மாலை
பொங்குசீர் மாலை புனைந்தருளிக்—குங்குமத்தின்

௬௦. சேறளைந்த மார்பிற் றிருமேனித் தாழ்வடமும்
நீறணிந்த முந்நூலு நின்றிலங்கப்—பேறுடையாய்

௬௧. மைச்செங் கழுநீரும் வண்டுகிலும் மாணிக்கக்
கச்சுந் திருமருங்கிற் கட்டுணப்—பச்சைநிறப்

௬௨. பைந்தாம மாலும் பழமறையுங் காணாத
செந்தா மரைமேற் சிலம்பலம்ப—அந்தமிலான்

௬௩. வேத வழக்குக்கு மேருவின்மேற் செம்பொன்னுஞ்
சோதி நவமணியுந் தோன்றுதலும்—ஆதிரையான்

௬௪. தெண்டிரைநஞ் சுண்டிருண்ட தெய்வத் திருவுடம்பை
யொண்டடிதன் பார்வையா லொப்பித்துத்—தண்டுழாய்

௬௫. மாலைத் திகிரி மரகதமே கந்துயில
நீலக் கடலளித்த நேரியனும்—மேலொருநாள்

௬௬. தந்தையிரு தாள்துணித்த சைவத் தவமுனியும்
வந்து சரண மலர்போற்ற—அந்தரத்தோர்

௬௭. பூமாரி சிந்தப் புலவுத் தசைநீத்துப்
பாமாலை கொண்டு பணிந்தேத்தத்—தாம

௬௮. முளரிநறுந் தொல்மறையோர் மூவா யிரவர்
புளகமுடன் பாதம் புனைய—இளமான்

௬௯. திருக்கை வலத்தொருவன் தேவர்குழாஞ் சூழும்
நெருக்கைத் திருப்பிரம்பால் நீக்கப்—பொருப்பிலுற்ற

௭௦. தொல்லை முனிவந்து தோத்திரங்கள் பாடல்செய்ய
வெல்லையிலாப் பூதகண மேத்தெடுப்ப—வல்லியுடன்

௭௧. செம்பொன் மணிமுத்தின் திருவாடு தண்டேறி
யம்பல முன்றி லமைந்தருளிப்—பைம்பொற்

௭௨. றிருநடஞ்செய் காலுந் திருச்சிலம்புங் காண
வருவார் பிறப்பறுக்கும் வாசல்—அருவினையை

௭௩. மாற்றுவார் நந்தி வரசரண புண்டரிகம்
போற்றுவார் வந்துதொழும் பொன்வாசல்—பாற்கடலில்

௭௪. அல்லி முளரியில்வந் தாதரித் தார்க்கருளும்
வல்லி திருவாசல் வந்தணுகிச்—சொல்லரிய

௭௫. வேதத் துரகத்து விண்டோய் துவசத்துத்
தாதுற்ற செங்கழுநீர்த் தாமத்துச்—சோதிமணிச்

௭௬. செக்கரத்துச் செம்பொற் சதுமுகத்து மாணிக்கச்
செக்கர்ப் பருதி சிகரத்து—மிக்கதொரு

௭௭. மேரு கிரியை மிசைக்கொண்டு கொன்றைநறும்
தாரி லொளியுஞ் சதுமறையும்—நாரதனும்

௭௮. தும்புருவு மாடல்செய்யத் துந்துமியுங் கின்னரமும்
பைம்பொன் முழவும் பகீரதியும்—அம்பிகைத்

௭௯. தாளமும் செம்பொற் சிலம்பும் தமருகமும்
காளமும் சங்கும் கலந்தார்ப்ப—மூளுநிலா

௮௦. வண்ணப் பிறையின் கொழுந்து வகிர்ந்தென்ன
வெண்ணித் திலக்கவிகை மீதிலங்க—வொண்ணுதலாள்

௮௧. செங்கைக் கவரித் திரளும் திருமுடிமேற்
கங்கைப் பிறையுங் கலந்தார்ப்பத்—துங்க

(தொடரும்.)

கடிமர யானை

(ஓர் சிறு நாடகம்.)

திரு. து. நா. சுந்தரேசன் அவர்கள், B.A., (Hons.,)
கணக்காயர், பரகம்பூரம், கஞ்சம்.

[ஒரு பூஞ்சோலை. கை நிறைய பலவகைக் கொடிகள் நிலம் தோய்ந்து பின் தொடர வேரி வருகிறாள்.]

வேரி:—வாழி என் நினைவு! மறந்திலேன் இவ்விடத்தன, அனைத்தையும் அறுத்துச் செல்வல் (அருகு ஒரு மரத்தேறிய கொடிகளை இழுத்துப் பரிகிறாள்) கொம்பும் ஏறுவென்....ஆ! என்னைத் தகையவோ வருகின்றான் **தில்லன்** அங்கே? வருக, வேணவா நல்க வலிப்பேன்,[1] அவனையே ஏறச்செய்வேன் (கீழ் படுத்துறங்கிய **துண்ணி** விழித்துக் கொள்கிறான், அவள் கீழெறிந்த கொடிகள் தன்மேல் வீழ்ந்ததால் போலும்)

துண்ணி:—கால் கீழூர்கின்றன, நினைக்கொள் அம்ம, கண்கள் மேலூர்வ வேணும்! (எழுகிறான்)

வேரி:—(திடுக்கிட்டு) பொறுத்தி, முதிய, பொறுத்திடு. நறை[2] நாடிவந்தேன்! (சேண்நோக்கி) வந்த தில்லன் மீண்டனன் ஏனோ? உதவுதியோ பெரும?

துண்ணி:—யான் கள் அருந்துவேனல்லன். **வெளிமான்** விளிந்தது கட்கடுவால் என்று இப் பேரூர் அலரறைந்ததே அன்று—மறந்தனையோ?

வேரி:—நீர்நறை[3] அன்று, கொடிநறை[4] தேடிவந்தேன்—காண்டி அங்கே! (சிரிக்கிறாள்)

துண்ணி:—(மேல்நோக்கி) ஆம்......மணமாலை தொடுத்தற்கோ? (சிரிக்கிறான்) சில தருகின்றேன்.

வேரி:—(புன்னகைத்து) மணமலர்கள் தொடுக்கவே; மணமிலிமலர் யான் வேண்டலன், யாண்டும். பொருதுமாய்வோர் ....வஞ்சியும் நொச்சியும், காந்தையோ உழிஞையோ[5] மணமிலி மலட்டு மலரவற்றைப் புனைந்து, சாய்க களனிலே!

---

1. "வேண்டுமளவு பூக்கள் கொய்து தருமாறு அவனை வற்புறுத்துவேன்."
2. நறைக் கொடி. 3. நீர்நறை—கள். 4. நறைக் கொடி. 5 "இவை போன்ற நறும்மணமிலா மலர்கள் யான் விரும்பேன்."

துண்ணி:—நுந்தை[1] எவரோ—புலமைசான்றோன் மன்ற!

வேரி:—யாங்ஙனம் அறிதி நீ?

துண்ணி:—(சிரித்து) நின் உரையால். அவற் காண்கும்—கொண்டு நும் அகம் உய்த்தியோ, குறுமகாள்?

வேரி:—உணர்ந்தேன் யானும், அப்புலவன்[2] நீயோ? (பணிந்து) நெருநல் உற்றனர் ஒருவர் என்று அம்பல் அலைந்தது ஊரிலே—பெரும் புலவன் நின்னைக்காண எனக்குப் புணர்த்திய பாலே,[3] வாழி நீ! வாழி!

துண்ணி:—பொலிக நின் ஊழி![4] புற்கொரு இரவலனே யான்!

வேரி:—களிறு பெற்றனையோ? அஃது ஒன்றேயோ? பிறவோ? (வலதில் சுட்டிக் காட்டுகிறான்.)

துண்ணி:—பிற, வைகின்ற அதரிடை,[5] எம் ஊர் வழிக் கொண்டு. களிற்றினை........யான்........இங்கு........

வேரி:—சான்றீர், சாற்றுக இது. மன்னன் இளவேளிமான் நும் புலமை ஆயுமளவை புலம் அமைந்தவனோ—நிற்காண வின்றியே இக்களிறீந்து, கல்லாப்பேதையன் இழித்தனனோ நும் பெரும் பெயர்ப் புகழினை?

துண்ணி:—எக்களிறு? அஃதா? இளவேளிமானோ?—கொற்றக் குமணன் ஈந்தது அது!—இளவேளிமானோ? இவ்வூரையல்லையோ நீ?

வேரி:—இவ் ஊரோளே மன், இளவெளிமானினை இன்னும் கண்டிலிரோ?—காண வந்திலிரோ?

துண்ணி:—அக்கருதியே உற்றேன்; இனி அச் செலவு அழுங்கினென்.

வேரி:—யாது நேர்ந்தது பெரும, நீவிர் சீறற்கு? காண்க அக் குரிசிலை, பெரிது நல்குவன்.

துண்ணி:—(நகைமுழங்கி) மடவைமன்ற நீ, மடவைமன்ற!

வேரி:—(துயர்முகனொடு) தூரிசு, யாவ ஓர்ந்தனை.[6]

---

1. உன் தந்தை. 2. நெருநல் வந்துள்ள புலவன். 3. புணர்த்திய பாலே=கூட்டுவித்த விதியே! 4. ஊழி=விதி. 5. வழியிலே.
6. "குற்றமென்ன கண்டனை அவன் செயலில்?"

துண்ணி:—அறனுமிலன், மறனுமிலன்

வேரி:—எம் மன்னனோ?

துண்ணி:—மன்னன்? தன் முன்னோன் அரியணை இழிதகை யிவற்கு யாங்கு தொடரும்? அவனது பிள்ளைமகனது பிள்ளைமைக் காலத்து முதுகண்[1] என்ற அனைத்தற்கன்றோ, அரசு கடாவஇயலும். அளித்து இவ்வூரே! பேதைதன் அரில்வலைப் பட்டு யாதுழக்குமோ, வரும் பத்து நெடும் ஆண்டுகள்!

வேரி:—(உயவொடுநின்று) வசைவாய்[2] வறிய! வாழிநீ, செல்லுதும் யான்.

துண்ணி:—(வியந்து) செல்க, கொடி சாப்பறித்த மாலை நார் எடுத்தேக மறத்தியோ?........ எனக்கு வேண்டாம் அவை. (பொறுக்குகையில்)

வேரி:—யானும் வேண்டலன். மலர் எதற்கு? மாலை எதற்கு....தந்தை தாயற்றேற்கு?

துண்ணி:—(வழிமறிந்து) நில்லு, மடந்தாய்!

வேரி:—விலங்கற்க[3] நம்பாடல்களை மகிழ்தற்குமுன் கண்ணினேன் சிறிது...இனி யான் செல்லல்வேண்டும், பின்னர் வருவல்.

துண்ணி:—இப்பொழில் காவற்கு யாரும் இலரே இங்கு! ஈதென்ன, இயம்பு நீ அம்ம!

வேரி:—நீயே அறிதி, வினவுதலென்? கொடியோனது கோடிய கோலே (சிரிக்கிறாள்)

துண்ணி:—யாமம் முழுதும் யானும் களிறும் ஈங்கு துயின்றோம்....உசாவிட, ஒறுத்திட-யாவனும் இலன்-இது விந்தையே. சேறற்க நீ. நம் அரசனைக் காண்பல் இன்னே. அக்களிறு அம் மரத்து யாத்தேன். சிறிது அல்குக நீ, இங்கே, களிற்றினை யாரும் அலைத்திடாவண்ணம்—நான் சென்று வருவல் விரைந்து.

வேரி:—(முகம் மலர்ந்து) சென்றீ,[4] அரும்புலவ. மீண்டு, உரைத்திசின்[5] எனக்கு, நிகழ்ந்த முற்றும் (கீழ்அமர்கிறாள்).

துண்ணி:—உரைத்திசின்? இசின்?[6] விந்தையோ வியப்போ இரா நெடிதுகூற. உரைப்பென். நினக்கு விந்தையாயிருப்பினும் இருக்கும்—உரைப்பல். (சிரிக்கிறான்).

---

1. முதுகண்=Guardian. 2. பழித்து வைவதை வேரிமனம் பொறுக்கவில்லை. 3. வழிமறிக்காதே. 4. Please go, சென்றருள். 5. உரைத்திசின்=விவரமாய்ப் பின்னர் நெடிது உரைப்பாய். 6. இசின் என்ற சொல் அசைநிலை என்று கூறுப. நெடுமை குறிக்கும் பொருளது என்பது ஆசிரியன் தன் சிற்றறிவு ஆராய்ச்சியில் கண்டது.

வேரி:—பரிசில் கடா,[1] ஆங்கு, நாப்பொழிதியோ? அன்றி, யாத்துக் கையகத்துளதோ?

துண்ணி:—ஆங்குச் சென்று பாடுவல். கையகத்தும் ஒன்றுளது. (மடியிலிருந்து பல பனையோலைகளை எடுத்து ஒன்றினைப் பொறுக்கி) உய்த்தோர்க.

வேரி:—(கையில் வாங்கி, மனத்துள்ளே படிக்கையில் ஆங்காங்கு சில உரக்க நவின்றும், நகைத்தும்)

.... "உரவோன்*செவிமுதல்
வித்திய பனுவல் விளைந்தன்று நன்றென
.... எருக்கிய மகளிர்
வாழைப் பூவின் வளைமுறி சிதற...." (நகைக்க.)

துண்ணி:—மகளிர் மறுகுகின்றனர், நகைத்தியோ நீ?

வேரி:—உவமை காண வியந்து மகிழ்ந்தேன், ஐய, (மீண்டும் படிக்கையில்).... ....

"புலிபார்த்* தொற்றிய களிற்றிரை பிழைப்பின்
எலி பார்த் தொற்று தாகும்...." (வியந்து நகைத்து)

ஓவியம் தீட்டுதி; நீ சொல் கோலாக! எலி பார்த்தொற்றுது புலி![2] ஆம்!

துண்ணி:—சிந்தடியினைப் படி....ஈற்றயலது!

வேரி:—(படித்து) வியந்தேன்....

"நனி யுடைப் பரிசில் பெறுதி,
எழுமதி நெஞ்சே துணிபு முந்துறுத்தே!"

துண்ணி:—(சிரிப்பொடு) ஆகுக, செல்வல்!

வேரி:—பிற செய்யுட் சில என்பால் தருதி புலவ, பொழுது போக்குவல், நுகர்ந்து.

துண்ணி:—(ஒரு ஓலைக்கட்டினைத்தந்து) கிழித்தலோ, இழத்தலோ ஓம்புக[3] புலமகளணங்கே! (இடதில் மறைகையில்) களிற்றினையும் தீங்குறுமை ஓம்புக! (மறைகிறான்.)

வேரி:—(ஆவலொடு, கட்டினைப் பிரித்து) குமணனைப் பாடியது இது....ஆ! (மனத்துள் படித்து)....

1. "பரிசில் கடாவும் செய்யுளை முன்னரே எழுதியாய் விட்டதா—மற்று அங்கு வாய் மலர்வாயோ?" 2. எலியைக் கொல்லாத புலி. 3. "கிழிக்காமல், இழக்காமல் ஜாக்கிரதையாய் வைத்திரு." * புறநானூறு 237.

"கோல் காலாக*க் குறும்பல ஒதுங்கி
நூல்விரித் தன்ன கதுப்பினள் கண்துயின்று
முன்றிற் போகா முதிர்வினள் யாயும்"..........................

மறைக்கின்றன நீர்! (கண்ணைத் துடைத்து) "மருங்கிற்கொண்ட பல்குறுமாக்கள்" "பிசைந்து தினவாடியமுலையள்" "பெரிதழிந்து குப்பைக்கீரை" (விழிநீர் பெருக்கி "குப்பைக்கீரை கொய்கண் அகைத்த முற்ற இளந்தளிர் கொய்து கொண்டு உப்பின்று நீருலையாக ஏற்றி, மோரின்ற அவிழ்ப்பதம் மறந்து, பாசடகு மிசைந்து மாசொடு குறைந்த உடுக்கையள், அறம்பழியாத் துவ்வாளாகிய என் வெய் யோளும்" (தேம்புகிறாள். விழிநீர் அடக்க இயலாமல் விம்முகிறாள்) கொடிது, கொடிது வறுமை, எனின், புலவனின்னேன் வறுமையினை இங்ஙனம் சித்திரம்பாட வறுமையும் ஓர் அழகு கொண்டது, வாழி வறுமை! வாழி வறனே!

துண்ணி:—(இவள் தேம்புதலைக் கேட்டு, நின்று விட்டான் போலும்; அவன் குரல்:) அம்ம, மகளே—தீங்கு என் உற்றாய்? ஏன் புலம்புதி? நின் விடுத்து அகலேன், வந்தனென், காண்.

வேரி:—தீங்கிலது, எந்தாய், சென்று வருக. அதோ, எனக்குத் துணை வருகிறான் தில்லன், நீ செல்க.

துண்ணி குரல்:—காதலனோ அவன்? மற்று, யான் அகல்வதே தகுதி....

தில்லன் குரல்:—(அவன் வரும் பரியினது அரவத்திற்கும் மேலெழுந்து) நில்லு, நில்லட, பேதாய்!

வேரி:—தில்ல, புலவர் பெருமகனார் அவர்—இழிவு படப் பேசேல்!

துண்ணி:—(குரல்) நின்றேன், நின் நோக்கி, எதிர்கொண்டேனும் யான்.

தில்லன் குரல்:—அவிழ் அதனை, என் பரி யான் செறிக்கும் முன்.

வேரி:—எதனை? கரியினை?[1]

---

* புறநானூறு 159.

1. யானையை.

துண்ணி:—(இடதிருந்து வந்து) நின் ஊர்தி மரத்தில் நீ யாத்தது போன்றே யானும் என் ஊர்தி யாத்தேன், பிழை யென்? (சிரிக்கிறான்).

தில்லன்:—(வலதிருந்து புகுந்து), வருகின்றான் அரசன்—. ஓடு, ஒளி, ஒழி....உய்ந்திடு........

வேரி:—ஓடற்க, ஒளியற்க. நீ படர்கின்ற அரசன் தானே வருகின்றான் நிற்தேடி....நின் பெருமை ஓர்ந்தோன் மன்ற! தில்ல, காண்க இச்செய்யுட்களை! சித்திரப் புலவர் இவர்ப் பனிதி!

தில்லன்:—புலவனே யாகுக, பொருநனே யாகுக, ஆறுவது சினமன்று, என்சினமன்று! கரியினை ஒய்த்து கரிகரந்து ஒழிக.... கரி பகரும்....

துண்ணி:—(நகைத்து) வேறு சான்று இலதோ? "பொழிலும் மரனும் வேறே" என்று சிலகால் யான் அயிர்த்ததும் உண்டு. வருக வீரன்! (தரையில் உட்காருகிறான்) வீரனல்லையோ நீ? (நகைக்க).

தில்லன்:—யானே அவிழ்க்கிறேன், ஒரு தனியனேனும். வேரி, நீ செல்க உன்மனைக்கு, (வலதில் மறைகிறான்).

வேரி:—யான் அரசனைக் காணுதல் பிழையோ? (நகைத்து) புலன் நாவுழவ! நின் வறுமை நனி நோவுடைத்து, ஓர்ந்திசின் யானே....

துண்ணி:—(உரக்க) களிறு கதழும் நின்னை, வேண்டாம், தில்ல, வாளா இரு. வேரி, செப்புக நீயே நின் காதலற்கு.

வேரி:—தில்லனோ? (நகைத்து) என் காதலன் வேறு. காணுதல் விழைதியோ, புலவ? எற்குத் தக்கோனு என்று ஆய்தல் நச்சும் என் உள்ளம்.

துண்ணி:—வீழ்ந்தான் தில்லன் (நகைக்கிறான்) உதுக்காண்!

வேரி:—பேதாய், வருக, உறும் அரசற்கு இம்மரனைச் சூழத் துலக்கி,[1] அணிந்து இன்முகவிருந்தாக்குக—யாதோ செய்தியோ பிற?

---

1. "இரவெல்லாம் படுத்திருந்த யானை மாசாக்கிய இடத்தினை சுத்தமாக்கி, வரும் அரசனுக்கு இனிதாக்கு."

தில்லன்:—(ஓடோடி வந்து) புலவோய், பெரும, சான்றோய்! என் பிழை பெரிது, பொறுத்திடுக. நம் பாகன் யாங்குச் சென்றான்? எழுந்தருள்க, யானையினை வேறு கந்திற் படுத்துக, இறைஞ்சினேன் நின் முதடி.

வேரி:—கோழரைத்[1] திண்மரம் அஃதொன்றே இக்காவில், அவ் அண்ணல் யானைக்கு....அம்மரவெளிலும் வருந்துதல் காண். நீ செய்த பிழை யாதுமிலது. அறிஞரிவரை இங்ஙனம் நீ அலைப்பதே நோனரும் நூழிலாட்டு.

துண்ணி:—இரவெல்லாம், ஆங்கேப் பிணித்திருந்ததே—மரம் பட்டதோ? (நகைக்கிறான்.)

தில்லன்:—இரவெல்லாம்? வீழ்ந்தது என் திரு. ஊழ்ந்தது என் உறை.[2] வேரி, வேரி, வேந்தன் ஈங்குவரின், இதனை விளம்பற்க அச்செவிக்கு!

வேரி:—என்? இரவும் நின் காவற்றோ இது? துயிலிலாழ்ந்தனையோ? நின் காவற் பணி யாது? அம்மரத்தினைக் காப்பதோ நின் பணி? அஃதேல்....

தில்லன்:—ஆம், வேரி, ஆம். அதனை ஓம்புவதே என் வாழ்ச்சிக் கடன்.

துண்ணி:—(நகையொடு) அது காவல் மரமோ?

தில்லன்:—ஆம், ஐய, அறிந்தும் செய்தனிர். இரவு யான் வேற்றிடம் சென்றேனல்....

துண்ணி:—இப்பெருந்திறற் றொழில் அயர்ந்தோ?

தில்லன்:—காதற் கவற்சியும்....

வேரி:—கவர்ச்சியோ, கவற்சியோ? (சிரிக்க).

தில்லன்:—கவர்ச்சி அறிவீர், முதிய. இரவுக் குறிக்குச் சென்றேன்—குறியும் பொய்த்தது. கலங்குகின்றது எமுள்ளம்,[3] மன்னன்பால் செய்தி சென்றது, கண்டேன். இங்குபோதுவர் கணப்பொழுதிலே....நும்மையும் ஒறுப்பர், என்னையும் துரப்பர்.

வேரி:—புலவ, திரங்குகின்றான், பெரிதும்....அவன் காதலி மாழ்கற்க. அவள் காவலன் கலங்கற்க, பொறுத்திடுக அவனை. யான் சென்று அவிழ்க்கிறேன் கரியினை....கலுழேல் தில்ல!

1. கொழுகொழு என அடி பருத்த திண்ணிய மரம். 2. உறை= வாழ்நாள்; ஆயுள் முடிந்தது. 3. எமுள்ளம்=மயங்கிய உள்ளம்.

துண்ணி:—கரி பகர வேறு குறிகள் மான்சூழ இலவோ—உணரானோ மன்னன்?

தில்லன்:—விரைவில் யான் சேர்த்துவல் அனைத்தையும்.

துண்ணி:—(எழுகின்ற வேரியை,இழுத்துத் தரையமர்த்தி) கவலற்க, வாரான் அரசன்.

தில்லன்:—யானே சென்று செப்பியுளேன்.

வேரி:—என் இயம்பினை?—ஓ-அப்பொழுது—முதலில்வந்தோய், மீண்டனை அதற்கோ?

தில்லன்:—அலரெழுப்பினேன்,[1] அஃதே....குற்றம் என் சுவல் ஏறல்[2] ஓம்புமினோ, ஐய. இரவு இங்கு நீ வைகியது செப்பன் மின்.

துண்ணி:—தில்ல, அஞ்சல்நீ, அரசன் இன்னும் கடுகிலன், வாரான் மன்ற! "கடிமரம் கந்தாயிற்று வேற்றோனுக்கு" என்று செவி உணர்ந்ததும் உள்ளம் கொதித்துப் பொங்கி உடல் நுரைத்து வீழல் வேண்டாமோ ஈங்கே? காலம் தாழ்த்தான் இவ்வளவை. வேரி, ஆதலின் அறைந்தேன் மறமிலன் நும் மன்னன் என்று.

வேரி:—(பொள்ளென எழுந்து) கடிமரம்! கடிமரம்? நம் மன்னர் கடிமரமோ இது, தில்ல?

தில்லன்:—ஆம், நம்நாட்டுத் தெய்வத்திருமரம் மன்ற!

வேரி:—பகைவர் தீண்டுதல் அறைக்கூவே[3] என்று கேட்டலும் கேட்டுளேன்....மெய்யோ புலவ?

துண்ணி:—மெய்மன்ற! (நகைக்கிறான்)

வேரி:— ஆனால்....ஆனால்....பகைவனல்லனீ. தில்ல,கவலற்க. அன்புடைப்பரிசிலனே இவன்—அரசன் அணங்கான் உன்னை!

தில்லன்:—பகைவரோ, நகைவரோ— யாருமே தொடல் கூடாது....

வேரி:—நண்பரும்....

துண்ணி:—கையறுநிலைத் துறை அப்பாடலை ஓர்ந்தனையோ வேரி?—பாடியோன் பகைவனல்லனோ?

---

1. "ஊரார்க்குத் தெரிவித்தேன்." 2. என்மீதுபழி வாராமல் காத்திடுக.
3. Ultimatum.

வேரி:—(துயர்முகத்தோடு) மானம் போன பின் வாழ்வ தெவன்? யானே பிணி அவிழ்க்கின்றேன் (வலதில் மறைகிருள்)

துண்ணி:—என்ன வீரம், தில்ல, காண்நீ அவளை!

தில்லன்:—வாழி நற்களிறு, மெல்லியளை ஊறு செய்யற்க, (அவள் செல்புறம்நோக்கி) இறைஞ்சுவன் நும் திருஅடியில்—தெரிவின்றிச் செய்த பிழை என அறத்தொடுநின்றிடுக அரசிடம், புலவோய்!

துண்ணி:—பார், களிறு செல்கிறது, பெட்டாங்கு, நறு மதப்பட்டிபோல்! வாழிவேரி, நின்வீரம்! அப்பனே, தில்ல, யான் கூறினும் கொள்ளான் நும்கோன்.

தில்லன்:—புலவர், என்போர் பொய்நூற்று, மாயம் இழைத்து பனுவல் நெய்யும் பகட்டுமொழி வன்வாயரன்றோ—என்னுனும் அவன் என்னைச் சீறலோம்புமின்.

வேரி:—(வலதிருந்து புகுந்து) புலவர் பொய் நூற்போரோ? இழிக்கின்றனை இப்பெருந்தகைபோரை!—போய்ச் சேர்த்துக—அம்மரச்சூழலை!

தில்லன்:—மெள்ள திருத்துவல். அரசன் வாரானே போலும், வரின்........ஐய, முன்னர்க் கண்டுளிரோ அவனை?

துண்ணி:—கண்டுள்ளேன், மன்ற, என் முகம் கண்டதும், எனைப்பொய் புனையினும், கொள்ளான்—பகையென்றே பாய்வான் என் மீது.

வேரி:—அஃதேல், என்சிறுகுடிற்கு எழுந்தருள்க, வருகமா, பெரும. சிறு விருந்தோம்புவல். கடவுளே, இளவெளிமான் வாரற்க இப்பொழில், வாரல் ஓம்புமின், கடவுளே.

துண்ணி:—(முழங்க நகைத்து) வாரானேல் பாழ்த்தது இந் நாடு. அறமிலி, மறமிலி, மானமிலி! வேண்டாமம்ம, யான் வழிக் கொள்வல், என் பரிசில் பவனி செல்கின்றது ஆரதரிடை. களிறும் சேண் அகன்றுவிட்டது. கதிரோன் ஊர் கொண்டான் வெப்பொடு. செல்வல் யான், களிறு நோக்கி.

வேரி:—எம்மூர் எதிர்திசை யுள்ளது, யானும் செல்வல், விடுதி—புலவ, எடுத்துக்கொள் சுவடிகளை. (பொறுக்கித் தருகையில்)

தில்லன்:—உய்ந்தேன், உய்ந்தேன் (வலதில் மறைகிறான்)

துண்ணி:—வாரான் மானமிலி, துணிவிலி, மெள்ளத் திருத்துக. மெள்ள மெழுகுக, மெள்ள அலகுக களரியை! அம்ம! வேரி, என்றேனும் அவனை நீ காணுதியேல் கழறுக இதனை.......

வேரி:—(சினமுகமொடு) என்ன?

துண்ணி:—ஓர் எளிவரு புலவன் செய்த வீரம்!

வேரி:—இஃதென்ன வீரம்?

துண்ணி:—யாத்தது களிறு! கடிமரத்தில்!—வீரமன்றோ (சிரிக்க)

வேரி:—யாது வீரம்? அவிழ்த்துக் கொண்டு செல்தியே.

துண்ணி:—நீ அவிழ்த்தனை, யானோ? (சிரிக்கிறான்)

வேரி:—யான் நெகிழ்த்தேன்மன்!—நெகிழ்த்தேன் நின் வீரத்தினையும் மன்ற. முதுகு காட்டி ஓடுவது முதியன் நீயே—வீரம் யாண்டுளது இஃதில்?

துண்ணி:—ஆம் அவனைக் காணப்பெறாது—எதிரெதிர்ந்து நெடுமொழி அறைவதின்றிச் செல்வது வீரமில்லை மன்ற. என் செய்கோ? வருவன், வருவன் என்று நின்று நின்று அசைந்தனன் சால. வந்திலான் உணர்விலி. போகின்றேன், களிறு சேட்சென்றது.

வேரி:—(துண்ணிகைப் பற்றி இழுத்து) அமர்க, பெரும. வருவர் அரசர், கண்டனை சென்மோ.

துண்ணி:—வாரான், வாரான், வயமிலி! வலமிலி!

வேரி:—வருகுவன் இன்னே—தில்லன் தூது தெரித்தனன் அல்லனோ? (உரக்க வலது நோக்கி) தில்ல, தில்ல! நீ சொல்லினை யல்லையோ?

துண்ணி:—சொல்லியும் வாரான்.

வேரி:—தில்ல—கூறுக மெய்.

தில்லன்:—சொன்னேன் மன்ற........

வேரி:—சொல்லியிரான் மன்ற, தன் தலையினையே வாள் சாய்க்கும் என அஞ்சி, தெரித்திலன் தில்லன். ஓ! பொய்ய! பொய்ய! தெரியின் வாராது அமைகுவனல்லன் எம்மோன்.

துண்ணி:—வாரான், வாரான் (நகைக்கிறான்)

வேரி:—யாங்கு அறிதி நீ? யான் போய்ப் புகல்வல், காண்

துண்ணி:—பெண் நீ, யாங்கு? வேண்டாம் வேரி, எந்நாடு வருக நீ, என் களிறுமிசை.

வேரி:—நகை யொழிக. யான் நுவன்று வருவென் காணினி என் மன்னன் வீரத்தினை! அவனது ஈகையினையும் சுவைக்காமல் செல்லுதல் வலித்தனையே. (வலதில் போகையில்)

துண்ணி:—செல்க நீ. நும் வர வெதிர்ந்து நான் ஈங்கல்குதல் நீடேன்—பெண் நீ. காண்டற்கரிய தீயன் அவனுகில், பெரிது இடும்பை யுறுதி நீ, நும் இறைவனல்—வரைந்து தருகின்றேன் முறியில், இரு, சிறிது.

வேரி:—தருக, தருக. நன்று, சால நன்று.

துண்ணி:—(தரை யமர்ந்து முறியும் கோலும் கொண்டு எழுதத் துவங்கி) அஃதேல்........யான்........

வேரி:—அஃதேல்? என்ன?....எழுதுக....(உரக்க) தில்ல இவ் ஓலையை மன்னன்பால் தூதுய்த்தியோ?....யானோ....

தில்லன்:—அக் களிறு பெரும்பணி நல்கிற்று, ஐயோ! இரவு சிறிதும் துயிலாது உளேவன்....யான்.... என்னையோ நீ ....எவுதி?

வேரி:—நீ செய்யும் இப்பணி, பெண் பாற்றே. யான், தூய், மெழுகி, அலகி அணிபெறுத்துவல் இம்மரனுக்கு நீ செல்க தில்ல, அரசனை அழைக்க.

தில்லன்:—அழைக்க? வேண்டாம், வேரி, நின் மனை செல். நேர்ந்த இழிவோ ஒழிந்தது, மறப்போம் அனைவரும்.

துண்ணி:—ஒரு சிற்சிறு செய்யுள்! எடுத்துச்செல்—அவன் மறுக்கின்றானே....ஒன்று உரை!

வேரி:—(சினமொடு) என்ன? மொழிமதி விரைவில்!

துண்ணி:—மானமிலி, வாரான். ஆகலின், என்னொடு வருதியோ? என் மனையோள் நிற்கண்டு நனி மகிழ்வள்.

வேரி:—முத்து உகற்க, சிப்பிவாய் நின்று! வீரமுளையேல், இங்கு கிடத்தி நீ, முதிய.

துண்ணி:—வீர முளையேல்? படி அதனை, அவ் ஓலையை.

வேரி:—மன்னற்கு அது. எனக்கு உரிமை யாங்கோ? (நகைக்கிறாள்)—உளது.......

துண்ணி:—உளது—படி, (வேரி தனக்குள் படிக்க) உரக்கப் படி, உருமென உருளவல்லதோ அவன் செவிக்கு என்று அளந் தோர்ப்பேன்.

வேரி:—உருமுகின்றேன்: (படிக்கிறாள்)

* "இரவலர் புரவலை நீயுமல்லை,
புரவலர் இரவலர்க் கில்லையுமல்லர்;
இரவலர் உண்மையும் காணினி, இரவலர்க்கு
ஈவோர் உண்மையும் காணினி; நின்னூர்க்
கடிமரம் வருந்தத், தந்துயாம் பிணித்த
நெடுநல் யானைஎம் பரிசில்!
கடுமான் தோன்றல்! செல்வல் யானே!"

துண்ணி:—சாலும் அது, (சிரிக்கிறான்)

வேரி:—பொய் புகன்றனை, இஃதில்.

துண்ணி:—என்ன பொய்?

வேரி:—பார் அங்கே! கடிமரனில் காண்பிலதே நும் நெடுநல் யானை. பிணித்துளது காணினி, என்றியே, பொய்யல்லவோ?

---

* புறநானூறு 162.

துண்ணி:—தா, அதனை, மாற்றுகின்றேன். (வாங்கிப், படித்துப் பார்த்து) பொய்யென்ன?

"கடிமரம் வருந்தத் தந்துயாம் பிணித்த
நெடுநல் யானை........"

பிணித்த! பிணித்த! பிணித்த!—கேளினி வேரி, பிணித்த—இறந்த காலம். பொய்யில்லை, எடுத்தேதருக. (சினத்தொடு) செல்வல் யானே, நினக்கென—நின் மறுத்தரவுக்கென, ஈண்டு அல்கலன் யான்.

வேரி:—வீரமல்ல, இங்ஙனம் புறம் தருவது—என்னினும் எம்மோன் நிற்தொடர்ந்து காடோ, நாடோ, தேடிப் பிடித்துப் பழியறுப்பான், செல்க, காளாய்! (வலது திரும்பி) யானே செல்வன், தில்லனை நம்பேன், நயவேன், தில்ல....உன் பரிமா.... சிறிது.... (மறைகிறாள்)

தில்லன்:—அது கொடுமா—ஏறற்க.

துண்ணி:—இகல் கொண்டனள் என் பால். ஆகுக, அங்ஙனம்! களிறு வருகிறது, அதோ! வீளையிட்டு அதனை விளித்து இறைப்பொழுது....காவல் மரத்தில் மீண்டும் யாத்து நிற்பேன். (விளிக்கிறான் களிற்றை, வீளையினால்).

தில்லன்:—ஐய வேண்டாம்! ஒருவாறு, இனிது காண்கின்றது அருங்கடிக்களரி—மீண்டும் கூவற்க.

துண்ணி:—அக் குறுமகள் என்னை இகழ்ந்தாள். அவள் தந்தையும் ஒரு புலவன் என்று அவளே நேர்ந்தாள்—யானும் புலவனே, தன் தந்தை போன்றொரு இலம்பாட்டுக் கீழ்மகன் என்று என்னை எள்ளினள் போலும், விலகு, விலகு—களிறு விரைந்தோடி வருகிறது பார்.

தில்லன்:—(ஓடோடி வந்து) காத்திடுக, காத்திடுக.

துண்ணி:—(அவனை விலக்கி) அஞ்சற்க, அவன் வாரான், யான் கரியினைப் பிணிப்பல் ஆங்கேயே (வலதில் மறைகிறான்).

தில்லன்:—(துயரொடு, திடுக்கென கீழ்சாய்ந்து) பாழ்ந்தது அனைத்தும், பாவிப்புலவ, சாக நீயே, நின் களிறினனே.

துண்ணி:--வாரான் அவன்; போகாள் இவள்—அஞ்சற்க.

தில்லன்:—(மெல்ல எழுந்து) குதிரையரவம்! ஆம் சென்றிலள் வேரி. ஐயோ—இடதிலா அரவம்? யாங்கொளிப்பேன்? (கீழ் விழுகிறான்) பொறுக்க, பொறுக்க!

ஒரு குரல்:—எழு, எழு! களிறு அஃதோ?

தில்லன்:—(எழுந்து கைகூப்பி) ஆம், அஃதே மன்ன.

ஒரு குரல்:—களிறு அதனில் யாப்புற வில்லைபோலும்—பொதும்பர் திரிந்து நின்றதே.

தில்லன்:—ஆம், ஐய. இப்போழ்தே செறித்து வருகின்றான் புல்லன், கொணர்கிறேன் அவனை (பின் திரும்புகையில்)

துண்ணி:—(இடதிருந்து மீண்டு) இதோ, நிற்கிறேன், ஈர்த்துச் செல் பரிமேலோனிடம்.

குரலோன்:—(தன் பரியினை ஒரு மரனில் பிணித்த பின் வலதிருந்து வந்து) யார் நீ? தெரிகிறது—மறந்தேன்....யார் நீ?

துண்ணி:—யாங்ஙனம் மறத்தி? அனைத்தும் மறத்தி நீ. அரசனல்லை நீ? இளவெளிமான்?

இள :—குரலோர்ந்தேன்—துண்ணியல்லை நீ?—என்ன........ அது....ஓவியப்புலவன்! அல்ல....ஓவப்புலவன்....அல்ல, சித்திரப் புலவன்—ஆம் சித்திரப்புலவனல்லை? விடுதி அவனை தில்ல, வெகுளற்க.

தில்லன்:—காண்க, புலவ, எம் மன்னனின் நோன் மாட்சியினை.

துண்ணி:—கண்டேன், கண்டேன், நோய்மாட்சியினை (சிரிக்கிறான்) வந்தது எதற்கோ?—யான் நின்னைக் காணற்கோ........?

இள:— வந்திலே, அறிவேன். தில்ல, யானையை அவிழ்த்திடு. செல்க அவன், வெகுளற்க.

தில்லன்:—தெரியாத பிழை, பொறுப்போம்!

துண்ணி:—தெரிவின்றிச் செய்ததல்ல, மன்ன, செல்வல் உண்மை பின் அறிதி நீ, சென்றுள செய்யுளால், கொணர்தி களிற்றினை—எம் பரிசில், மன்ன, அது; கண்டிசின் நீ, வாழி!

தில்லன்:—(வலதில் சிறிது சென்று) என்னை வெருவுகிறது யானை—நீயே அவிழ்.

இள:—என்ன, அச்செய்யுள்? பிறவும் உளவோ?

துண்ணி:—உள, பிற. நின் செவிக்கு அல்ல. (வலதில் மறைந்து) செல்கம் யாம்.

வேரி குரல்:—(இடதிருந்து) விடேல் அவனை. விலங்குக கரியின.

தில்லன்:—ஐயையோ—அவளா?

இள:—வேரி! வருக அவள், நீயும் செல்க, தில்ல. புலவ. வாழ்க நின் வாயே!

வேரி:—தில்ல, பிடி அவனை!

தில்லன்:—விடை கொண்டனென், பெரும(வலதில் மறைந்தோடுகிறான்.)

வேரி:—ஐயோ, அவனைப் பற்றுமல், எங்கோ விரைகின்றனனே. (இடதிலிருந்து வருகிறாள்.)

இள:—யான் இவ்வழிப்போந்தது சுட்டினரோ, வேரி விரைந்து வந்தனை இவுளிமேல்? பரிகடாவவும் யாங்கு கற்றனை?

வேரி:—அப்புலவன் கொடுத்த செய்யுள் இது—உன்பால் எடுத்தேதகினேன்—நீயே இங்குப் போந்தனை—வாழ்க நின் கண்ணி! (அவனைத் தொழுகிறாள்).

இள:—அமர்க, தரையில். சாலக்களைத்தனை மகளே.

வேரி:—(வலது நோக்கி) வீரமுளதேல், புலவ, வருக இங்கே, புரவலன் எதிர் நில்.

இள:—(மெல்ல) வேரி, இழியற்க; அவன் பெருஞ் சீற்றன், அரும் பெறற் புலவனேனும்; அவன் செல்க. தில்லனும் மறைந்தான். வா, வேரி, நிற்கண்டு நெடுநாள் உலந்தன.

வேரி—:இருவேமும் ஈங்கு என் செய்ய? கடிமரம் யாத்த யானையோன் நின்னை வசைபாடியது காண். காணங்கே, அச் செய்யுளை! (வலதில் செல்கிறாள்) ஓடாதே, வா இங்கே!

துண்ணி குரல் :—யாது நீ இயம்புதி?

இள:—(செய்யுளைப்படித்து நகைத்து) ஆம் நல்நெடுயானையே!—யாரீந்தது?

துண்ணி:—குமணன். (வலதிருந்து தோன்ற)

இள:—முதிரைக் குமணனா? காடு பற்றிக் கரந்து உறைந்தோன், இளவலொடு இனிது வாழ்கின்றானா நாட்டிலே?

துண்ணி:—இனிதே யுளர் இருவரும்.

வேரி—:மன்ன, யாரோ நீ? இவனைக் கொணர்ந்துள்ளேன், சிறைச் செறித்திடு, நலம் வினாய் கதைகேட்டு, களிறு புகழ்ந்து மகிழ்தியோ, நின் மானம் பொன்றித் துஞ்சும் காலை?

துண்ணி:—(நகைத்து) மன்ன, இவளை மணத்தி நீ. திருச் சான்ற வீர மங்கை இவள்!

இள:—வாழ்க, புலவ! காதல் துய்க்கின்றோம், களவினில். வெள்ளென மகிழும் நாள் நண்ணுகிறது மன்ற.

வேரி:—யாது கூறினை? யானறிவேன், இம் முதுவாய்க் கயவனை. "மணந்துசாக!" என்று வாழ்த்தி வீழ்த்தும் கொலைஞனே இவ் அரம்பாடும் புலவோன்!

இள:—என் இவனை முனிதி நீ வெய்தே?

வேரி:—மானமிலி, அறமிலி, மறமிலி என்று நின்னை வைது ஏசினன் சிறுமுன்னே! இக் கணம் வாழ்த்துகின்றான் உன்னை. நீ கள்ளின் மருள் தி.

இள:—ஏசினையோ, பெரும? வேரி, ஏசினானேனும் பொறுத் திடுவோம் (சிரிக்கிறான்)

வேரி:—பதடி, பேதைநீ! இவனைச் சிறைசெய்து ஒருயேல், யான் நின்னை மணவேன், மன்றீர்த்துச் செல்க.

இள:—கடிமரனைப் பிழைத்த பிழைக்கு வருந்தல் வேண்டும் வரன்முறையே, வழக்காற்றுப்படியே, வேரி நீ கூறுவது தகுதியே.

வேரி:—ஈர்த்துச் செல், களிற்றையும் நம்பணைக்கு உய்த்தி.

துண்ணி:—பெட்டாங்கு இயலுக. வருகின்றேன் நும்மொடு.

வேரி:—களிற்றினை ஏவுவான், ஐய, முதன்முதல் செறித் திடுக இம் மரத்தில். தில்லன் எங்கோ?

இள:—அவனில்லை, போயினன். புலவ, பெருந்தகைமை யுள்ளாயேல் நீயே, எளிது, இனிது.......

வேரி:—அவன் சொல் நம்பலோம்புக. காவலாளரைப் பின்னர் வருவிப்போம்—ஆ, கொடி நார் உள்ளன பலவே....... இம்மரனில் பிணித்திடு.

துண்ணி:—எந்தமரம்? இஃது முள்ளரைத்து (சுட்டிய மரன் நண்ணிச் சாய்ந்திட—)

வேரி:—அஃதொக்கும், பிணி, பிணி அவனை!

இள:—வேண்டாம், அம்ம, வேரி.

வேரி:—நின்னை மணக்க யான் விரும்புவதால் நின்மானம் யான் ஓம்புவல்—யானே பிணிக்கிறேன் (தானே முன் பறித்துக் குவித்த கொடிகளால் அவனை மரத்தில் செறிக்கையில், சுற்றி

சுற்றி வருங்காலை) மன்னனைப் பழித்தெழுதிய வலக்கை விரல் உலக்கைகாள்! கிடமின் வறிது—உய்ந்து போவீர் இனி!

துண்ணி:—நாவும் ஆனது ஆடும்— அதனைத்துணித்திடுக.

இள:—துயில்க நின்நா! (தானும் துண்ணியை இறுகப் பிணித்தற்குதவ) நோகின்றே உடல் எங்கேனும்?

துண்ணி:—நோகுப, நோவில்ல—என் சொல்கோ?

வேரி:—வருக, பெம்மான், செல்கம். நீ நெடுநகர்சென்று ஆளும் கூளியும் அனுப்புக, இவற் பிடித்துக்கொண்டு புகற்கு—ஆ களிறு! அவிழ்ந்தது—மாயம்!

துண்ணி:—யான் தான் அவிழ்த்தேன் அப்போழ்து.

இள:—நம்மைத் துரக்கிறது—புரவி, புரவி—யானும் புரவி....(இடதில் மறைகின்றனர் வேரியும் இவனும்)

வேரி:—உய்ந்துமறைக—ஓடுக—ஓ....(இருவரும் இரு புரவி மீது ஏறிச் செல்லும் அரவம்)

துண்ணி:—களிறு கண்டது என் நிலை—வந்து அது இம் மரனைச் சாய்ப்பினும் பயன் யாது—விடுவிப்போர் இலரால்—ஆ....அவர்ப்பின் தொடர்கிறது....மரம்வீழ்த்தின் யானேசாவல், களிறு வாழிய, அது நல்கிய குமணன் வாழிய! சினவெறியில்....—வலதுகையென—என் இடக்கை விரல்களை யாத்தாள் பேதை வேரி—கடவுள் அருள்! தனியே உறைந்து செய்யுள் இயற்று வென் இச்சிறையில். (மடியில்செருகியுள்ள ஓலைகளிலொன்றில் ஆங்கு வைத்த வண்ணமே எழுதும்முன்,) யார்க்கு?....முதலில் என்குஞ்சிக்கு ஓ குஞ்சி!....வழிபார்த்து நிற்பர் என் ஆட்கள், பரிசிலொடு, இடைவழியிலே! வாய்க்குமாயின் செல்லற்கியலும் இது, உரியோர்க்கு......களிறு—எங்கே?—ஓ! களிறே, ஈங்கு வருதியேல், குமணன் தந்த பணியாளரை வருவிக்கலாம்...... ஓ! ஆண்டுத்தான் சென்றனை போலும், அறிவுடைநீ.......அதற்குள்.......(எழுதுகிறான். சிறிது நேரம் கழிந்தபின்) தில்லனே?....

தில்ல, வருக! வருக! (வலதிருந்து தில்லன் தோன்றிட) காண் எங்கிலை!

தில்லன்:—கண்டனென், கண்டனென். ஒருமரமிசை பதுங்கி ஒளித்துக் கண்டேன் அனைத்தும், விடுவிக்க வந்துளேன். அவர் வருமுன், யாமிருவேமும் ஓடி ஒளிப்போம்.

துண்ணி:—சிச்சீ! அஃதுபின்னர். இவ் ஓலையை நீ கொண்டு, தொண்டூர்ப் பொய்கைக்கு எடுத்துச் செல் கடிது. ஆங்குள்ளோர், எம் இளையர், அவர்க்குக் கொடுத்த பின்........

தில்லன்:—ஆங்கே மீள்வல்........

துண்ணி:—வேண்டாம், உன்னை ஒறுப்பான் இறைவன். எம் மரோடு நீயும் செல்க இனிது—எம்மூரில் குடி ஊன்றுதி இனி!

தில்லன்:—வாழ்க, புலவ! எனின்.......எனது.......

துண்ணி:—(நகையொடு) உன்காதலி எங்கு உளாள், அவளையும் கொண்டு செல்மதி—தாழற்க, என்னை மறந்திடு, யாங்ஙனும் உய்ந்து வருவல்—களிறு உளது துணை எனக்கு.

தில்லன்:—இக் கொடிகளைப் பறித்து நின்னைச் சிறிது நெகிழ்த்துகோ....ஓ! துஞ்சுக என்கண்கள் இக்காண! (தன் கண்களை மூடிக் கொள்ள)

துண்ணி:—வேண்டாம், இங்ஙனே இருக்க அவை. இந்தா ஓலை.

தில்லன்:—(வாங்கிக்கொண்டு) இனி எங்கு தலைகாட்டேன். (பணிந்து வலதில் மறைகிருன்)

துண்ணி:—வேறுயார், மற்று?—(சிறிது சூழ்ந்து, எழுதத் துவங்குகிருன். சிறிதுநேரம் கழிந்தபின்) குதிரை! வேரி! வருக! என் சிறு புலமையினை வியப்பவளல்லளோ? (எழுதுகிருன்)

வேரிகுரல்:—புலவ, அவிழ்த்து விடுகோ? விழைதியோ?

துண்ணி:—வாழ்க நின் அளி! எழுதுதற்கு இடமில்லை, இதுக்காண்....(எழுதிக் காட்டுகிறான்)

வேரி:—(பரியிழிந்து வந்து) யாங்ஙனம்? வலதினையே வலம்பட யாத்தேனே?

துண்ணி:—(நகைத்து) உன்வலம் எனது இடமன்றோ? உன்வெற்றி என்களத்திலன்றோ (சிரிக்க)

வேரி:—பிழைத்தனென், மகிழ்தி, புலவ. (சிரித்து) எழுதுக வேட்டாங்கு, நின்களிறு எங்கே?

துண்ணி:—(நகைமுழக்கி) நின்நெறி அதுவிலங்க, அஞ்சி வந்த நீயன்றோ அறிதி, யானோ?

வேரி:—ஊருள் நுழைந்தது, சிக்குண்டது வீரர்கையில்.

துண்ணி:—ஆங்குச் சென்று அதனை எள்ளிநகுக, என்பால் வருவதென்னோ?

வேரி:—நின்னை நகவே வந்தேன்மன்ற! மன்னன் நெகிழ் வினை முறுக்கி, நின்னை முருங்கவே!

துண்ணி:--இனி அறிந்தேன், நம்மோன் அத்துணைக் கீழோன் அன்று, மன்ற.

வேரி:—மூடு, நின் வாயினை, பேதாய்! மானமிலி நீயே. உயிர்க்கு அஞ்சி, கெஞ்சி இளித்து, நின் ஊரேகுதற்கு சூழ்கின் றனையோ, மாயம்?—பான் அருகிருந்து, மன்றும் ஏறி நின்னை ஒறுப்பது காண்கும்—ஆ, வருகின்றார் மன்னர்.

துண்ணி:—என்னை ஈர்த்தேக? மகிழ்க வேரி! மற்றை யோர்க்காணலனே......ஏனிது?

வேரி:—“என் வந்தனை வேரி, மீண்டும்?” என்று சீறினும் சீறுவர்—யான் கரந்திடுகின்றேன் (வலதில் ஒளிகிறாள்)

துண்ணி:—குதிரையைக் கண்டு உணராரோ இவள் வர வினை. பேதைமன்! பேதைமன்! (குதிரை அரவம். அது ஓய இளவெளிமான் இடதிருந்து வருகிறான்)

இள:—எது, குதிரை யிது?

துண்ணி:—யாரது இது, அறிவாயோ?

இள:—தில்லனது, வேரி ஏறிச்சென்றது, தானே வந்து விட்டது போலும்—என்னே இதன் அறிவு!

துண்ணி:—தில்லன் இங்கு வந்திலன்.

இள:—அஃதறிவேன், அங்கு அகப்பட்டான் (சிரிக்க)

துண்ணி:—எங்கே? எங்கே?

இள:—கவலேல், ஊறின்றி யுளான். குமணற்கு நீ செய்தி விடுத்து, போர்மூள்தியோ எம்மொடு, என்று கவன்று அவனை வழி மறித்தேன்.

துண்ணி:—வீழ்க என் ஊழி!

இள:—கவலற்க, வா, போர்வேளேன், யாருடனும்.

துண்ணி:—யானே வருவல், சிறைக்கு.

இள:—வேண்டாம், அவிழ்த்து விடுகிறேன், நீ செல் உன் மனைவியிடம்.

வேரி:—(வெளிவந்து) நீயும் சென்று மகிழ்ந்திட, மனைவியுள் ளாளோ, உனக்கு? யாங்கு? அவிழேல், யான் பிணித்தது, பெரு வியர்வொடு, சிறுமென் கைகளால் (இளவெளிமானை இழுத்துத் தள்ளுகிறாள்)

இள:—(சினத்தொடு எழுந்துநின்று) உன் வீரத்தினை ஆங்குகாட்டு, களிறு நம் ஊரினைப் பாழ்த்தி உழுது, சாவு வித்துகிறது........

துண்ணி:—ஐயோ, என்களிறோ? அட, கடவுள்!

இள:—புலவ, வல்விரைந்து சென்று, அம் மதக்களிறு அடக்கிடுக, என் புரவிமீது செல்க.

வேரி:—மானமிலி! மானமிலி! விடேன், தொடற்க என் கொடிகளை. (அவிழ்க்கச் சென்ற இளவெளிமானைத் தகைகிறாள்)

இள:—ஆண்மகனல்ல நான்? மானமிலி? நீயோ எசுதி?

(தரதரென அவளை இழுத்து) வா, இம்மரனுக்கு, நின் கலிங்கம்—நின் தானையாலேயே பிணிக்கின்றேன்........

வேரி:—அரோ, புலவ, நும் கண்ணினை மூடுக என்மானம் போயிற்று—களவில் என் மேனி கண்ட காதலன் இவன்—நீயோ........

துண்ணி:—(தன் கண்களை வலது கையால் மூடிக் கொண்டு) வேண்டாம் மன்ன, விடுதி அவளை!

இள:—உள பிற, கொடி நார் இன்னும்....இவற்றால் செறிப்பேன். (பற்றிய முன் தானையை விடுத்து கொடிகளால் அவளைப் பிறிதொரு மரனில் கட்டி) கிட இங்கே, பேயே நீ, பெண்ணல்லை, (அவள் இடமுகமே நமக்குத்தெரிகிறது, வலது நோக்கிச் செறிப்பட்டதால்; துண்ணி முகமோ எதிர் நோக்குவது).

வேரி:—வீரன் நீ.......பேதையை....அல்ல-ஒரு பேயினைப் பிணித்தனை! (கண்களை மூடிக்கொண்டு அழுகிறாள்.)

துண்ணி:—வேண்டாம், மன்ன. மெல்லியள், விடுதி அவளை.

இள:—அவள் சொல் கேட்டேன், ஊரே பாழாகின்று. விரைந்து செல். ஆ....உன்னை இன்னும் அவிழ்த்திலேனே, கொடியேன்—உன்னைப் பிணித்ததும் இக்கொடியோளே!....

துண்ணி:—கொடிமகளிரா? (சிரிக்கிறான்) கொடியோர்களே!

இள:—நகைப் பொழுதல்ல இது....

துண்ணி:—ஆம், வருகிறது சினக்களிறு அதோ!....வேரி நேராளேல், என்னை விடற்க! உடம் படுத்து அவளை!

இள:—என்னைக் கொல்லத்துனைகிறது, அது. வேரியினையும்! உன்னை ஒரு உலா மகனுக்காணுமேல்—போயிற்று என் உயிரும். மாழ்க யானே. எம் ஊரார் பலர் துஞ்சினர், யான் வாழ்ந்து ஆவதென்? (சோர்ந்து நிற்க)

வேரி:—விடற்க அவனை, அனைவோரும் மாண்டு வீழ்வோம்.

இள:—(திடுக்கென) மாண்டு? புலவன் கூடாது. நின் காதலி,

பெருந்துயர்ப் பேதுறைவி—மனையோள் குஞ்சி—கைம்மை காண்பதோ? வேரி, புலமை வியக்கக் கற்றுளை, இச் செய்யுளை ஓது, கண்ணைத் திறந்துபார் (அவள் முன்நீட்டி)படி, உன் கண்ணை விரைவில் மூடும் இது காட்சி ஒழிய!

வேரி:—விடுவி, என்னை.

இள:—மாட்டேன். முதலில் புலவனை. (துண்ணியை அவிழ்க்கையில்)

துண்ணி::—வேண்டாம், மன்ன.

வேரி:—(கட்டுண்ட வண்ணமே நின்ற நிலையில் படிக்கிறாள்)

* "நின்நயந் துறைநர்க்கும், நீநயந் துறைநர்க்கும்,
பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்கும்,
கடும்பின் கடும்பசிதீர, யாழ நின்
நெடுங்குறி எதிர்ப்பை நல்கி யோர்க்கும்,
இன்னோர்க் கென்னாது..............."

இள:—மீண்டும்!....(துண்ணியை அவிழ்த்துக் கொண்டு) மீண்டும்! (பாடுகிறான்)

"இன்னோர்க் கென்னாது என்னொடும் சூழாது,
வல்லாங்கு வாழ்தும் என்னாது"..................

(அவன் ஈரக்குரல் தேம்புகிறது. மரத்தில் சாய்ந்த புலவனைக் கட்டி அணைகிறான்—முத்தமிடுகிறான் கன்னத்தில்).

துண்ணி:—ஈதென்ன?

இள:—பொறுத்தருள்க, நின் திருவடியையன்றோ முத்திடல் வேண்டும் (காலில் வீழ்கிறான்).

துண்ணி:—சிச்சி! சித்தை பேனைபோ?

வேரி:—ஈதென்ன இழிவு? மன்னன் வீழ்ச்சி என்னே? (மீண்டும் படிக்கிறாள்.)

"வல்லாங்கு வாழ்து மென்னாது, நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி, மனைகிழ வோயே!
பழந்தூங்கும் முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமணன் நல்கிய வளனே."

---

* புறம் 163.

இள:—(துண்ணியை அவிழ்த்துவிட்டு) பொறுத்திடுக புலவ ரேறே! வேரி, இவர்க்காண்—புரவலரோ இரவலரோ. அப் பாட்டினை மீண்டும் மீண்டும் ஓதுக, நேரம் நனி தருகம் உனக்கு தமியே ஓத! யாம் செல்லுகின்றேம்—ஆ, களிறு படுத்திருக் கிறது களைத்து—விளித்திடுக மெல்ல.

துண்ணி:—(நகைத்து) துஞ்சும் அரவினைச் சீற்றுவதென்? எடுப்புவதென்? வேரி! (அவள் தலைகுனிந்து நிற்றல் கண்டு) வேரி, என்னைப்பார்!

வேரி:—கண்களைக் குத்திச் சாவல் யான், சென்றீமோ (தேம்புகிறுள்) நோக்கற்க என்னை, அணுகற்க (திமிறுகிறுள்) போதி நீ மன்ன, போதி புலவ, என்னைத் தீண்டுதியேல் மாள்வல் இன்னே, இவ்வே, இந்நிலையே.

துண்ணி:—(அவளையணுகி, யாத்த கயிற்றினை அவிழ்த்துக் கொண்டே) பொறுத்தி என்னை. பெரிது நெடிது பிழைத்தனென்.

இள:—(முகமலர்ந்து) என்னே இவர் சால்பு! நின்னை இரக் கின்றனர். செய்யுளில் புரவலர், நின்னடியில் இரவலர்.

வேரி:—செய்யுளில் புரவலன்? மன்ன, மடவன் மன் நீ, அறிந்திலை சூழ்ச்சியை, அவனை மரன் செறித்தனை, களிறு கொண்டனை. குமணன் நல்கிய மற்றை வளனையும் கவர்திநீ என்று இவன் அஞ்சியே, தன் மனைப்பேதைக்கு விடுத்தனன் அவ்வோலை, "அனைவர்க்கும் கொடுமதி" என்ற சொற்பொரு ளாழம் அறிந்திலை. கொடுமதி? கொடுமதி? என் மதி? கொன்னே தோன்றிய முன்னிலை அசையோ அது? கொடுமதி—கொடுத் தலை மதியுடைத்தாம்....கொடுமதி! இச்சூழ்ச்சியோன் விரகினை வாழ்த்துதியே நாணின்றி! போழ்க நின் நா!

துண்ணி:—(மரமென நின்று கலங்கி, அவளை அவிழ்த்தல் சோர்ந்து) அறிவும் உணர்வும் சான்றேளே இவள் மன்ன; மற்று, பெருமகாள்! இளவெளிமான், குமண வள்ள லீந்தன கவர்வன் என்று எனைத்தும் எண்ணிலேன் யான், அவ் அனைத்து நம் தலைவனை இகழ்ந்திலேன், கடவுளே நிற்பர் கரி. கொடுமதி எனின் விரைந்துகொடு என்றல்லோ பொருள்?

இள:—விரைந்து கொடுப்பதே மதியுடைமையும். நும் இகழ்ச்சி, சிறிதோ, பெரிதோ—யான் நொந்திலேன், பெரும; என்னையே நொந்து கொண்டேன், கேள்வி கல்வி நிரம்பா புன் மதி இளைஞனைப் பொறுத்தி, சித்திரப்புலவ!

துண்ணி:—(அவிழ்க்கல் தொடர்ந்து) சித்திரப்புலவ? அஃதே விளித்தனள் இவளும்—இருவீரும் ஒத்த மனத்தீர் போன்ம், விடுத்தேன், செல்க வேரி, நும்மனை.

வேரி:—(அகன்றோடி) மாட்டேன், இங்கேயே மாள்வல், (சிரிக்கிறாள்) சித்திரப் புலவீர் யா, யா பாடினும், ஆடினும்! ஆம், இஃதே வடக்கு—வடக்கிருந்து விளிவல்.

துண்ணி:—(நகைத்து) வடக்குறை நோன்பு அணங்கே நீ! மன்ன, யான் கடிமரனில் யானைப் பிணித்தது பெரும்பிழையே, நோனற்கரிது. நீ நோன்றனை; நோன்றதும் பிழையே, மான மோம்பிச் செருவிளைத்தோள் வேரிதன் போரே அறப்போர் மன்ற! யான் செய்த பிழை கொடிது—யானே வடக்கிருந்து நோற்றல் வேண்டும். (நிற்கும் வேரி அருகுசென்று வடக்கு நோக்கித் தரையில் அமர்ந்து, அவள் அடிகளை இருகையாலும் தைவர)

வேரி:—(நகையொடு) சீச்சீ! (துள்ளிக்குதிக்கிறாள்) கூடாது சித்திரனார்! கூடாது, எழுக!

இள:—யான் செய்ததும் பிழையே—அறமகளை மரத்தில் யாத்துக் கொடுமை மொழிந்ததற்கு யானன்றோ வடக்கிருத்தல் வேண்டும்? சித்திரனார், நீவிர் எழுக. (துண்ணிபக்கம் அமர்ந்து அவரை எழுப்ப.)

துண்ணி:—(துண்ணென எழுந்து) வடக்கு நீயிர் அமர்வீராகில் யானெதற்கு நடுவண்? அமர்க நீயிர். (அவளை இழுத்துக்கொணர்ந்து)—மணம் புணர்த்திச் செல்கிறேன். ஒருமாலையால் பிணிப்பேன் மன்ன, இங்கு நிற்கும் வேரிமானில்! (கொடியால் கட்டப் போகிறான் அவர்களை) ஆம், இக்கடிமரனிலே! கடி எனின் வதுவையன்றோ? இக்களிறினைப் பிணிப்பென்.

தில்லன் இலனிங்கே, காவற்காரன், என்னை விலக்க, (நகையொடு) கடிமரம் நேற்றும் யாத்தேன், இன்றும் யாத்தேன். (வினையிட்டு) களிறு வருமோ?

தில்லன்:—(திடுக்கென இடதில் தோன்றி) எதற்கு? இகல் மாறினவோ? ஆறினவோ? ஆ, களிறு வருகிறதே.

துண்ணி:—இளமான், பணிக நீ இவட்கு, இவளது சீற்றம் அனைத்தும் உணர்ந்தேன். அரசனை.... அன்றியும் காதலனை யான் கழறியதற்குச் சீற்றம் கொண்டாள் என்மேல் காதல் மாண்பினைக் கண்டனென், என் இழிவினை ஓர்ந்தேன். மணக்க நீவிர், நெடிது ஊர்க நும் ஊழியாழி! களிற்றினில் இவர்ந்து செல்க, மணமக்காள்!

தில்லன்:—களிறு வெருவிலது—வருக!

இள:—களிற்றினால் இடருற்றது எம்மூர், யாம் மணம் துய்ப்பமோ? (சிரிக்கிறான்)

வேரி:—வேறொருநாள் கண்ணுக! (எழுகின்றனர்)

தில்லன்:—யாரும் மாண்டிலர், ஊர்சென்று, தெருதோறும் உலாவிப், போந்தேன் இங்கு. நெடுநல் யானைவெருத் தந்ததன்றி யார்க்கும் ஊறு தந்தின்று வாழி யானை!

துண்ணி:—அத்தந்த குமணன்வாழியர்—அஃதோ, வருக, இருவீரும் வம்மின்.

வேரி:—சித்திரனார், நீவிரோ? புரவிமீதோ?

இள:—பெருஞ்சித்திரனார்—வருக, என்புரவி. நும்யானை போல் எனதும் ஊறு தராத்தகையது.

தில்லன்:—(இடதில் அனைவரும் மறைகையில்) மன்ன, கடிமரம் காத்துத் தமியன் யான் நிற்றல் வேண்டுமோ—நும்மொடு ஊலா வருதல் விழைந்தேன், அருள்க....என் பரியுமுளது....

பெருஞ்சித்திரனார்:—(பாடுகிறார்)

சிறிதே தந்தனை இவ்இரு சொல்லே!
பெரிதே மாண அரும் பரிசில்லே!

[மறைகின்றனர்]

புத்தக மதிப்புரை.

கம்பராமாயணசாரம் பாலகாண்டம்:—கம்ப ராமாயணத்தில் சுவை மிகுந்த பாடல்களைப் பல்காலும்ஆய்ந்து தமது நுண்மாண் நுழை புலனால் கண்ட கவிநலன்களை தமிழன்பர்கள் யாவரும் சுவைத் தின்புறுதற்பொருட்டு திருவாளர். இராவ் சாகேப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் இயற்றிய அகலஉரையுடன்கூடியபாடற்றிரட்டின்முதற்பகுதியாகும். மதிநுட்பம் நூலோடமைந்த இப்பெரியார் தமிழ், அங்கிலம் என்ற இருமொழிகளிலும் தலைசிறந்த கவிகளின் உள்ளத்தை நன்கு தெரிந்து, அவற்றின் சொன்னயம், பொருணயங்களைச் சுவைத்துச்சுவைத்துத் திளைக்கும் மாபெருந் தமிழ்ப்புலவர். தமது அருந்தொண்டின் பயனாய் இவர் உவந்தளிக்கும் இவ்வுரைநூல், தமிழ் மக்கள் இன்புறுதற்கான நல் விருந்தாகும்.

இந்நூலின் மாட்சியினை அறிந்து இதனைக்கவின்பெற வெளியிட்டுதவிய தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர்க்கு தமிழுலகு நன்றிபாராட்டும் கடப்பாடுடைத்து. தமிழராவார் ஒவ்வொருவரும் இவ்வரிய நூலை விலைக்கு வாங்கி பதிப்பாளர்களை நன்முயற்சியில் ஊக்கி, கம்ப ராமாயணத்தின் எஞ்சிய பகுதிகளும் வெளிவந்து, தமிழ்கூறு நல்லுலகு இன்புற்றிலங்க ஆவனபுரிவாராக.

இதன் விலை ரூ. 1—10—0. ரூ. 2—0—0.

தமிழ்ச் செய்திகள்.

திரு. வித்துவான் C. R. நமசிவாயமுதலியார்அவர்களின் படத்திறப்பு:—பல்கலைக் கழகமன்றத்தில் முதலியார் அவர்களின் உருவப்படமானது 20-3-37தேதியன்று பேர் அறிஞர்பலரின் பாராட்டுதலுடன் திறந்து வைக்கப் பெற்றது. திருவாளர்கள்

Dr. A. இலட்சுமணசுவாமி முதலியார் அவர்கள், Dr. உ. வே. சுவாமிநாத ஐயர் அவர்கள், மகாமகோபாத்தியாய S. குப்புசாமி சாஸ்திரி அவர்கள், Miss. De. La. Hay அவர்கள், Dr. S. கிருஷ்ண சாமி ஐயங்கார் அவர்கள், Mrs. நல்லமுத்து இராமமூர்த்தி அவர்கள், மு. இராகவஐயங்கார் அவர்கள் ஆகியபலரும் முதலி யார் அவர்களின் புகழுரைகளைக் கூறினர். முதலியார் அவர்கள் எளிய குடும்பத்தில் பிறந்து, புலமைமிக்க தமிழாசிரியாரால் வளர்க்கப் பெற்றவர். தனது உலைவிலா முயற்சியாலும், அருங் குணங்களாலும், தலைசிறந்த தமிழ்த் தொண்டினாலும் உன்னத நிலையை அடைந்தவர். தமிழ்ப் புலவர்களின் நிலையையும், தமிழ் மொழியின் நிலையையும் கண்ணுங்கருத்துமாய்ப் போற்றி இப் பல்கலைக் கழகத்தில் உயர் நிலைக்குக் கொணர்ந்தவர். தெலுங்கு மொழியை உயிர்ப்பித்ததில் திரு. வீரேசலிங்கம் பந்தலு அவர்கள் எத்துணை சிறந்தவரோ அது போலவே தமிழ் மொழியை உயிர்ப்பித்ததில் முதலியார் அவர்கள் தலை சிறந்த வர். கலைநூற் பொருளையும், புதுக் கருத்துகளையும் விளக்குதற் கான வசன நூல்களை பாலர்முதல் முதியர் ஈறாகப் பயிலு தற்குரியவாறு கவின்பெற இயற்றி உதவிய பெருந்தகை எனப்பலரும் புகழ பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் திரு. R. Littlehailes துரைமகனார் திருவுருவப் படத்தை மன முவந்து ஏற்றனர்.

சென்னைப் பல்கலைக் கழகம்:— இந்த மார்ச்சு மாதம் 20 தேதி நிகழ்ந்த கூட்டத்தில் கல்லூரிகளில் பணியாற்றும் புலவர் களையும் மற்ற பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களைப் போலவே (Lecturers) சொற்பொழிவாளர் எனும் பெயரால்குறிக்கவேண்டு மெனவும், ஊதியமும் மற்ற ஆசிரியர்களின் படித்தரத்திலேயே கொடுக்கவேண்டுமெனவும் திரு. S. இராமச்சந்திர ஐயர் அவர் களால் முன் மொழியப்பெற்று திரு. V. இராமநாத ஐயரவர் களால் வழிமொழியப்பெற்றது. திருவாளர்கள் திவான்பகதூர் K. S. இராமசாமி சாஸ்திரிகள், M. R. இராமசாமி சிவன், ஆமீது ஆசன் ஆகிய அன்பர்கள் இதனைத் துணைமொழிந்து ஆதரித்தனர். Rev. A. G. Hogg துரையவர்கள் கல்லூரிகளின்

ஆட்சிமுறையில் பல்கலைக்கழகத்தார் தலையிடுதல் முறையல்லவெனவும், கல்லூரிக்கான முதற்பொருளைத் தேடுதலில் பொறுப்பற்ற பல்கலைக் கழகத்தினர் கல்லூரிப் பணியாளர்களின் ஊதியத்தைத் திட்டஞ்செய்வது அடாத கருமம் எனவும் மறுத்தனர். பல்கலைக்கழகத்தினர் நாட்டுமொழிப் புலவர்களையும் மற்ற ஆசிரியர்களுடன் ஒருபடித்தாகவே நடத்திவருகின்றனர்; கழகத்தினர் நடத்திக்காட்டும் நேரியமுறையினை கல்லூரித் தலைவர்களும் பின்பற்றுகின்றனராவென்பது ஆராய்ந்துகாண வேண்டுவது; புலவர்களின் நிலையை உயர்த்துவதில் கழகத்தின் ஆட்சிக்குழுவினர் (Syndicate) தமது செல்வாக்கினால் ஆவன புரியும் விருப்புடையர்; அடுத்துவரும் ஐந்தாண்டுக் கல்லூரிச் சோதனையில் கல்லூரித் தலைவர்கள் புலவர்களை அநீதமாகக் கீழ்மைப்படுத்துகின்ற செய்தி வெளியானால் கவனித்தல் நலம்; என Dr. A. இலட்சுமணசுவாமி முதலியார் அவர்கள் விளக்கினர். ஆதலால் இம்முடிபு வலியுறுத்தப்பெறவில்லை.

உ

1937-ஆம் ஆண்டிற்கு திக்கற்ற மாணவ இல்லத்துக்கு நெல்லும், காசும் உதவி அருளிய பெருந்தகையாளர்கள்.

திரு.	T. S. நந்திகேசுவரம் பிள்ளை அவர்கள் கருந்திட்டைக்குடி,	நெல் கலம்.	40
,,	ம. குமாரசாமிப் பிள்ளை மனைவியார் அவர்கள் மகர்நோம்புச் சாவடி.	நெல் கலம்.	10
,,	B. இராஜராஜேசுவரி அம்மாள் அவர்கள் வடக்கு ராஜவீதி தஞ்சை.	நெல் கலம்.	10
,,	கைலாச அறநிலைய வரவு	ரூபா.	85—0—0
,,	செந்தமிழ்ப்புரவலர் இராவ்சாகிபு. த. வே. உமாமகேசுவரம்பிள்ளை வரவு	ரூபா.	20—0—0

உ

கரந்தைத் தமிழ்ச் சங்க வெள்ளி விழாவிற்கு தாது, மாசித்திங்கள் முடிய உதவிய அன்பர்கள்.

திரு. த. பொ. கை. அழகிரிசாமி பிள்ளை அவர்கள் வழியாக:—

		ரூ.	அ.	ப.
திரு. T. A. சிவசங்கரம் பிள்ளை	அவர்கள்	5	0	0
,, நா. கந்தசாமி பிள்ளை Retd. Eng.	,,	8	0	0
,, T. P. K. அழகிரிசாமி பிள்ளை	,,	6	0	0
,, N. N. CT. சிதம்பரம் செட்டியார்	,,	5	0	0
,, பெயர் வேண்டாப் பெரியார்	,,	10	0	0
,, இராம பஞ்சநதம் பிள்ளை	,,	10	0	0
,, A. Y. அருளானந்தசாமி நாடார்	,,	5	0	0
,, சிவசாமி மூப்பனர்	,,	2	0	0
,, T. இராதாகிருஷ்ணநாயுடு B.A., B.L.,	,,	2	0	0
	கூடுதல்	53	0	0

திரு. S. A. சாம்பசிவம் பிள்ளை அவர்கள் வழியாக:—

திரு. வ. மருதப்பா பிள்ளை அவர்கள்	50	0	0
,, G. இராமசாமி பிள்ளை ,,	6	0	0
ஆக	56	0	0

திரு. வித்துவான் அ. வடிவேலர் அவர்கள் வழியாக:—

திரு. V. தங்கவேற் பிள்ளை L.M.P.	அவர்கள்	5	0	0
,, R. தீனதயாளு நாயுடு	,,	5	0	0
,, A. நாராயணசாமி பிள்ளை B.A.,	,,	3	0	0
,, T. C. வேங்கடாசலம் பிள்ளை	,,	1	0	0
	ஆக	14	0	0

திரு. T. R. விசுவநாதபிள்ளை அவர்கள் Asst. Eng. வழி

மூன்று தவணைகளாக	75	0	0

திரு. கோதண்டபாணி பிள்ளை B.A., அவர்கள் வழியாக:—

திரு. V. முத்துலிங்கப் படையாச்சியாரவர்கள்	10	0	0
திரு. குப்புசாமி ரெட்டி என்கிற நாராயண ரெட்டியாரவர்கள்	10	0	0
ஆக	20	0	0

திரு. C. வேதாசலம்பிள்ளை அவர்கள் B.A., B.L., வழியாக

முதற்றவணை	17	0	0

திரு. இராவ்சாகிபு.

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் வழியாக:—

திரு. T. V. K. காமராஜபாண்டிய நாயக்கர் அவர்கள்

போடிநாயக்கனூர் ஜமீன்தார்	100	0	0

திரு. P. சாமிநாதபிள்ளை அவர்கள் B.A., L.T., வழியாக

முதற்றவணை	20	0	0

உ

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

கல்லூரிக்கு அன்பர்கள் உதவிய நன்கொடை

திங்கள் நன்கொடை		ரூ.	அ.	ப.
திரு. சித்த வைத்திய சரபம் Dr. ஆ. சோதிபாண்டியன்	அவர்கள்	5	0	0
,, K. நடராசன் B.A., B.L., (Advocate.)	,,	5	0	0
,, N. A. அனந்தவிசய முதலியார்	,,	1	0	0
,, K. பிரணதார்த்திஅரன் பிள்ளை	,,	1	4	0
,, T. S. சபாபதி பிள்ளை B.A., (Retired. Dt. Registrar.)	,,	1	0	0

ஆண்டு நன்கொடை

,, N. A. வர்த்தமான முதலியார் அவர்கள்	50	0	0

உ

சிவமயம்

அம்பிகாபதி இயற்றிய

நெல்லை வருக்கக் கோவை

தஞ்சை,
தமிழ்ப்பேராசிரியர் திரு. L. உலகநாதபிள்ளையவர்களால்
பரிசோதிக்கப்பெற்றது.

வெளியீடு ௰௧.

கூட்டுறவுப் பதிப்பகம்
தஞ்சை.

—

1936.

நெல்லை வருக்கக் கோவை

இது, திருநெல்வேலியில் கோயில் கொண்டெழுந்தருளிய நெல்லை நாதரைப் பாட்டுடைத் தலைவராகக்கொண்டு, அகப் பொருட் டுறைகளமைய, மொழிக்கு முதலாம் வருக்க எழுத் துக்கள் ஒவ்வொரு காரிகையின் மொழி முதற்கண் முறையே வரத் தொடுக்கப் பெற்றிருத்தலின், **நெல்லை வருக்கக் கோவை** எனப் பெயர் பெற்றது. இதற்கு **நெல்லைமாலை** எனவும் பெயர் காணப்படுகின்றது.

இந்நூலை இயற்றியவர் **அம்பிகாபதி** என்பவர். இவர், பாண்டிநாட்டில் வீரையில் (வேம்பற்றூரில்) வேதியர் குலத்தில் பிறந்தவராவர். இவற்றினை, இந்நூலின் கடைசிச்செய்யுளாகிய "கண்ணூறு சாத்தும்" என்பதிற் காண்க.

இந்நூலிற் செய்யுட்கள் சிதைந்தும் பிழைபட்டும் இருத் தலின், அவற்றை ஒருவாறு செப்பஞ்செய்து அச்சிடலாயிற்று. இது, **தஞ்சை சரபோஜி மகாராஜா சரஸ்வதிமால்** என்ற புத்தகா லயத்திலுள்ள ஏட்டின்படியாகும்.

காப்பு

தேரோடும் வீதியெல்லாஞ் செங்கயலுஞ் சங்கினமு
நீரோ டுலாவிவரு நெல்லையே—காரோடு
கந்தரத்த ரந்தரத்தர் கந்தரத்த ரந்தரத்தர்
கந்தரத்த ரந்தரத்தர் காப்பு.

நூல்

காட்சி

அமிழ்துங் கயலும் புயலுந் தனியரக் காம்பலுந்தே
னுமிழும் பொசியவெண் முல்லையு மாயொழி யாமறையுந்
தமிழுந் தெருமணக் குநெல்லை நாதர் தடஞ்சிலம்பிற்
கமழும் பொழில்வளர் வல்லிகண்டேகண் களிகொண்டதே. 1

இரவினீட்டம்

ஆவியுங் காயமும் போலவொன் றாகி லவருடைய
நீவியஞ் சிற்றிடை போலரி தாய்நிற்கு நீங்கியநாள்
வாவியம் போருகஞ் சூழ்நெல்லை நாதர் வரையில்வல்லி
காவியங் கட்கடை போலற நீளுங் கருங்கங்குலே 2

விருந்து விலக்கல்

இளைக்கும் பிறைமுத்தர் நெல்லையஞ் சாரலி லீந்திலையால்
வளைக்குங் குடிலில் வதுவைசெய் வாய்முறை பார்க்கிலெங்கள்
கிளைக்கும் பழுதில்லை யிங்கண்ணை லேவெள்ளி கீழ்த்திசையில்
முளைக்கும் பொழுதெழுந் தால்செல்ல லாநும் முதுநகர்க்கே 3

குறி பிழைத்தழுங்கல்

ஈன்ற வளைத்தப்பி ஞாளியின் வாய்த்தப்பி வெம்முயிரைப்
போன்ற வளைத்தப்பிப் போந்ததெல் லாம்புர மூன்றெரியத்
தோன்ற வளைக்குஞ் சிலையாளர் நெல்லைச் சிலம்பினிலாக்
கான்ற வளைக்குலங் காள்சொல்லு வீர்வரிற் காதலர்க்கே 4

தழை வியந்துரைத்தல்

உழைவேடக் கண்ணினுக் கஞ்சனமா மொற்றைச் சிந்துரமாங்
குழைவேட மாம்பல வேடங்களா முடல் கூனுஞ்சிலைக்
கழைவேட னெச்சிற் கருள்புரி வோர்நெல்லைக் கார்வரைப்பூந்
தழைவேட மாறிப் பலவேடங் கொண்டது தண்டழையே 5

சேவலைப் பழித்தல்

ஊழிக் கருங்குல் நீக்கிவெய் யோனையிங் குள்ளழைக்குங்
கோழிக் குலத்தை வளர்த்ததெல் லாங்கொழுங் காவிமள்ளர்
மேழிக் கொழுமணைக் கும்நெல்லை நாதர் வியன்சிலம்பிற்
பாழுக்கியான் வளர்த்தேன் கிளியோ டன்னம் பால்பகிர்ந்தே 6

பருவங் கண்டழுங்கல்

எழுந்தாரை மாரிப் புனல்வெள்ள மோவெம்மை நீத்திருந்தார்
கொழுந்தாரை மாரிக் கயல்வெள்ள மோகொன்றை யாடகப்பூஞ்
செழுந்தாரைச் சூடும் பிரானெல்லைநாதர் சிலம்பிற் செந்தீக்
கொழுந்தாரை வேல்வல வாவெந்த மாரி கொழிக்கின்றதே 7

இசையமறுத்தல்

எட்டிற் றிகழ்கொன்றை யார்நெல்லை நாதரை யீன்றகழைக்
காட்டிற் றருமுத்தமொன்று கண்டீர் கஞ்ச மொன்றமலர்
வீட்டிற் றருமுத்த மொன்றுண்டு மால்சங்க வெண்முத்தந்தோள்
சூட்டத் தகாதகண் டீரெமர் காணிற் றெருழாதவரே 8

விருவெதிர்மறுத்தல்

ஐயம் புகுந்திருக் கைகளென் றூலு மடியிணைகள்
வையம் புகுந்திரு மால்தொழு வோர்நெல்லை மால்வரைவேள்
கையம்பு தைத்த பசும்புண்ணி லேவைத்த காரமொக்குங்
கொய்யம் புயமனை யாளருட் பார்வைங் குளிர்சிங்கியே 9

தன்றுயர் குமுதந் தாமரைக் குரைத்தல்

ஒருபோ துறங்குஞ் சரோருகங் காளுத யாதவன்றேய்
வருபோ தலரு மலர்நெய்தல் காள்வண்டு காலுழுதே
தருபோ தலரும் பசுங்கொன்றை யார்நெல்லைத் தண்சிலம்பி
விருபோதுங் கண்ணுறங் கேனிமைப் போது மிமைப்புறவே 10

நகை கண்டு வருந்தல்

ஓலைக் குழைக்குங் கழைக்குமென் பாகி னுடன்கலந்த
பாலைப் பழிக்கு மொழிக்கு மன்றேபிட்டின்பா....ட்ட
வேலைக் குழைக்கும் பிரான்நெல்லை நாதர் வியன்சிலம்பிற்
சேலைப் பழித்தகண் ணாள்நகைக் கேயுயிர் தேய்கின்றதே 11

நெஞ்சொடு புலம்பல்

ஔவ்வவர் சீலம் பலகாலுஞ் சிவித் தறிந்தபின்னை
எவ்வெவர் நட்புங் கொளப்பெற்ற லோமிம வாரங்கை
வவ்விய கோலத்தர் நெல்லையஞ் சாரல் வரையில்வல்லி
நவ்வியங் கண்ணிணை போற்றடு மாறிய நன்னெஞ்சமே 12

நினைவறக் கண்புதைத்தல்

கக்குங் கணப்பிறை நாவாயிற் செக்கர்க் கடுமறலி
யொக்கும் படிக்குவந் தாலென் செய்வேனுடல் கூனிவயி
றெக்கும் பிறைமுடி யார்நெல்லை மீதி விரைவிழுங்கி
விக்குங் குருகினங் காளுயிர் போகில் விழிபொத்துமே 13

களிற்றிடை யுதவிக் கறத்தோடு நிற்றல்

காட்டானை வென்ற பொழுதந்த யானைக் கடுங்குரலைக்
கேட்டார் செவியினுங் கேட்குங் கொல்லோகழிக் கெண்டை
வாட்டானை யாய வடிவுடை யாள்வலப் பாகர்நெல்லை [யங்கண்
நாட்டா ரறிய மணமுர சாவிக்கு நல்லொலியே 14

சேவிலி வேதியரை வினுதல்

கிம்புரிக் கோட்டுக் களிற்றுளர் நெல்லைக் கிரியிலிரண்
டம்பிருக்குங் கண்ணி யண்ணல்பின் னேயழல் வாய்க்குகையிற்
செம்புருக்கிச் சொரிந் தாலன்ன பாலைச்சென் ஞகம்வெந்த
வெம்புரிக் கொக்குமென் றூர்சென்ற வாறெங்கண் வேதியரே 15

சுனை வியந்துரைத்தல்

கீற்றுப் பிறைமுத்தர் நெல்லையஞ் சாரற் கிரியிலெந்த
ஊற்றுச் சுனையிற் குளித்துதைந் தாடியி மூதைபட்டு
வேற்றுத் தலந்தொறும் *வேரியம் பாணமும் வெண்ணகையு
நோற்றுப் பிறந்தனை யேயணங்கே நல்ல நோன்பினையே 16

---

* வேர்விழியாமல் விரகில்லா.

பொருள் மேற்பிரிதல்

குறைக்கோல வெண்டிங்கள் வேணியர் நெல்லைக் குளிர்சிலம்பில்
துறைக்கோல வண்டினங் காளன்னங் காள்துணைக் கைப்பிடித்து
நறைக்கோலங் கண்ட மலர்க்கண்க ளாலின்று நானிருந்த
சிறைக்கோலங் கண்டில ரேபொருண் மேலன்பு சென்றவரே 17

எழுதியிரங்கல்

கூன்முகத் திங்க ளொருரேகை காண்கினுங் கொப்புளிக்குந்
தேன்முகத் தாம்பன் மலருங்கெட்டேன் செங்கண் மாலுங்கஞ்ச
நான்முகத் தோனுந் தொழுநெல்லை நாதர்நன் னாட்டிலிந்த
மான்முகத் திங்கள் புக்கு மலராதென்றன் வல்வினையே 18

பாலனைப் பழித்தல்

கெங்கைச் சடாடவியார் நெல்லை நாதர் கிரிப்புயத்து
மங்கைத் தலத்துந் தவழ்ந்துசென்றே சென்று வாடவர்கைப்
பங்கப் பழம்புண் ணிடையே புதுப்புண் பரந்தவெங்கள்
கொங்கைக் குறியழிந்தா லைய ரெம்மைக் கோவிப்பரே 19

அளி விலக்கல்

கேழற் பெருங்கொம் பணிநெல்லை நாதர் கிரியிற்கொங்கை
வாழப்பெறாத மருங்குகெட்டேன் வண்டு வாய் சுவைத்து
வீழக் கருங்கண் டிறக்குஞ் செங்காந்தளைக் காந்தளினஞ்
சூழப்பொறாது கண்டீர் பெற்ற தாயர் துயருறவே 20

புனத்திடை யுருவேளி

கையுங் கவணு மிதணுங்கல் லோசையுங் காவல்செய்து
தொய்யும் புனமுமெய் தோன்றநிற்பீர் தொல்லை மாபுரமூன்
றெய்யுஞ் சிலைமுத்தர் நெல்லையஞ்சாரலி லீச்செறிந்து
கொய்யும் புனமும் வைப்பா ரென்னமாய மிக்கோலங்களே 21

புறந்தரல்

கொலைவேழ மொன்றுரித் தோர்நெல்லை நாதர் குளிர்சிலம்பிற்
கலைவேழந் தானெய்த காட்டிடையே யுமைக் கைப்பிடித்துத்
தலைவேழ முன்னிட்டன் றெம்மைப்பின்னால் விட்ட தண்ண
[ளிக்கோ
முலைவேழ முன்னிட்டின் றெம்மைப் பின்னாக முனிவுற்றதே 22

கண்டோர் காதல்

கோணும் பிறைமுத்தர் நெல்லையஞ் சாரலிற் குன்றிலிந்நாள்
பேணும் புனமும் பிழைபட்டதால் பிறை வாயினம்பு
நாணுஞ் செறியுஞ் சிலைவேடராலு நம்மாலு நல்லோர்
காணுங் கனித் தெய்வமே பிழையானதென் காதலர்க்கே 23

முல்லையைப்பழித்தல்

கௌவைத் திரைக்கங்கை யார்நெல்லை மேற்கட னீர்விடுத்துச்
செவ்வைப்பட வளர்த்தே னிதற்கோ திங்கள் வெண்குடைக்கீழ்
பௌவத் திரைமுர சார்ப்பவில் வேளுக்குப் பாசறையாம்
மௌவற் றுனியரும்பிக் கணையாய் விட்ட வாறுநன்றே 24

முகம் போதல்

சடைவீடு கங்கைக் களித்தோன் தென்னெல்லையிற் றுவியகட்
கடைவீட தாகுங் கனங்குழையி ருந்தி கான்றகஞ்ச
மடைவீட தாகு மயன்றலை நாளி லனங்கனுக்குப்
படைவீடு வேணுமென் றேவெளி யாயிடை பாவித்ததே 25

உண்டெனமறுத்தல்

சாயீன்ற பாவையன் னாளுக்கு வேலைமண் டாங்குரகன்
வாயீன்ற மாணிக்கங் கொண்டுவந் தாலு மணிமுடிமேற்
காயீன்ற கொன்றை கமழுஞ் செம்பாதி கலந்தபச்சை
வேயீன்ற முத்தன்றி வேறுமுண்டோ நெல்லை வெற்பிடத்தே26

புனத்துடன் மொழிதல்

சினங்காலுஞ் சூலப் படையாளர் நெல்லைச் சிலம்பிலென்றன்
மனங்களை பிற்செல்லச் செல்லுகின்றேன் வள்ளை பாடுங்கிள்ளை
யினங்காள் வெறுங்கவண்கா ளிதண்கா ளெம்மை யற்றவறும்
புனங்காளிங் கேது சொல்வீர் வந்துவாடும் புரவலர்க்கே 27

பாலனைப் பழித்தல்

சீறுக் கருணையர் நெல்லையிலே யன்பர் சிந்தைதன்னை
மாறுக்கி விட்ட மதகளிறேவரிக் கெண்டை யங்கண்
ணூறுக்கி விட்டதும் போதாமல் வேங்கை யடைகிடந்த
தூறுக்கி விட்டனையே தமி யேனைத் துணைவருக்கே 28

புனத்துடன் மொழிதல்

சுனைவிளை நீருண்டு யாம்புனங் காவற் றொழில்புரிந்தால்
தினைவினை வாமென் றுரைத்ததெல்லாந் தென்றற்கன்றுமுன்றில்
மனைவிளை யாடுந் திருநெல்லை நாதர் வரையில்வல்லி
வினைவிளை வாய் விட்டதே யிதுவோபின் விளைவதுவே 29

சேவலைப் பழித்தல்

சூழிக் கரியுரித் தோர்நெல்லை மேற்குன்றந் தாள்படுத்துப்
பாழிச் சுடரிலே வேலன்வந்தால் திரைப்பாய் சுருட்டு
மாழிக் கதிரவனைக் கங்குல் யாமத்தழைக்க விந்தக்
கோழிக்கிது முறையோ தமியேனைக் குறை செய்வதே 30

பருவங் கண்டழுங்கல்

செருவந்த சூலப் படையாளர் நெல்லைச் சிலம்பில்முன்னீர்க்
கருவந்தெழுந்த கருங்கொண்டல் காள் கலங் கிக்குமுறி
யுருவங் கருகிப் பரந்துகண் ணீர்சிந்தி யோடமுன்னாள்
பருவங் குறித்ததுண் டோவெம்மைப் போலொரு பைந்
[தொடியே 31

குறங் கூறல்

சேலிற் றிகழ்விழி யாயிடுகூ ழுன்பர் சேர்வரிந்த
சூலிக் கவுளி வலமுநன் றேதொல்லை யஞ்செழுத்தின்
மூலிக் கழைமுத்தர் நெல்லைக்குள் ளேமுன் முளைத்தெழுந்த
சாலிக் குறிபொய்க்கு மோகுறங் கூறல் தவறினுமே 32

இல்லத்திருந்து சேவிலிவருந்தல்

சைவத் துறையன்பர் நெஞ்சினுள் ளார்நெல்லைத் தண்சிலம்பில்
மைவைத்த வேல்வைத்து வார்குழல் மேல்வைத்து மார்பில்
[வைத்து
மெய்வைத் திளகு முலைமுகத் தேவைத்து மேற்றெழுது
கைவைத்து வாங்குந் தழையை நின்போலொன் றுங் கண்டிலமே

அளி விலக்கு

சொரியுங் கதிர்ச்சுட ரன்றிச் சந்திரோ தயந் தோன்றமடல்
விரியுங் கமலமெங் கேபடைத்தீர் வெள்ளை வேதத்தனு
மரியுந் தொழுமரன் நெல்லையஞ் சாரல் வரையிருள்வாய்
வரியுங் கயல்விழி யீரெமை யாள வருவதற்கே 34

தனக்குறி யுரைத்தல்

சோதிப்பிறை முத்தர் நெல்லையஞ் சாரற் சுரும்பிற்
விதிக் கடங்குமென் றேவணிந்தீர் வெளிப்போந்த விந்த
வாதிப் பகிரண்ட மொன்றிரண்டாக வகுத்த விந்தப்
பாதிக் கடங்கு மல்லா லடங்காது பனைமுலையே 35

வண்டோச்சி மருங்கணைதல்

சௌரியங் கொண்ட புயத்தா.......தனித்திருந்து
கௌரிகொ ண் டாடும் பிரானெல்லை நாதர் கிரியிற்றென்றல்
கவுரிகொண் டாலு மிறுநூன் மருங்குலைக் கண்டுவண்டீர்
பவுரிகொண் டீர்குழன் மேலிசைக் காற்றுப் படப்படவே 36

புறந்தரல்

ஞானந்திரண்ட திருமேனியார் நெல்லை நாட்டிற் றென்றல்
மீனங் கவரும் விழியணங் கேவண்டு மொய்த்தகுழற்
கானம் புகுந்துமென் காம விடாய்கெடக் கண்டதர
பானந் தரநினையீரினிப் போதும் பராமுகமே 37

கழிக்கரைப்புலம்பல்

ஞெகிழிப் பொறிபட்ட சந்திரோ தயமின்ன மாரன்விட்ட
பகழிப் பசும்புண் படினென்செய் வேன்பொன்பரப்பிக்கொண்ட
புகழிற் றிகழ்கொன்றை வேய்நின் றமுத்தர் பொருப்பில் முன்னீர்
கழியிற் கரும்புள்ளு காளன்பர் வார்த்தையு மன்பற்றதே 38

நகரணித் தென்றல்

ஞொள்கா னுடங்கு மிடைமட வீரும்மை நோக்கியமான்
வெள்கா வருந்துஞ் சுரங்கடந் தோமினி மேல்நடந்தால்
தெள்காவுந் தென்னன் திருவீதி யுஞ்சிந்து பூந்துறையுங்
கொள்காவும் வேய்முத்தர் கோபுர வாசலுங் கோவிலுமே 39

முல்லையைப் பழித்தல்

தண்டோட் டிளங்கொன்றை யார்நெல்லை மீதிற் றரைபிளந்து
கொண்டோட்டும் வேரில்வெந் நீர்விட்டி லேன்வெளிக் கொண்டு [சென்று
திண்டோட்டும் பூந்தள வேயும்மை மானென்று தின்பதையான்
கண்டோட்டி விட்டதற்கோ நகைத் தாய்புன் கருத்துநன்றே 40

பாங்கியோடு புலம்பல்

தாதக லாத சடையாளர் நெல்லையிற் றக்ககுழைக்
காதக லாத கயல்விழி யீர்கடுங் கூற்றன்விட்ட
தூதக லாத பிறைபோல மேற்றிசை தோற்றிச்சற்றுப்
போதக லாதிருப் பீருயிர் காணுமுன் போகின்றதே 41

குரவோடு புலம்பல்

திரைப்பாவை சூடும் பிரானெல்லை நாதர் சிலம்பிற்செல்வி
பொரப்பாவை வேலன்பின் னேதனியே சிற்றில் போட்டு [வெள்வேல்
பரப்பாவை யேகுதல் கண்டிருந் தேயுன் பசியகுரல்
மரப்பாவை யாதல் கண்டோ தடுத் தாயில்லை வாய்திறந்தே 42

அன்னையர்க்குரைக்கென அந்தணர்க்குரைத்தல்

தீட்டச்சொல் லாமழுவார்நெல்லை நாதர் சிலம்பிற் கல்வி
நாட்டச்சொல் லீர்முல்லைப் பந்தர்க்குக் கால்நவ்வி நாபுலரா
தூட்டச்சொல் லீர்புனல் தேடுமென் பூவையுறங்கத் தொட்டி
லாட்டச்சொல் லீரந்த ணீர்பெற்ற தாய ரளவுஞ் சென்றே 43

இரவுக்குறி நலம்பாராட்டல்

துள்ளிட்ட கங்கைச் சடையாளர் நெல்லைத் துணைவர்வைவேல்
நள்ளிட்ட கங்குல் வரத்தக்க தால்நடு நீர்மனையில்
கள்ளிட்ட தோட்டுக் கபாடம் புறப்படக் காவல்தச்சன்
உள்ளிட்டு வைத்தனனே மணித்தாளை யுபாயஞ் செய்தே 44

சென்றபேதைக்குச் செவிலி யிரங்கல்

தூதைக் கல்லுஞ் சிறுசோறுஞ் சிற்றிலுந் தோழியருந்
தாதைக் குரலு மறந்தன ளாயினுஞ் சங்கரிதன்
காதல் துணைவர்த நெல்லையிலே கை நெகிழிலெழும்
பேதைக் குரலெங்க னேமறந்தாள் சென்ற பேதையரே 45

வளமை செல்வி யிளமைக் கிரங்கல்

தெருப்பைந் தமிழ்மணக்கு நெல்லைநாதர் சிலம்பிற் செல்வி
பொருப்பென்று சூட்டப் பொறுத்தன ளோபகற் போதுவிண்ட
மருப்புண்ட ரீகம் பறிக்கநெட் டோடையில் வந்துபுக்கு
நெருப்பென்று நின்றழு தாளந்த நாளிந்த நேரிழையே 46

மாவோடு புலம்பல்

தேங்கோடு சிந்தும் பொழினெல்லை நாதர் சிலம்பிற்செல்வி
கோங்கோ டணைக்குங் குவிமுலை யீர்குட நீர்விடுத்துப்
பூங்கோடு சற்றுங் கருகாமற் போற்றி வளர்த்தவிந்த
மாங்கோடு பூக்கு மன்றேயன்பர் வார்த்தை வடுப்பட்டதே 47

தழைகொண்டு தன்மையுரைத்தல்

தைக்குங் கணைவிழிப் பங்காளர் நெல்லைத் தமரவண்டு
மொய்க்கும் பசுந்தழை வாங்குதி ரேமுலைப் பாரஞ்சுமந்
தெய்க்குங் கொடியிடை போலிளைத் தேற்கின்று நாளையென்று
பொய்க்கும் பொருள்சொல்லு வீருமைப் போலில்லை பூவையரே

மாலைகண்டு மாலைகொள்ளல்

தொடைகிடக் குஞ்சடையாளர் நெல்லைத் துணைவர் வைவேற்
படைகடக் கச்சென்ற நாட்டில்லை யோபனிக் காலமெல்லாம்
புடைகிடக் கும்பெடையைச் சிறகால் மெள்ளப் போர்த்துவிடா
தடைகிடக் குங்குருகே செக்கர் வானமு மந்தியுமே 49

அளிவிலங்கு

தோளிட்ட மாலைச் சுடரோன் கபாடப்பொற் றோடடைத்துத்
தாளிட்ட தாமரை யார்திறந்தார் சந்திரனுக் கொத்த
நாளிட்ட கொன்றைச் சடையாளர் நெல்லையி னள்ளிருள்வாய்
வாளிட்ட கண்மட வாய்வருந் தாமல் வருவதற்கே 50

புனத்திடை யுருவெளி

தௌவல்செய் தாயில்லைத் தண்குர வேதழ லாலுடலந்
தெவ்வல்செய் யுங்கொடும் பாலையிலே திங்கள் வட்டநிலாக்
கௌவல்செ யும்பணிக் கங்கணந் தார் நெல்லைக் கார்வரையில்
மௌவல்செ யுந்நகை யாரடிப் போது வருந்திடவே 51

தலைவன் வறும்புனங் கண்டு வருந்தல்

நல்லோசை கொண்ட தமருகத் தார் நெல்லை நாட்டெயினர்
வில்லோசை கேட்ட புனக்கிளி காளிதண் மீதிருந்தார்
சொல்லோசை யுந்துன் றொலியோ சையுமவர் சுற்றிவிட்ட
கல்லோசை யுந்தமி யேனென்று தானினிக் காண்பதுவே 52

செழுந்தினைக் குரைத்தல்

நாப்பிட்ட பாம்பணி வோர்நெல்லை மேல்நறுங் காந்தள் விண்டு
தீப்பட்ட குன்றிற் செழுந்தினை காள்தின் னும் வேழமெனக்
காப்பிட் டினக்கிளி வீழாமல் கைக்கவண் வீசிநின்று
கூப்பிட்ட வர்க்கன்றி யுங்களுக் கேனிக் குரல்நெரிவே 53

சிற்றில் விரும்பிச் சிறந்துரைத்தல்

நிறக்குழை யாய வலம்புரி யார்நெல்லை நாட்டிலென்றன்
பிறக்குழை பாயுங் கயல்விழி யீர்புனல் மூட்டிக்கிண்டி
புறக்குழை யாமல் பதத்தே வடிபு முலைமணற்சோ
றறக்குழைந் தாலு மரிசியென் றாலு மதுபிழையே 54

....

நீட்டிக் குறைக்குந் திருமேனியார் நெல்லைநாட்டி லண்ணல்
கூட்டிக் கொடுசெல்லும் பேதைக்கு யான்கொடும் பாலையழல்
மூட்டிப் புகையெழு விக்குமென் னாமல் முன்னாளிற் செம்பொன்
சூட்டிக் கொடுத்துவிட் டேன்கொடு போவென்று குன்றடிக்கே
55

இல்லத்திருந்து சேவிலி வருந்தல்

நுண்டுளி மாரியும் வெற்பையும் போன்முலை நோக்கிவிழுங்
கண்டுளி மாரிகண் டாரிலை யேதெவ்வைக் காயங்கண்ட
மண்டுளி வாய்மழு வார்நெல்லை நாதர் வரையிலிந்தத்
தண்டுளி மாரிக்கு முன்வரப் போன தறுகண்ணரே 56

பாலனைப் பழித்தல்

நூலார் மருங்கி லுமைபாகர் நெல்லையில் நோற்றுப்பெற்ற
பாலா பகலும்வந் தாரில்லை யேகையிற் பற்றியவேற்
கோலால் நெடும்புனத் திட்டமுள் வேலியைக் கோலிமெல்லக்
காலால் வழிதடவிக் கங்குல் வாய்வரக் கற்றவரே 57

குறம்

நெறிப்பட் டவர்தொழும் நெல்லையஞ்சாரவி னின்று வந்தோம்
வெறிப்பட்ட வாய்மைக் குறத்தியல்லோம்நெல்லை வேந்தனுக்கு
மறிப்பட்ட கண்ணிம வானின் மகள்மற் றணங்கினுக்குங்
குறிப்பட்ட தும்பட்ட தாலணங்கே யிடுங்கூ ழெமக்கே 58

....

நேரிட்ட பாம்பணி யார்நெல்லை நாதர் நெடுங்கிரிமேற்
போரிட்ட வேழமும் புண்பட்ட வேலும் புடையடங்கா
வாரிட்ட கொங்கையுங் கண்களு மாயுரு மாறிவந்து
பேரிட்டு நின்றனவோ வணங்கே சொல்லும் பேதையர்க்கே 59

கடல் மேற் பிரிதல்

நையும்வெண் ணூலும் வெளியும்மெய் சான்றவர் நாவறியாப்
பொய்யும் படைத்த விடைமட வீர்தண் பொருனைச்சங்கு
செய்யுந் தெருவுந் தவழ்நெல்லை நாதர்சிலம்பிற் கெட்டேன்
மெய்யுஞ் சொலக் கற்பரோ கடன்மேற் செல்விருப்பினரே 60

கலங் கண்டழுங்கல்

நொந்திளைத் தீன்ற கழைமுத்தர் நாட்டில் நுரையுமுத்துஞ்
சிந்தும் பொருனைத் திரைமணற் பாவைக்குச் சில்கழங்கும்
பந்துந்தந் தாதரித்தென்பா லவர்தம்மைப் பார்த்து நொந்து
வந்துநின் றுரைக் கண்டோ பரிவாய்சொல் மரக்கலமே 61

பாகனோடு வினுதல்

நோற்றுப் பிறந்த வுமைபாகர் நெல்லையி னுண்டுளிநீ
ரூற்றுப் புனல்மூந்தி லென்செயு மோவென் றழுங்கித்தெவ்வர்
வேற்றுப் புனங்கண்டு பந்தியை நாட்டி விரைந்துபரிக்
காற்றுச் செலுமென்பரே வல்லவா வொன்றுங் கண்டிலமே 62

சேவிலி வேதியரை வினுதல்

நௌவியுந் தும்பையும் பூங்கொன்றை மாலையு நாண்மதியைக்
கௌவிய பாம்புந் தரித்தபிரான் நெல்லைக் கார்மயில்பூஞ்
செவ்விய பாலைக் குரிசில்பின் னேமுகச் செவ்விகன்ற
வெவ்விய பாலையி லேகடந்தா ளெங்ஙன் வேதியரே 63

சிற்றில் விரும்பிச் சிறந்துரைத்தல்

பல்லாதவனை யுதிர்த் தோர் தென்னெல்லையிற் பண்டெவர்க்கு
மில்லாத நல்லற மெய்திநிற்பீ ரெமக்கில்லை யென்றுஞ்
சொல்லாமல் நீரிட்ட வெண்மணற் சோறு சுடினதனுட்
கல்லாய நேரமுண்டோ பசி காணுங் கடுகியதே 64

மதங்க னெதிர்ந்து மறுமொழி கூறல்

பாதிப்பிறை முத்தர் நெல்லையஞ் சாரற் பரத்தையர்பால்
சோதித்து விட்டலவோ வறிவீ ருண்மை சொல்லுமெங்கள்
கீதத்த வீணை யுடைக்கவென் றோபைங் கிளிகடிந்து
சாதித்து நின்றதெல் லாமணங்கே யன்றுதண் புனத்தே 65

மடலேறுவே னென்றல்

பிணங்குஞ் சடையு நெருங்கும்வெண் ணீறும் பிணங்குதசை
யுணங்குந் தனியென்பு மாலையு மாயெம் முயிர்பருகி
நிணங்கொண்ட வேல்விழி வல்லியரே யுங்கள் நெல்லையில்நீர்
வணங்குங் கடவுளைப் போல்வரு வேனிந்த மன்றிடத்தே 66

கொங்கையை வியந்து மங்கைக் குரைத்தல்

பீதாம்பரந் தொழு நெல்லையஞ் சாரலிற் பேதைகொங்கை
சூதாம்பருவத்திற் செய்கை கண்டால் துணைக் கோடடக்கிப்
போதாம் கமலத்தை வென்று பொன்மேருவைப் போல் [வளர்ந்தா
லேதாம் புவனங் கெட்டே னிளைஞோர்மன மென்படுமே 67

எழுதரி தென்றல்

புளகப்படா முலையுங் கழைத்தோளும் புதுமதிமே
லளகப்படா முமெழு தினமாயினு மன்பிலர் நெஞ்
சுளகப்படா முத்தர் நெல்லையிலே யன்னாற் சொருகால்
இளகப்படா நெஞ்சை யெப்படி யோவிங் கெழுதுவதே 68

அருமறைச் சடங்குக் காற்றாத் தலைவன்

பூக்கமழ் கோதையர் நெல்லையிலே வந்து புல்லென்றெம்மை
நீக்குமென் றாலதற் கேதுசெய் வேன்னெடு வானத்துள்ளே
தூக்கிய பாதத்தர் நெல்லையஞ் சாரற்சுரும்பிற் கெட்டேன்
ஆக்கிய தெய்வ மழிக்குமென் றாலெங்ங னாறுவதே 69

அன்றிற் புணர்ச்சி கண்டழுங்கல்

பெருகும் புனற்சிந்து பூந்துறையார் நெல்லைமேற் பெருத்துக்
கருகும் பெரியதடம் பெண்ணைமே லிரை காதலிக்கும்
அருகுங் கலவி யிணை பிரியா தலகோடலகு
சொருங் குருகுகண்டென் சொல்லுமோ மனஞ்சென்ற [வர்க்கே 70

மடவனப் பெடையோடு மங்கைக் குரைத்தல்

பேட்டிளங் கால்வண் டுழுதோறு மாடக வள்ளமொத்த
கோட்டிளங் கொன்றையு மில்லைகொல் லோகுனிக் காயெருக்குந்
தோட்டிளந் தும்பையுஞ் சூழ்சடை யார்நெல்லை சூழுமந்த
நாட்டிளங் காலன்னங் காளன்பர் போகிய நாடெங்குமே 71

சுரத்திடை யந்தணரை வினவல்

பைந்நீழல் நாகச் சடையாளர் நெல்லைப் பரமர்வெற்பில்
எந்நீழலை மறந் தேகின பாவைக் கங்கேயெயினர்
தந்நீழ றன்னி லடங்குமப்போ தவிப்பாறும் வண்ணம்
வெந்நீழ லன்றியுண் டோவந்த ணீரிந்த வெஞ்சுரமே 72

பாலனைப் பழித்தல்

பொறிவைக்கும் பாந்தட்சடையாளர் நெல்லைப் பொருப்பில் [முன்னீர்க்
கறுவிக் கவரும் விழியெங்குமார் செவ்விக் காமனல்கு
செறிவிக்கு நான்பெற்ற தீவினை யேனுக்குஞ் செல்வருக்கும்
பிறிவுக் கிடு மருந்தே யிதற்கோவுனைப் பெற்றதுவே 73

நகரணித் தென்றல்

போற்றிப்பத மிருதாளணங்கே புள்ளு மாவுஞ் செல்லா
வேற்றுத் தலமிது கானவ ரூரிது மேல்நடந்தால்
நேற்றைப் பிறைமுடி யார்நெல்லை நாடுநெட் டோடையும்பூந்
தாற்றுக் கதலியுந் தாமரைக் காடுந் தடாகமுமே 74

சுனை வியந்துரைத்தல்

பௌவக்கடல் விடமுண்டோர் தென்னெல்லைப் பரமர் வெற்பில்
கொவ்வைக்கனி செய்த கோலத்தினுலுங் குரவை வண்டின்
கௌவைக் கருங்குழல் வாசத்தினுலும் கருத் தினுக்குச்
செவ்வைச் சுனையல்லவோ வணங்காடிய தீஞ் சுனையே 75

சிற்றில் விரும்பிச் சிறந்துரைத்தது

மதம்பார்த்து வேழ முரித்தோர் தென்னெல்லையில் மாரனஞ்ச
கதம்பார்த் தெடுக்குங் கயல்விழி யீர்கனல் மூட்டிக்கிண்டிப்
பதம்பார்த் தெடுக்கும் வடித்தவெண் சோறு பசித்தவருக்
கிதம்பார்த் தளிக்கின்றி லீரிது வோவுங்க ளில்லறமே 76

நாணிக் கண் புதைத்தல்

மாடஞ்செய் கோபுர வேய்முத்தர் நெல்லை மலர்ப்பொருட்டுப்
பீடஞ்செயு மணப் பெண்ணமுதே பெரும் பாவிநெஞ்சைக்
கூடஞ்செயுங் கொங்கை யானையல்லாற் கொற்ற வேள்சுருதிப்
பாடஞ் செயுங்கண் கபாடஞ்செய் தாயென் பகருவதே 77

பாங்கி கருத்துரைத்தல்

மிடியிட்ட நுண்ணிடை பங்காளர் நெல்லையில் வேதன்மட
லடியிட்டு வைத்தத னூற்பய னேதரம் தின்றவைவேல்
வடியிட்ட கண்ணி வடிவே யெழுதமருங் கொக்குமோர்
படியிட்டு வைத்தில னேவெளி யாகப் படைத்தவனே 78

கண்டோர் காதல்

மீனுண் டிளங்குரு காலுநெல் வேலியர் வெற்பிலிந்தக்
கானுண்ட வேட ரறவும் பொல்லார்கங் குறங்குமிவ்வூர்
யானுண்டுமக்குற வாக நொந் தீரிளைப் பாறநல்ல
தேனுண்டு மாவுண்டு நீருண்டு போகச் சிறப்புமுண்டே 79

நகைத் துரையாடல்

முடத்தேய் பிறைமுத்தர் நெல்லையஞ் சாரலின் மூச்சுடலம்
படத்தேயுந் தண்டழை கொண்டெய்தி னீர்பகற் போதிலடித்
தடத்தே செல்லாமற் புனங்காக்கும் பேதையர் தங்கள்
[கொங்கைக்
குடத்தேயுந் தேடுவ ரோகெடுத் தோமென்று குஞ்சரமே 80

சென்ற பேதைக்குச் செவிலியிரங்கல்

முற்றித்த சூலத்தர் நெல்லையஞ் சாரலில் மும்மதமா
நாற்றிக்கும் புனலுக்கலே பாலையில் நாடிச் சென்று
தூற்றிக் குழலே முடிப்பவர்யார் சுட்ட பாலேயெடுத்
தாற்றித் தருபவ ராரணங் கேயுன் னருகிருந்தே 81

தனிமை பாராட்டல்

மெழுகா யுருகின்ற வன்பர்க் குள்ளார்நெல்லை வெற்பர்சொன்ன
எழுகாரும் வந்து தலைப்பட்ட தாலிங் கிரவுபகல்
ஒழுகாவெனுங் கண்களூற்றிடை யாளெமக் கொன்றுஞ்
[சொல்லாள்
முழுகாள் மயிர்முடி யாளணி யாள்முலை முத்தங்களே 82

....

மேலுந் தனியிப்படி வருமோ குன்றவே டார்வில்லுங்
கோலுஞ் செறியுங் குறிஞ்சியெம் மூரண்ட கோளமெல்லா
மாலுந் தொழுமர னெல்லையஞ் சாரல் வரையிற்றென்றற்
காலுந் தமிழ்மணக் குந்தமிழ் நாடன் கடிநகரே 83

கண்கண்டு மகிழ்தல்

மைக்கடங் காக்கண்டர் நெல்லையி லேவட குன்றமென்னுந்
திக்கடங் காமுலை யைப்புதைத் தீர்தென்ற லின்றமிழின்
மெய்க்கடங் காமுனி கைப்போ தடங்கும் விரிகடல்போல்
கைக்கடங் காது குழைக்கடங் காதுங் கருங்கடலே 84

பாலனைப் பழித்தல்

மொழிகைக்கு தன்றி யன்பர்திண் டேர்க்கு முனிவர்சொன்ன
வழிகைக்குமது கண்டிசைப் பாண மதிக்குடை யோன்
அழிகைக் கணல்விழித் தோனெல்லை மீதி லமர்பொருவேல்
இழிகைக் குலமட வார்வலைச் சேரிக் கெழுந்தருளே 85

அருமறைச் சடங்குக் காற்றுத் தலைவர்

மோக்கக் குழையு மணிச்சமென் பூவை முகந்திருத்தி
நோக்கக் குழையும் விருந்தென்ப ரேநுரைக் கங்கைமுடி
தேக்கப் பொறுப்பவர் நெல்லையி லேயுங்கள் சிற்றிலின்சோ
றூக்கப் பொறுத்திருந் தும்பொறுப்பே னெங்ங னுறுவதே 86

பொய் பாராட்டல்

மௌவலைப் போல்நகை யார்வலத் தார்நெல்லை வாருதிநீர்
செவ்வலைக் கேசென்று தோணி துழாவிச் சிறந்ததுயர்
மெய்வலைக் கேபட்ட மீன்போலு மென்னெஞ்ச மீனுமுங்கள்
பொய்வலைக் கேபட்ட தாலது போகவும் பேர்சொலுமே 87

செய்பணி யாதெனத் தெரிந்து வினவல்

யானைப் பகடுரித் தோர்நெல்லை நாத ரெறிகடல்வாய்
மீனைப் படுக்க வலைவிரிக் கோவெறி பட்டசுறு
வூனைப் படுக்கத் திமில்மடுக் கோவுமக் கேதெண்ணம்பூந்
தேனைச் சிவக்க வருமொழி யீரென்கொல் செய்வதுவே 88

குறியுரைத்தல்

யூகங் குதிக்கும் பொழில்நெல்லை நாதருயர் சிலம்பில்
மாகஞ் செறிவட செந்தீயை மோதி மறைத்துவின்றென்
சோகந் தவிர விழிதுளி மாரித் துளிசொரிந்து
மேகந் தலைப்படு மேதமி யேனுரை மெய்ப்படவே 89

நெஞ்சோடு புலம்பல்

யோகஞ் செறியர னெல்லையஞ் சார லொளிருமின்ப
போகஞ் செறியும் புணர்முலை யாளுக்குப் பூங்கமலத்
தாகந் திருமனைச் செங்கைகள் காந்த ளமுதமொழி
நாகஞ் செறிபட வல்குல்கண் டாயினி நன்னெஞ்சமே 90

போய் பாராட்டல்

வழுதிகண் டாலிக்கும் வேயில்வந் தோர்நெல்லை மால்வரைத்தே
னுழுதுவண் டாலிக்குமென் குழ லீரிமை கோட்டிச் சற்றே
பழுதுகண் டாமுன் னிடையாகச் சற்றும் படைத்திலனே
யெழுதிலுண் டாகிலுண் டாமில்லை யாகி லிடையில்லையே 91

விழியுங்குலமும் வேறுபடுத்துக் கூறல்

வார்துணை யாய முலைக்குத் துணையானது வாள்பசலை
நீர்துணை யாய துமக்குங்கண் காள்நெடுஞ் சூலமன்றிப்
போர்துணை யாய மழுவாளர்நெல்லைப் பொருப்பில் முன்னீர்
யார்துணை யாந்துணை யாமன்பர் போனதென் னுருயிர்க்கே 92

கார்கண்டு கழிபடருரைத்தல்

விடஞ்சூற் கொளுங்கண்டர் நெல்லையிலே கடல் மேய்ந்துவயிற்
றிடஞ்சூற் கொளுங்கொண்டல் முற்பட்ட தால்முத்த
[மீதுணையாத்
தடஞ்சூற்கொளுஞ்சங்க மேவங்க மேமுடத் தாழைச்செங்காய்க்
குடஞ்சூற் கொளும்பொழி லேயன்பர் வாய்மைக் குறிபொய்த்
[த்தே 93

என்னேயுள்ள மிசையாதென்றல்

வீழ்ந்தா தரத்துடன் மால்தொழு வோர்நெல்லை வேலைவலை
சூழ்ந்தாலு மீனுக்குத் தோணிவிட் டாலுமெய் சூட்டுமுத்துக்
காழ்ந்தாலு மாலையை நின்று கொடுத்தே யடிக்கடிமண்
டாழ்ந்தாலு மில்லைகொல் லோமட வாருக்குத் தண்ணளியே 94

பாங்கியோடுரைத்தல்

வென்றாலுஞ் சூலத்தர் நெல்லையில் மாவில் கரியகுயில்
நின்றாலும் வெள்ளை விடிநில வாலு நினைக்கினமக்
கொன்றாலும் நல்லவே யன்பர்

.... 95

மங்கையைப் பழித்தல்

வேனலந் தோயுங் கரத்தால் வருட விடவிலிந்தக்
கானலந் தோயு மெமக்கன்ப ரேகலை யால்வளைத்த
கூனலந் திங்கட் ....
பானலந் தோய்முலை காளுங்க ளோடென்ன பற்றவர்க்கே 96

களிற்றினை விரும்பல்

வைவேல் நெடுங்கண்ணி பங்காளர் நெல்லையில் வாவியிற்பூக்
கொய்வேலை தன்னிற் கொடியிடை யீர்குஞ் சரங்குழைகொண்
டெய்வேலை யாவிவர்க் கிப்போது மிங்கினி யெய்யவில்லுங்
கைவேலும் வாளும் பெற்றுலென் செய்யார்நந்தங் காதலரே 97

கண்ணூறு சாத்து மரியயன் போற்றுங் கழைமுத்தர்க்குப்
பண்ணூறுஞ் சொல்வருக் கக்கோவை தன்னைப் பரிவுடனே
வெண்ணீ றணியம்பி காபதி வீரையில் வேதியன்சொற்
றெண்ணூறு மெட்டும் படிப்பார் தமக்கில்லைத் துன்பங்களே 98

முற்றிற்று.

உ

சிவமயம்

சித்தரந்தாதி

மூலமும் உரையும்

தஞ்சை

தமிழ்ப்பேராசிரியர் திரு. L. உலகநாதபிள்ளையவர்களால்

பரிசோதிக்கப்பெற்றது

வெளியீடு—௰௨

கூட்டுறவுப் பதிப்பகம்

தஞ்சை

—

1936

முகவுரை.

இந்நூல், தஞ்சை மராட்டிய மன்னருட் சிறந்தவரான மாண்பு மிக்க—சரபோசி மன்னர் பெருமானது 'தஞ்சைச் சரசுவதிமால்' என்ற நூல் நிலையத்துள், பக்கத்துக்கு ஐந்து வரிகளாக எழுதப்பெற்ற இருபது ஏடுகளோடுகூடிய, 129-ஆவது எண்பெற்ற ஓலைச் சுவடியாக உள்ளது. இதன் ஆசிரியர் பெயர் 'சித்தர்' என்பதாகும். அஃது இந்நூலின் 'மூலையின் வாழும் கிழவியை' எனத் தொடங்கும் செய்யுளில் 'ஆகமம், வேதாந்தந் தன்னில் விரித்த அத்தங் கோலி முன் சித்தருரைத்த வந் தாதியை', எனவரும் அடியால் அறியப்படும். சித்தர் என்பவரது ஊர், மரபு, முதலியன தெரிந்திலது.

இந்நூல் கலித்துறையால் அமைந்த இருபத்திரண்டு செய்யுட்களாலாயது. இது திருவானைக்காவில் கோயில் கொண்டருளிய திரு அகிலாண்டநாயகியம்மையின் தோத்திரமாகவுளது. 'குத்தரந்தாதி' எனும் செய்புளின் 'அத்தரந்தாதி அகிலாண்ட நாயகியம்மையுட, சித்தரந்தாதி இருபத்திரண்டையும் செப்பிடவே' என்ற அடிகளான் மேற்குறித்தன உணர்த்தப்படும்.

இதற்கு உரைசெய்தவர் இன்னாரென்பது தெரியவில்லை இந்நூல், 'உருத்திரோற்காரி-ஹூ ஆடி-மீ உ௰-உ சித்தரந்தாதி உரையுடனேகூடி செம்பரம்பாக்கம் கறுப்பமுதலியார் புத்திரன் ஆறுமுகம் எழுதி நிறைந்தது முற்றும். வேலுமயிலுந்துணை சுப்பிரமனியசுவாமி இரக்ஷிக்கக்கடவர்'.

கரியுரி யாடைக் கடவுளுங் கார்நிற வண்ணங் கொண்ட
அரிபிர மாதிநின் னூசனக் காலகி லாண்டம் பெற்ற
திரிபுரை யம்மை சிவகாம சுந்தரி சிற்றடிக் கீழ்ப்
பரிபுர சில்லொலி யாயே கிடக்கும் பகி ரண்டமே

என முடிவு பெறுகிறது.

சித்தரந்தாதி

பாரடையப்பதந் திக்கடை யப்பரி வட்டந் தொங்கல்
காரடை யக்கொங்கை வெற்படை யக்கடுக் கைச்சடைக்காட்
டூரடை யப்பகி ரண்டத்தி னெல்லைவல் லிக்குகாந்த
நீரடை யத்தண் ணளிதிருக் கோயிலென் னெஞ்சகமே

(என்பது.) வல்லிக்குப் பூமிமுழுதுஞ் சீபாதம், திக்கு முழுதும் திருப்பரிவட்டம், மேக முழுதும் திருமாலை, மலை முழுதும் கொங்கை, பரந்த பகிரண்டத்தின் முடிவுமுழுதும் திருக்கொண்டைச் சடைக்காடு, உகாந்த நீரடைய...............படைத்தாகிய கருணையித் தன்மையே பெற்றதாயினும் திருக்கோயில் என்னெஞ்சகம் என்றவாறு. வல்லிக்கென்ற சொல்லை எல்லாவற்றோடுங் கூட்டுக. ஊரென்றதனைப் பரந்த சடைக்காடென்றுரைப்பினு மமையும். பாரடையப் பதமென்றார், எல்லாப் பொருளையும் விளையும் வண்ணஞ் செய்தலான். திக்கடையப் பரிவட்டமென்றார், வளையச் சூழ்ந்துகிடத்தலான். காரடையத் தொங்கலென்றார், பன்னிறம்பெற் றொழுக்கத்தினோடு குளிர்ச்சியையுடைத்தாதலான். வெற்படையக் கொங்கையென்றார், பெருமையினான். பரந்த பகிரண்டத்தினெல்லை யடையக் கடுக்கைச் சடைக்காடென்றார், பொன்னிறம் விளங்கி யளவிறந்த வந்தம் பெறுதலான். உகாந்த நீரடையத் தண்ணளியென்றார், மிகுதியோடு குளிர்ச்சியை யுடைத்தாதலான். இந்தப் பிரளையத்தைத் தண்ணளி யென்றாராகலின், ஊழித் தீயாற் பல்லுயிர்களும் வெந்து பாழ்படுவதன் முன்னம், பூமி யந்தரம் சுவர்க்கம் புதையப் பிரளையங் கோக்கும் வண்ணஞ்செய்து, பல்லுயிர்களையும் தன்னுடைய திருவடிக்கே சேர்த்திக்கொண்டு, அக்கூடு சங்காரமான பின்பு, மீட்டுந்தோற்றும் வண்ணஞ்செய்து தண்ணளி செய்யா நின்றவாறு போலுங் கருத்து. திருக்கோயி லென்னெஞ்சகமென்றார், கருவிகளிற் பரிதவின்றி யொருங்குதல் பயப்பின் என்னுடைய நெஞ்சகமே யகமாகு மென்றவாறு. அடைய

என்பதற்கு வல்லிக் கவ்விடங்கட் கேற்ற செயலடுத்து நின்ற வப்பொருள்கள் உகாந்தத்தின்கண் அவ்விடங்கடோறும் அடையுமென ஒருபொருட்டோன்றியவாறு கொள்க. (1)

நெஞ்சக் கனகல்லு நெக்குரு கப்புக்கென் னுண்ணிறைந்த
வஞ்சக் கனகள்வி யேயென்னம் மேமருங் குங்குவடு
மஞ்சக் கனகனக் குந்தனத் தாய்நின் னடிக்குடைந்த
கஞ்சக் கனக மலர்சுமந் தேநின்ற காரணமே

(என்பது.) சிறிதுங் கசிவில்லாத நெஞ்சமான பாரியான கல் நெகிழ்ந்துருகும் வண்ணம் செய்து உட்புகுந் தொன்றுனுங் குறைவின்றி நிறைந்த வஞ்சகத்தால் மிகுந்த கள்வியாகிய என தம்மே நின்மருங்குலு மலைகளும் அஞ்சும் வண்ணம் மிகவும் மிகவும் வளரா நின்ற தனங்களையுடையாய்! நின்னுடைய திரு வடிகட்குப் பொற்றாமரைமலர் உவமையன்றித் தாழ்ந்துதானே சுமந்துகொண்ட காரணம் யாதே? அதன் கணிருத்தல்வேண் டிற்றென்றவாறு. வஞ்சகக் கள்வியென்றது, நெஞ்சத்துட் புகுந்திருத்தலானும் அம்மைதிருவடியையும் செயற்பாட்டையும் அளப்பரிதாகிய மிக்க மாயத்தினுற் கூறியவாறு. நெஞ்சக் கனகல்லை யுருக்குதலால் எனினுமமையும். பாரமாக நின்ற தென்று மருங்கு லஞ்சவும், பொரா நின்றதென்று மலைகளஞ்ச வும் மிகவும் வளரா நின்ற தனமென வியையும். அடிக்குடைந் தன மென்றுபாடமாயின், அடிக்குடைந்து போகிய பொற் றாமரை மலர் விரும்பிச் சுமந்து கொண்டே நின்ற வாற்றான், இதுவுமொரு காரணமாதே யென்றுரைக்க. (2)

காரண மென்னென் றறிகின் றிலங்கட லும்மலையு
மாரண மும்மகி லாண்டமு மண்டரண் டம்பொதிந்த
பூரண மும்மக முஞ்சக மும்புற மும்புறத்து
வாரண மும்பெண் பிள்ளைவிளை யாடு மணற்சிற்றிலே

(என்பது.) கடல்களும், மலைகளும், வேதங்களும், அகிலாண்டங் களும், அந்த வண்டங்களைப் பொதிந்த பேரண்ட பூரணமும், அது முதலாகிய அண்டத்தகங்களும், அவ்வண்டங்கடோறும் உளதாய எல்லாப்பொருளும்; இந்தப் பேரண்டத்திற்குப் புறம்

பும், புறத்தின்கண் அதற்கடையாக நிற்கும் தெய்வயானைகளும் வாலசத்தி விளையாடுகின்ற மணற்சிற்றிலாதல் என்ன காரணமென்றறிகின்றிலம். ஏறுமகாப்பிரளைய சலதிப் பெருங்கடல் அவ்வண்டங்கட்குச் சத்த சமுத்திர மென்கின்ற கடல்களும் அவ்வண்டங்களின் மாமேரு ஏழ்குல பர்வதங்கள் சக்கரவாளகிரி என்கின்ற மலைகளும், ஈறிலின்பப்பயனாகிய இறைவன் றன்மை கூறுகின்ற நாலுவேதங்களின் ஞானபாதமாகிய ஆரணங்களும், அதலமுதலாகிய பதினாலுலகங்களையும் பொற்கோளகையாகப் பொதிந்துகொண்டது அண்டம். அண்டமென்பது முட்டைதனை யணுவாகக் கொண்டு பெருங் கடலிடத்து மிதக்கின்ற அகிலாண்டங்களும், இதில் ஓரண்டத்தின்கட் பொருந்திய முப்பத்து முக்கோடி அண்டரண்டங்களில் அவ்வண்ணமே நிறைந்த அவ்வண்டங்களனைத்தையும் அந்தப் பெருங்கடலதனையும் உள்ளடக்கப் பொதிந்து மகாப்பிரளைய சலதியின்கண் மிதக்கின்ற பேரண்ட பூரணமும் இந்தப் பேரண்ட முதலாக அதற்குட்பட்ட பலவண்டத்தகங்களும் அவ்வகங்கடோறும் உளதாகிய பிராணனொடுங்கி மவுனமடைந்த தாவரங்கள் முதலாக அற்ப சீவனு யூர்வன ஈறுக எண்பத்து நான்கு நூறுயிரமாகி ஒன்றுக்கொன்று பேதித்து வேறுபட்ட சகமும், அந்தப் பேரண்டத்திற்குட்படாத அகண்டப்பெருவெளியாகியபுறமும், அப்புறத்தின்கண் இந்த வண்டத்திற் கடையாகச்செய்த கம்பத்தின்கண் நிற்கின்றதெய்வவாரணங்களும் இங்ஙனம் முதலாகிய எல்லாப்பொருளும் வாலசத்தி விளையாடுகின்ற மணற்சிற்றிலாதலான், மேற் பேரிற் கண்ணுவாடல் எத்தன்மையாகவற்றோ இதென்ன காரணமென்னென்றறிகின்றிலம் என்றதிசயப்பட்டவாறுபோலுங் கருத்து. (3)

சிற்றிடைக் கொல்கி நுடங்குந் திருவயிற் றுளொருத்தி
பெற்றெடுக் குந்திறற் பிள்ளைகள் மூவரம் மூவரையுங்
கற்றிடச் சொன்ன தொழிலொரு மூன்றவ ரிற்கடைக்காற்
செற்றிடச் சொன்னபிள் ளைக்கவ ளேயம்மை தேவியுமே.

(என்பது.) ஒல்கிய நுடங்குகின்ற சிறிதாகிய இடைக் கிடைந்த திருவுதரத்தையுடையாள் ஒருத்தி பெற்றெடுத்த திறலினை

யுடைய பிரம்மா விஷ்ணு ருத்திரன் என்ற பிள்ளைகள் மூவர். அந்த மூவரையும் கற்கச் சொன்ன தொழில், சிருட்டி திதி சங் காரமென்னுந் தொழில் மூன்று. அவருள் காலக்கடையின்கண் சங்கரிக்கச் சொன்ன அந்த ருத்திரனை பிள்ளைக்கு, அவளே தாயும் தேவியும் என்றவாறு. எல்லாப்பொருளும் விளைவ தற்குச் சத்தி சிவத்தொடுங் கூடுதலால், அவளே தேவியாகியும், பொருளை அழிப்பதற்கு சிவன் சத்தியின்கண் தோன்றுதலால் தாயாகியும் நின்றனள் ஒருத்தியாகியவாற்றான் என்றவாறு. ஒருத்தி என்பது, ஊழிக்கண் எல்லாப்பொருளும் ஒருருவா யவள் ஆதலான்; ஒப்பில்லாதவள் எனினும் அமையும். (4)

தேவியென் றன்னைப் பெறுவார் விடமுண்டு தெட்டுண்டநா
ளாவியந் தண்குமு தத்தமு தூற லளித்திலையே
ளோவியம் போலிருந் துள்ளே விழித்துணர் வற்றிருப்பா
ராவியங் கோயிலுள் ளாயகி லாண்டமென் னுவதுவே

(என்பது.) கருவிகளையிறந்து நினைப்பு மறப்புமின்றி ஓவியம் போலச் சமாதியடைந்து ஞானநாட்டத்தால் உள்ளேநோக்கிப் பரமவெளியின்கண் உற்றிருக்கின்ற ஞானயோகிகள் தமது ஆவியே பழைய கோயிலாக உடையாய்! உன்னைத் தேவியாகப் பெற்ற விடையோன், விடத்தை அயின்று தெள்மைப்பட்ட காலத்தின்கண் குளிர்ந்த குமுதம்போன்ற அதரத் தமுதூறலை அவற்கு ஆவியாக அளித்து அவ்விடத்தை மாற்றுவிடின், அகி லாண்டப் பல்லுயிர்களும் என்னாகும் என்றவாறு. ஓவியம் போலிருந்தென்பதற்குக் குறித்தபொருளைநோக்கி மனமாய்ந்து இமையா நாட்டத்திருத்தலாம் என்றுரைப்பாரும் உளர். (5)

வேதாந்த மந்தஞ் சகல கலாந்தம் பொதிந்தவிந்து
நாதாந்த நாயகி யேயென் னம்மேயுன் னயனமென் னுங்
நாதாந்த காரக் கடலதொக்குங் கருணையின்றே லுலகுக்
கார்தான் தலைவ ருகாந்த காலத் தருங்கனற்கே

(என்பது.) வேதங்களினது அந்தம் வடிவாகியும், பலகலைகளின் அந்தம் பொதிந்த விந்து நாதாந்தத்தின் முடிவாகியும் நின்ற நாயகியே! எனதம்மே! யுகாந்தத்தின் கணதனது காலத்து

எல்லாவற்றையுஞ் சங்கரிக்கின்ற வடவாஅனற்கு, உன்னுடைய காதளவாகப் பிறழும் கரிய கடலென்னுங்கட் கருணை வெள்ளம் பரந்து மாற்றினல்லது உலகத்திற்கு வேறு தலைவர், ஆர்தான் இதற்கு நின்னையல்லதென்றவாறு. வேதாந்தம் அந்தம் என்றார், எல்லாப்பொருளையும் கடந்து நின்ற வேதங்களின் அந்தமாகிய ஓங்கார நாத முடிந்த சொல்லிறந்து நின்ற பொருளே வடிவாதலால், சகல கலாந்தம் பொதிந்த விந்து என்பது, பல கலைப்பொருளின் அந்தம் பொதிந்த விந்து என்பதோர்பொருள். நாதாந்த நாயகியே என்பது, விந்துவைக் கடந்த நாதத்தின் முடிவாகி நின்ற பராசத்தியெனக் கருத்து. எல்லாவற்றையும் அடுகின்றஊழித்தீக்கு, உன்னுடையகட்கடலான் மாற்றுவிடின், உலகத்திற்குத் தலைவராகத் திருமேனிச் சட்டை சாத்தி இருக்கின்றவர் ஆர்தான்; அந்தச் சங்காரமூர்த்தி நிஷ்களம் அல்லதுண்டோ எனினும் அமையும். ஆரதான் என்பது ஆர்தான் என்றிடைக் குறைந்து நின்றது. (6)

கனற்றடத் துள்ளத் தடமலருங்கம லத்தமலை
யனத்தடத் தண்ணென்ற தொத்து நிற்பாளகி லாந்தரத்துப்
புனற்றடத் தண்டம் புகுவன போவன வாகிநிற்கும்
வினைத்தடப் பொன்னுந்தி தாள்வந்தி யாமுன் வெளிநிற்குமே

(என்பது.) அந்தணர் வேள்விக்கண் வேதத்தினுன் எழுப்பிய அக்கினிச் சுடரினும் உன்னிய மெய்யடியார் நெஞ்ச வாவியின் மலரும் தாமரை யுழியினு மொப்புரைக்கின்ற அமலை அன்னம் பொருந்திய தாமரைத் தடாகத்திற்றண்ணெனவு போன்று யாவுக்குந் தண்ணளி செய்து நிற்பா ளகிலமு முடிவாமிடத்து மகாப்பிரளைய சலதியின் மிதக்கின்ற பேரண்ட முதலாகிய அண்டங்கள் வந்தொடுங்குவன மீட்டும் போவன வாகாநின்ற பெரிய வினைப்பாடுளதாய் அழகிய உந்தியையுடையாள் திருவடிகளெம்மைப் புதிதாக ஆட்கொண்ட முறைமையால் இன்பம் நினைவதன்முன் தானேவந்து எமக்கு எளிவாகக் கட்புலனாகிக் கட்புலனாக்கி நின்றருளுமென்றவாறு. கனற்றடமென்பதற்கு யோக சீலர் மூலாதாரத்தின்கண் ஓங்காரத்தெழுப்பிய அக்கினிச் சுடர் எனினுமமையும். பெருமையிருந்தபடி, பேரண்ட

முதலாகிய பலவண்டங்களையும் ஒடுக்கவும் பெறவும் வல்லவளா யிற்று. சிறுமையிருந்தபடி, சருவப்பிராணிகளிடங்களினும் உளதாயினள். அருமையிருந்தபடி, மனோவாக்குகளுக் கெட் டாத தன்மையளாகி அகண்டத்தோடுகூடி நின்றனள். எளிமை யிருந்தபடி, ஏழை நெஞ்சத்தான் வந்திப்பார் தமது முன்னின் றருளுமாயிற்று. கருணையிருந்தபடி, எவ்வுயிர்க்கும் தாமரைத் தடாகம் போன்று குளிர்ச்சியை யுடைத்தாயினள். இத் தன்மையினிருந்துள்ள மகாசத்தி திருவடிதனை உணர்வோடு வழுத்தா முன் வெளிநிற்குமே என்றவதனாற் சிறிதும் வெளி நில்லாளெனினுமாகும். ஆதலால் இவ்வாறு உள்ளியும் அறிதி யோளே என்பது போலுங்கருத்து. தாமரை என்றொருசொல் வருவிக்கப்பட்டது. (7)

நிற்பன யாவையு மாகிநிற் பாய்நின்னி டத்தகலங்
கற்பன வல்லபொன் னேயென்னம் மேநின் கமலபதச்
சொற்பனு வாய கவிகற்பி னுங்கவி தல்லவர்க்கு
விற்பன வாயவென் னேயறத் தாழ விலைமதித்தே

என்பது யாவையும் நிலைபெறும் பொருளாகி நிற்பாய்! பொன் போல்வாய்! எனதம்மே! நின்கண் உண்டாகிய சொல்லிறந்த பெருமையை யாவரானும் கற்று முடிவதன்று. ஆயினும் இயன் றது நின்னுடைய பாதத்தைத் தோத்திரச் சொல்லாகிய பாக் களைக் கற்றுய்கின்ற வதனினும் வறிதேது வாக்கினையுடையார்க் குப் பாக்களை விலைதாழ மதித்து விற்பனவாகி நின்றன னெய்ய னுக்கென்றோ இதுவும் நின் திருவுளச்செயலானதே என்றவாறு. நிற்பன யாவையுமாகி நிற்பா யென்பது எல்லாப் பொருளும் ஒழியாது நின்று விளையும் வண்ணம் அவற்றுக் குட்பொருளாகி நிற்பா யென்றவாறு. (8)

மதியா யெறிக்கு முருவ னிலாமரு மாலையிருட்
பொதியா யெறிக்கு மளகா டவிபுவ னதியந்தம்
பதியா யெறிக்குமுதையா தவரெழு பாரின்மகோ
ததியா யெறிக்குஞ் சகதண்ட மேழுக்குந் தண்ணளியே.

என்பது புவனத்துக் காதிபதியாகி யவள் தனது முறுவலினது

ஒளி சந்திரகிரணம் போன்று விளங்கா நின்றது. குழற்காடு மணமுடைத்தாகிய மாலையையும் இருளையும் பொதிந்துகொண்டு கருமையொளி விளங்கா நின்றது. திருவடிகள் கீழேழு பூமியினு மேவி ஆதித்திய கிரணம்போன்று அவ்விடத்து இருளையகற்றி விளங்கா நின்றது. தண்ணளி மற்றையேழு லோகங்களுக்கும் பலவண்டங்களுக்கும் பெருங்கடல்போன்று விளங்காநின்றது. புவனுகு என்ற சொல்லை எல்லாவற்றோடுங் கூட்டுக. இவ் விறைவி தனது முறுவல் சந்திரோதையம் காட்ட அளகாடவி இருளைக் காட்டத் திருவடிக் கமலங்களினது ஆபரணத்தொளி ஆதித்திய கிரணம் காட்டத் தண்ணளி பெருங்கடலைக் காட் டிற்றென இயையும். (9)

தண்ணளிப் பான்முகிட் கொங்கை சுரந்து தனிக்குழவி
மண்ணளிப் பாகபகி லாண்டஞ் சுடாவட வாவனலின்
விண்ணளிப் பாரழித் தாரும் விடாய்கெட மெய்க்கருணைக்
கண்ணளிப் பாயென் னம்மேவினை பேனையுங் காத்தருளே

(என்பது.) அகிலாண்டங்களையும் வடவாவனலாற்சுட்டவற்றுள் எல்லாவற்றையும் அழித்து விண்ணென்கின்ற வெளியை நிலை பெறத் தருகின்ற சங்கரனது சங்காரத் தாண்டமாடிய விடாய் கெடும் வண்ணம் மெய்ம்மையாகிய கருணைக் கண்ணாற்றண்ணளி செய்யா நிற்பாய் முகிழ்த்த கொங்கைகள் தண்ணளி யென் கின்ற பால் பயந்து ஒப்பில்லாத விளையு மண்ணுகை மீட்டும்தந்து அதனுள் எல்லாவற்றுக்கும் அன்புசெய்து வளர்க்கின்ற எனது அம்மே நின்னைச் சிறிதும் நினைத்தல் செய்யாத தீவினைகட்குரி யேனையும் இனிப் பிறவா வண்ணம் நீயே காத்தருள்வாயாக என்றவாறு. சங்காரத்திலே மடிந்துபோக மீட்டும் பயந்து வளர்த்தமையாற் குழவி மண் என்றார்; மூப்பின்றி யிருத்தலா லெனினுமமையும். (10)

காப்பார் படைப்பா ரொழிப்பார் கனற்று மரைக்கரத்துப்
பூப்பா ளகிலாண்ட முங்கொண்ட போதப்பொலன்

[சுடர்போய்ச்

சேர்ப்பான மேருவிற் சேர்ப்புண்ட வண்டஞ்செஞ்
[னூலின்முத்தங்
கோப்பார் தனிவடம்போற்கொங்கை மேற்பொலிகோலத்தளே.

(என்பது.) உலகங்களைப்படைக்கின்ற பிரம்மாக்களும் அவற்றை இரட்சிக்கின்ற விஷ்ணுக்களும் மாண்டொழியும் வண்ணம் கைத் தாமரையின்கண் வடவாவனலைப் பொலிவிப்பாள் அகிலாண்டங் களையும் சங்கரிப்பதாகக் கோட்பாடு கொண்ட காலத்துக் கட் புலனாகிய ஒளியினையுடைய சந்திராதித்தர் போய்ச்சேருதற் கான மகமேருவில் கோவைப்பட்ட அண்டங்கள் சிவந்த நூலில் முத்தம் கோக்கின்றவர் தனி வடம்போல் கொங்கையின் மீதே பொலிவுபெற்ற கோலத்தையுடையாள் என்றவாறு. சங்காரத் திலே மடிவதான காலத்துக் கிருபையினால் அண்டங்களைக் கோவையுடனே தனத்திலடைத்துக் கொண்டது செஞ்னூலிற் கோக்கின்ற முத்துவடம்போலும் என உவமை கூறியவாறு (11)

கோலத் தனகள பக்கடி னத்துங்கக் கொங்கைவஞ்சி
நீலத் தனகள ளுகத் திறைவி நிறைமலரோ
னேலக் கடல்கொளு முந்திபல் லூழி யொருநிமிட
காலத்த னகத்த ளேபுறத் தோம்வெய்ய காலனையே.

(என்பது.) பொற்கோலமான துத்தியையும் குங்குமச் சேற்றினை யும் கடினத்தையும் பெருமையும் பொருந்திய தனங்களையுடைய வஞ்சி நீல நிறமாகிய கண்டத்தையுடையவன் ஆகத்தின்கண் உண்டாகிய இறைவி, நிறைந்த தாமரைமலரின் கட்டங்கிய பிரம்மா இறந்து ஒலிகடல் பிரளையங் கோவா நின்றதோர் ஊழி யில் கழிந்து பேரண்டம் சங்காரப்படும் காலத்தினும் என்னு டைய நெஞ்சத்தில் நீ இருத்தலாலே வெய்தாயுள்ள காலனையும் புறங் காண்போம் என்றவாறு. நிகழ்காலத்தின்கண் எஞ் ஞான்றும் ஒழிவறக் கண்டிருத்தலால் இவ்வாறு பேரண்டம் சங்காரப்படும் காலத்தினும் நீலகண்டனதாகத்தினுண்டாகிய இறைவீ அஃவனோடு என் ஆகத்தின் அகத்திருத்தின் அகத் திருத்தலால் வெய்தாயுள்ள காலனைப்புறங்காண்பேம் என்றார்.

கால்கொண்டு கட்டிக் கனல்கொண்டு சுட்டுக் கலைமதியின்
பால்கொண் டிறக்கி யுள்ளேபணி யாப்பர மானந்தமே

மேல்கொண்டு நீயென்று நானென்றும் வேறின்றி விம்மிவிம்மி
மால்கொண் டிருப்பனம் மேயறி யேனிந்த மாயத்தையே

(என்பது.) பிராணவாயுவினலே சீவான்மாவைக் கட்டுப்படுத்தி மூலதாரத்தில் அக்கினியால் சந்திரமண்டலத்தை வெதுப்பி அதன்கண் உருகி எழுகின்ற அமுதத்தை எனதுள்ளிறக்கிக் கொண்டு அதற்பின் மாயாப் பரமானந்தக் களிமேல்கொண்டு நீ என்றும் நான் என்றும் வேறுபாடின்றி இரேசக பூரக கும்பகத்தால் பிரமி மால்கொண்டு இருப்பனம்மே அறியேன் இந்த மாயத்தை என்றவாறு இதனுடனே சிலசொல் வருவித்துரைக்கப்பட்டது. மதன்மாயத்தையே என்னும்பாடம் கால் கொண்டு கட்டிக் கனல்கொண்டு சுட்டுக் கலைமதி என்பதற்கு மனத்தொடு வாயுவாதலால் அந்த வாயுவாதலால் அந்த வாயுவினற் சந்திர மண்டலத்தைச்சுற்றி வலித்ததனை மலாக்கினியாலே வெதுப்ப வென்றுரைப்பாருமுளர். இவ்வக்கினியை ஓங்காரத்தாலுன்னி அபான வாயுவினல் எழுப்பிச் சுழு முனையின் நாட்டி அதனை வெதுப்பி என்றுரைப்பாருமுளர். சீவாத்மா பேரின்பம் பயக்கும் பரத்தின்கணுயர்த்தி ஒருவாறறியப்படுத்தியிருத்தலால் நீயென்றும் நானென்றும் வேறின்றி யென்ருர். ஆனந்தக் களியால் மனமாய்ந்து உணர்வொழிந்த இளமையான் இவ்வாறு கூறினரெனினுமமையுமே இவ்வாறு கூறியதனல் ஆங்காரமாகுமென்று அறியேனிந்த மாயத்தை என்ருர். வியாத்தியொடு தொக்கு நின்று மனங்கெட்டு உணர்வொழிந்த இளமையான் இவ்வாறு கூறினர் எனினுமமையும். மால்கொண்டிருத்தல் யாதொன்றும் அறியாதிருத்தல். (13)

மாயிலென் மாயா விடிலென் வடிவமென் னவியுநின்
கோயிலு நீயுமன்றேயகி லாண்ட குழுவுக் கெல்லாந்
தாயினு நல்ல தனியுறவே சைவ நாயகியே
யாயினு மாவி விடும்போது யானுன் னடைக்கலமே

என்பது அகிலாண்டப் பல்லுயிர்ச் சமுகங்கட்கெல்லாம் தாயினும் இனிதாகிய தனியுறவாயுள்ள நாயகியே என்னுடைய வடிவு நின்னுடைய கோயிலும் எனதாவி நீயேயாயினும் நீ யிதனை

விட்டு நீங்குமிடத்து என்னுயிர் உன்னடைக்கலமாதலின் இவ்வியாக்கை மாய்ந்தென்கொல் மாயாவிடிலென்கொல்என்றவாறு. தனியுறவு-ஒப்பிலாதவுறவு. (14)

அடைக்கலம் புக்கன வுந்தியி லண்டமைபூ தங்கொங்கை
புடைக்கலம் புக்கன சந்திரா தித்தர்பைம் பொற்சரத்துப்
படைக்கலம் புக்கன வெற்பெட்டு மம்மை பதச்சதங்கைக்
கிடைக்கலம் புக்கன புக்கொளிப் பாருக் கிடமில்லையே

(என்பது.) ஊழியின் இறுதியின்கண் அம்மையுடைய உந்தியில் அடைக்கலமாக அடைந்தன அண்டங்களும் அதனுட் கருவாய பஞ்ச பூதங்களும், கொங்கைக் கணிகலங்கட்கு முத்துமாணிக்கங்களாக அடைந்தனர் சந்திராதித்தியர். பசும்பொன்போலும் கரத்தின்கட் படைக்குக் கலப்பை யடைந்தது. திருவடிகளிற் சதங்கைகளினது உட்பணியாக அடைந்தன அட்டகுலபர்வதங்கள் முதலாகிய பலமலைகளும், இவ்வாற்றாற் புகுமது அடைவதற்கு யாவர்க்கும் இடமில்லையாகும் என்றவாறு. அண்டத்திற்குள்ளாகியவற்றை வேறாகக் கூறியவதனுன் அண்டம் அவற்றிற்குப் பிறந்தவாறு போலக் கருத்து. கொங்கைப் புடையென்பதற்குப் புடைத்த கொங்கையெனினும் அமையும். (15)

இல்லமை பின்றள்ள நாணமுன் றள்ள விரவுதள்ள
நில்லாமை யுநின தேயரன் சென்னியி னின்னுதனே
ரல்லா மதிதோய்ந் தருமந்த செம்மையெல் லாம்வெளிறிப்
பொல்லா மையு மழகா பொலஞ் சேவடி பொற்கொடியே

(என்பது.) அரனதுசென்னியின்கண் மேவிய நின்னுடைய நுதல்போல் உவமையில்லாமைத் தாழ்ந்த மதிதோய்ந் தழகிய செம்மை முழுதும் வெளிதாகிப் பொல்லாததாயும் அழகாகியிருக்கின்ற பொற்சேவடியுடைய கொடியே உணவு முதலாகிய பலவற்றினும் மனஞ்செலுத்தி அவ்வழியே வறுமை பின் தள்ளிப் பெயர வாங்கி யாவர் கடைக்கட் செல்வதென்று புத்தியொத்தவழியே நாணுதல் முன் தள்ளித்தரிக்க அதனையுமறுத்து ஆசை மிகுதியான் இரப்பு முன் தள்ள இதுவே நெறியென்று நில்லாது போகிய ஆங்காரமும் நின்னுடைய திருவுளச்செயலே

என்றவாறு. மதிதோய்ந்து சேவடி வெளிறியதென்றார்; அரன் திருமுடி வணங்குதலால் வறுமைக்கிரத்தல் துணையாகி நாணாத வில்வழி சிறிதும் நில்லாது அலம் வருகின்ற இதுவும் நின் செயலேயென்று போக்குக் கூறினார். (16)

பொற்கொடி போலு மிடைவல்லி கோத்துப் புருவமென்னும்
விற்கொடி யாற்சைவ யானை யணைத்தவிந் துப்பிடியே
கற்கொடி யேனெஞ் சுருகக் கரைத்தகள்வி நின்தாட்
சொற்கொடி யேன்துதிக் கப்பெற்ற பேற்றையென்
[சொல்லுவதே.

(என்பது.) அழகிய கொடிபோலும் இடையாயது விலங்கு போன்று பெயராது பூட்டி வில்லென்னும் புருவக்கொடியதனால் சைவக்களிற்றைப் பிணித்து நின்கட் சேர்த்திக்கொண்ட விந்துவாகியே பிடியே கொடியேன் தனது கற்போன்ற நெஞ்சத்தை உருகும் வண்ணம் கரைத்தல் செய்த கள்வீ, அன்றியும் நின்னுடைய திருவடிகளைச் சிறிதும் உள்ளி உரைத்தற்குக் கொடிதாயுளனென்றாலும் அன்பரிற் கூட்டாகத் துதித்தல் செய்யப் பெற்ற பேற்றினை என் சொல்லுவதென்றவாறு. கள்வீ என்பதற்கு முன்னுரைத்த துரைக்க. (17)

சொல்லுவ தேது மறியே னிதற்கோர் துவக்கறுத்து
நல்லுவ தேச மெனக்களித் தாய்நகை யாற்புரங்கள்
கல்லுவ தேபுரிந் தார்வன் கனவரைத் தோணெகிழப்
புல்லுவ தேயென் னம்மேபுன் னிலாவிடைப் போக்கறிந்தே

(என்பது) எனது அம்மை உன்றன் பெருமையைச் சொல்லு முறைமை சிறிதும் அறியாத என் தீப்பிறவிப் பிணிப்பின் ஓர் துவக்குமின்றி அற்று நீங்கும் வண்ணம் உன்னுடைய நல்ல மெஞ்ஞானத்தை அளித்தவளே! உன்னுடைய தனங்களைப் பொறுத்து நின்று முடியாத இடையினது போக்கை அறிந்திருந்தும், நகையாலே முப்புரங்களையும் கெடுப்ப வெம்மை புரிந்தவாது வலிதாகிய பெரிய மலைபோன்ற தோள்களானது குழையும் வண்ணம் புல்லுவதே. யீதென்ன பேதைமை என்றவாறு, இதற்கோர் துவக்கறுத்து என்பதற்கு இக்காலத்துடன் ஓராசைப்பிணிப்பற எனினுமமையும்! சங்கரன் தோள்களின் வலிப்பாட்டையும் அம்மை இடையினது மென்மையும் கூறினதாம். இல்லா இடை என்று பாடமாயின் கட்புலனாதற்கில்லா விடையென்க. (18)

போக்கறி யாவிடை கொண்டுகெண் கன்றிடப் பொங்குகொங்கை
மாக்கறி யாப்பொலன் மேனிப் பிடிமண வாளனுக்குத்
தூக்கறி யாதிரு நாழிநெல் லாற்சிறு சோறிடவே
தேக்கறி நிற்குமே யகி லாண்டந் தெவிட்டவுண்டே.

(என்பது.) பின்பு பாரமாகுமென்கின்ற விகாரமறியாமற் சுமந்து கொண்டு நிற்கின்ற இடையுடன்கண் கன்றுதல் செய்து அது வருந்தும் வண்ணம் மிகவும் வளராநின்ற கொங்கைகளின் மாறு பாட்டையறியாத பொன்போன்ற மேனியையுடைய பிடிபோல் வாள் தன்னுடைய மணவாளனுக்கு இரு நாழி நெல்லால் போதுமோ என்று சீர்தூக்குதல் செய்யாமல் அதனாற் சமைத்த சிறுசோறு இடாநிற்ப அகிலாண்டங்களும் தெவிட்டவுண்டு தேக்கிடா நிற்கும். இது எவ்வாற்றா னென்றவாறு, போக் கறியா விடை என்பதற்கு அந்நிலையைவிட்டுப் புடைபெயா அறியாத இடை எனினுமமையும். தன்னுடைய மணவாள னுக்குச் சிறு சோறிட்டு அமுது செய்விப்புழி அகிலாண்டத்திற் பலவுயிர்களும் தெவிட்டவுண்டு தேக்கிடா நிற்கும் என்றதனால் சர்வ பிராணிகளுக்கும் உயிர்க்குயிராகியும் உணர்வுக்குணர்வாகி யும் இயங்கா நின்ற ஒரு மூர்த்தியாதலான் ஒருமுதற்கு வேரின் கண் நீர்வார்க்கக்கிளைக்கும் வார்த்தவாறுபோலும் கருத்து. (19)

தெவிட்டித் தடங்கொண் டிளகிள வென்றுசிக் கென்றுவிம்மிக்
குவட்டைப் பொருத தனங்கொண்டென் னம்மைகொழு
[நர்நெஞ்சந்
துவட்டிப் பெறுமிரு நாழிநெல் லாற்சுற்ற மூட்டிமிக்க
தவிட்டிற் பிழைத்தது முப்பத் திரண்டு தவப்பசுவே

(என்பது) தனவடிவான் உள்ளது நிறைந்து பெருமையை மேவி மெய்போலு மிளகிக் கடினமாகிப் புடைத்து இத்தன்மைய வாகிய மலைகளை மாறுகொண்ட தனங்களைக் கொண்ட எனது அம்மை கொழுநனது நெஞ்சத்தைக்குழையும் வண்ணம்செய்து அவன்கண் பெற்ற இருநாழி நெற்கொண்டு சுற்றமாகிய சர்வப் பிராணிகளுக்கும் உணவாக்கி யதுவேயுமன்றி அதன்மிகுந்த தவிட்டால் முப்பத்திரண்டறங்களின் பயன் கோடின்றியிருந் தன. இதனை என் சொல்வதென்றவாறு. துவட்டி யென்றது உருக்கி என்பதுபட நின்றது. (20)

பச்சைக் கொடிவிடைப் பாகர்பொற் றோண்மதம் பட்டுப்படாக்
கச்சைப் பொருத கனதனத் தாய்கசி வொன்றுமில்லா
இச்சைப் படுஞ்செல்வர் பொல்லாமை கண்டுநில் லாமையினு
லெச்சப் படுகை நன்றே யருளாயினி வேணுமென்றே

(என்பது) விடைப்பாகர் தமது பொலிவுடைத்தாகிய தோள் களின் வலிமையோடு தாக்குதலிற் சிறிதும் சாயாது கச்சினை மாறுகொண்ட கனதனங்களை யுடைத்தாகிய கொடி போல்வாய் நின்னுடைய திருவடிகள்...........தராத்தி...........யின்றி யானி வையும் இச்சித்து..............கேட்டைக் கண்டு அங்கு உன்னரு ளின்மையால் அவர்கள் வெய்தான கருக்குழிக்கண் தோன்றுதல் நன்றன்றே. இனி அவர்கள் உய்யும் வகை வேணுமென்று நீயே அருள்புரிவாயாக என்றவாறு. பொற்றோள் மதம்பட்டுப் படாக் கச்சைப் பொருத கனதனம் என்பதற்குப் பொற்றோள் சிறிதுபடினும் அதனல் மதம்பட்டுக் கச்சைப்பொருத கனதன மென்று கூட்டியுரைப்பினுமமையும். (21)

வேணும் பெறவென் றிருக்கான வுள்ளத்து மேவிமிக்க
நாணும் கொடுமையு நல்குரவுஞ் செற்ற நாயகியே
சேணுந் தலமுந் திசையெட்டு மாகிய சிவசத்தியே
பாணு மறையும் பரவுந் திருவடிப் பாரடையே

(என்பது.) உரை வெளிப்படை.

(வேறு உரை) கதிவேணுமென்று கருதியிருக்கும் பெரியோர்கள் மனத்துள் விருப்பஞ்செய்து அவர்கள் வீரம் அச்சம் இழிவு வியப்பு காமம் அவலம் ரவுத்திரம் நகை என்னும் எண்வகை குண ஈனமும் நாணமும் கொடுமையும் நல்குரவும் நினது ஞான நாட்டத்தாலே நோக்கி பஸ்மீகரமாக்கிப் பெருங்களஞ்செய்து அவர்கள் உள்ளக்கோயிலுள்ளே எழுந்தருளியிருக்கும் நாயகியே! அகிலாண்டங்களெங்கும் நிறைந்து அகண்ட பரிபூரணமாய் போக்கு வரவு புணர்ச்சியற நின்ற பெருந்தனிப் பிரபைவீசும் சிவானுபவ சத்தியே! பாணாகிய இயலிசைகளாலும் மறையாகிய வாத்தியக் குழாங்களாலும் வேதாகம புராண சாத்திரங்களா லும் துதிக்கக்கண்டு திருவுளக் கருணை செய்திருக்கும் அம்மே! அடியேனையும் நினது கிருபா திருஷ்டியினாலே பார்த்தருளு வாயாக என்று அம்மை சன்னதியிலே குறைச்சலுடனே விண் ணப்பஞ் செய்தருளினர் என்றவாறு. (22)

மூலையில் வாழுங் கிழவியை முற்றத் தழைத்தவடன்
மேலுற வாகமம் வேதாந்தந் தன்னில் விரித்தவுரை
கோலிமுன் சித்த ருரைத்தவந் தாதியைக் கூறிநித்தம்
ஞால மிருப்பவர் பானம ணர்செல்ல நாணுவரே

குத்தரந் தாதிப் பிறவிக் கடலைக் குலைத்துநெஞ்சே
முத்தரந் தாதித் துறைபெற லாமுதி ராமுலையா
ளத்தரந் தாதி யகிலாண்ட நாயகி யம்மையுட
சித்தரந் தாதி யிருபத் திரண்டையுஞ் செப்பிடவே.

முற்றிற்று.